திங்கள்

மாசி . 8 அணா

தமிழ் நாட்டின் தலைசிறந்த சினிமாப்பத்திரிகை

பேசும் படம்

பெருமையுடன் அறிவிக்கிறது!

★

1-4-1956-ல் வெளிவரும் ஏப்ரல் இதழ் விசேஷ மலராக வெளிவருகிறது. 200-க்கு அதிகமான பக்கங்கள், டஜன் கணக்கான வர்ணப் படங்கள், விசேஷ கட்டுரைகள், வழக்கமான அம்சங்கள்.

விலை ரூ. 1-4-0

இத்தனை குறைந்த விலையில் இவ்வளவு உயர்தர மலர் இதுவரை நாங்கள் தயார் செய்யவில்லை என்பதை மட்டும் சொல்லி வைக்கிறோம்.

உங்களூர் ஏஜெண்டிடம் இப்பொழுதே பதிவு செய்து கொள்ளுங்கள். ரிஜிஸ்டர் தபாலில் பெறவிரும்புவோர் ரூ. 1-12-0 அனுப்ப வேண்டும்.

★

பேசும் படம் காரியாலயம்

சென்னை-2.

மனதிற்குகந்தது!
M.S
பட்டணம் பொடி
தயாரிப்பவர்:-
மோகன் கம்பெனியார்
த. பெ. நெ. 114, சென்னை-21.

விரைவில்
வருகிறது
பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கும்
vRv புரொடக்ஷன்ஸ்.....
பத்தினித் தெய்வம்
பாடல்கள்...தஞ்சை ராமய்யதாஸ்
சங்கீதம்..விஸ்வநாதன் & ராமமூர்த்தி
வசனம்.... K.M. கோவிந்தராஜன்
ஒளிப்பதிவு......... N. பிரகாஷ்
நடனம்.......... A.K.சோப்ரா
திரைக்கதை & டைரக்ஷன்:
Ch. நாராயணமூர்த்தி, B.A.
vRv
PSR
V.R.V. புரொடக்ஷன்ஸ் • சென்னை-17

மஹேஸ்வரி பிக்சர்ஸ்
கண்ணின்
மணிகள்
M.K.ராதா • புதுமுகம் சுந்தர் • பத்மினி
M.V.ராஜம்மா • N.S.கிருஷ்ணன்
T.A.மதுரம் • கருணாநிதி
முத்துலக்ஷ்மி மற்றும் பலர்
தயாரிப்பு & டைரக்ஷன்:
T.ஜானகிராம்
PSR
மஹேஸ்வரி பிக்சர்ஸ் • சென்னை-26

240 வியாதிகளுக்குக் கைகண்டது

ஆர். எஸ். பதி மருந்து

(ரிஜிஸ்டர்டு)

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி, வாய்வுக் குத்து, கை, கால் வலி, காலரா முதலிய அநேக வியாதிகளை குணமாக்கும்.

எச்சரிக்கை: **போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். எங்கள் ஆறுமுக முத்திரையையும், டாக்டர் போட்டோவையும் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.**

ஆர். எஸ். பதி அண்டு கோ.

(REGD)

214 & 215 மேலமாசி வீதி, மதுரை.

சிலோன் ஏஜெண்ட்: **M. C. A.** ஹூதா அண்டு கோ.
20, டாம் தெரு, கொழும்பு

சென்னை ஏஜெண்ட்:
ஸ்கூல் வியூ ஸ்டோர்ஸ், 96, தம்புச் செட்டி தெரு,
வேதம் அண்கோ, 1/90 மண்ணடி தெரு,

Specialists in

Developing, Printing and Enlarging
Colour Films
at Madras

OCTOGRAPH STUDIO

(Madras Photo Stores)

186, Mount Road, : : MADRAS - 2.

Either Colour or Black and White

Dial 86144.

கோட்டாகுடி பெரியநாயக்கா
கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திங்கள்

பிப்ரவரி 1956

ஆண்டு 1 ★ மன்மத — மாசி ★ மாதம் - 2

இம்மாதம்

தேசீய இன்ஷ்யூரன்ஸ் ... 8
திங்களுக்குத் திங்கள் (செய்திகள்) ... 10
இந்தியப் பத்திரிகைத்தொழில் ... 13
விகடவித்தை ... 17
பஞ்சசீலம் ... 20
நூறுவருட சேவை ... 22
உஸ்பெக்கிஸ்தான் ... 23
கிரிக்கெட் நிபுணர் ஹட்டன் ... 28
தேவிகுளம்-பீர்மேடு ... 30
மின்னல் ... 43
இலட்சிய நாடு ... 46
பிஞ்சுநெஞ்சில் துவேஷம்! ... 48
பெண்களுக்கான விளையாட்டுகள் ... 51
வான ஊர்தி ... 65
அன்றைய சென்னை ... 69
சிறையில் பிறந்த இலக்கியம் ... 75
புயல் தந்த காட்சிகள ... 89
பூமியின் வயது என்ன? ... 96
இதயத்தின் ரகஸ்யங்கள் ... 99
முடியாட்சியின் வரலாறு ... 102
நிரந்தரமற்ற தாடி ... 105
கோயில் கட்டினர்.....? ... 108
வடமொழி இலக்கியம் ... 116

மற்றும் பல

படக்கட்டுரைகள் :

கும்பகோணம் — துப்புத்துலக்கும் நாய்கள்—
எம். ஆர். ஏ.

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

சந்தா விபரம்: உள்நாடு-வருஷ சந்தா ரூபாய் ஆறு. அரை வருஷ சந்தா ரூபாய் மூன்று. வெளிநாடு-வருஷ சந்தா ரூபாய் எட்டு. தனிப்பிரதி விலை எட்டு அணா.

சகோதரப் பத்திரிகைகள் கூறுகின்றன

"'திங்கள்' அரிய கட்டுரைகளும் வர்ணப்படங்களும் கலந்து மிளிரும் புதுமாதிரி சஞ்சிகை.

—சுதேசமித்திரன்

"பல துறைப்பற்றி அரிய ஆராய்ச்சி கட்டுரைகளும் படக்கட்டுரைகளும் இருக்கின்றன. 'திங்கள்' எல்லா வகையிலும் கவர்ச்சிகரமாக இருக்கின்றது.

—தினமணி

"முற்றிலும் புதுமையானது. அறிவு வளர்ச்சிக்கு சேவை செய்ய இம்மாதிரி பத்திரிகைகளால் முடியும். தமிழ்நாட்டிற்கு இம்மாதிரி பத்திரிகைகள் அவசியம்.

—ஆனந்த விகடன்

"சின்ன சின்னக்கட்டுரைகள் உலக, உள்நாட்டு விவகாரங்களை விளக்குவது நன்ருக இருக்கிறது. படங்கள் மூலம் கட்டுரையை விளக்குவது பாராட்ட வேண்டிய பகுதியாகும்.

—தினத்தந்தி

"தமிழகப் பழஞ்சொல்லான 'திங்கள்' என்னும் பெயரைத் தாங்கி வெளிவந்துள்ள இம்முதல் இதழில் பல கட்டுரைகளும் படக்கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன. வாதப்பிரதிவாதக் கட்டுரை நன்ருக உள்ளது.

—தமிழ் நாடு

"கதை இல்லாமல் பத்திரிகை நடத்துவது மிக துணிச்சலான முயற்சி...இம்மாதிரி பத்திரிகைகள் ஆங்கிலத்தில் எவ்வளவோ இருக்கின்றன. தமிழில் இது புதிது. நல்ல முறையில் அச்சிடப்பட்டுள்ளது.

—தினமணி கதிர்

"சிந்தனையைக் கிளறிவிடும் பல நல்ல கட்டுரைகள் உள்ளன.

—தாருல் இஸ்லாம்

திங்கள்

வணக்கம்

‘திங்கள்’ முதல் இதழ் குறித்து வாசகர்களிடமிருந்து ஏராளமான பாராட்டுரைகள் கிடைத்திருப்பது எங்களை குதூகலிக்கச் செய்கிறது. தமிழிலேயே புதுமுயற்சி என்று சகோதரப் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. சென்ற இதழில் சுமார் 40 கட்டுரைகள் வெளியாகியிருந்தன. அதேபோலவே ஒவ்வொரு இதழிலும் ஏராளமாக, அறிவு வளர்ச்சிக்கான அரிய கட்டுரைகள் வெளியிடப்படும் என்பதைக் குறிப்பிடுகிறோம்.

சென்ற இதழில் கோவாவைப் பற்றிய சகல விவரங்களையும் படித்திருப்பீர்கள். இந்த இதழில் உஸ்பெக்கிஸ்தானைப் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. விகட வித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளை விட விகட வித்தை குறித்து எழுதத் தகுதியுள்ளவர்கள் வேறுயார் இருக்கிறார்கள்?

பிரம்மாண்டமான ஆலயங்களை கட்டினார்கள் நம் முன்னோர். அவை எதற்காக? இதை விளக்கி ஆராய்ந்திருக்கிறார் “சிரஞ்சீவி.” சென்னை நகரத்தின அன்றைய வரலாறு, இந்தியர்கள் ஆதிகாலத்தில் வான ஊர்திகளை உபயோகித்துள்ளது பற்றிய விவரங்கள், இன்னும் கருத்துச்செறிந்த பல கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

கும்பகோணம் மகாமகத்தை யொட்டி படக் கட்டுரை இந்த இதழின் விசேஷ அம்சமாகும். நாய்கள் திருடனைக் கண்டு பிடிக்க எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன என்பது குறித்து இவ்விதழில் வெளியாகியுள்ள படங்களே பேசும்.

‘கண்ணகியின்’ கோயில்கள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை அடுத்த இதழில் வெளியாகிறது. கக்காயி நடராஜ சுந்தரம் பிள்ளை நாதஸ்வரம் பற்றி எழுதுகிறார்.

‘திங்கள்’ ஒவ்வொரு இதழும் இம்மாதிரி நூதன அம்சங்களைத் தாங்கிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

தேசீய இன்ஷ்யூரன்ஸ்

ஆசிரியர் ராமநாத்

இன்ஷ்யூரன்ஸ் தொழில் இந்தியாவில் ஆரம்பமாகி சுமார் 60 வருஷங்களே ஆகின்றன என்று சொல்லலாம். இதற்கு முன்பு, அதாவது இந்த நூற்ருண்டு ஆரம்பத்தில் சுமார் பத்து கம்பெனிகள் மட்டுமே இருந்தன. இவைகள் நடத்திவந்த வியாபாரமும் சொற்பமே.

1912-ல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் பற்றிய சட்டம் இயற்றப்பட்டது. பிற்பாடு அனேக கம்பெனிகள் தோன்றின. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஆயிரக் கணக்கில் நடத்தி வந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தவிர, சொற்ப தொகை இன்ஷ்யூர் செய்து மாதா மாதம் பிரிமியம் அல்லது சந்தா வாங்கிவந்த பிராவிடெண்ட் கம்பெனிகள் மூலைக்கொன்ருகக் கிளம்ப ஆரம்பித்தன. இவைகள் பொதுமக்களுக்கு ஏராளமான பிரதிபலன் கொடுப்பதாகக்கூறி பணம் சேர்த்து விரயம் செய்ய ஆரம்பித்தன. சிறிய கம்பெனிகளின் போக்குத்தான் இப்படி யென்ருல் பெரிய கம்பெனிகளும் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை தாறுமாருகச் செலவு செய்து வந்தன.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஆரம்பிப்பதற்கு லக்ஷக்கணக்கில் மூலதனம் தேவை யென்ருலும், பாலிஸிதாரர்கள் அதிகமாகச் சேர்ந்து விட்டால், அவர்களது பாடு குஷிதான். பாலிஸிதாரர்களின் பணம் வெகுகாலத்திற்குப் பிறகுதான் திருப்பித்தரவேண்டியதாகும். ஒன்றிரண்டு பேர் மரணமடையும்போது மட்டும் கொஞ்சம் பணம் கொடுக்கவேண்டிவரும். இதைக் கொடுப்பது சிரமமல்ல. ஆகவே லக்ஷக்கணக்கில் சேரும் பணத்தை இஷ்டம்போல் விநியோகம் செய்து ஆடம்பரமாக வாழ்ந்தனர் இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகிகள்.

இக்கம்பெனிகள் எவ்வாறு செலவு செய்து வந்தன என்பதை கவனிப்போம். முதல் வருஷம் வசூலிக்கப்படும் பிரிமியம் பூராவுமே செலவழிந்துவிடும். ஒவ்வொரு கம்பெனியும் புதிய பாலிஸிகள் சேர்த்துக் கொடுக்கும் ஏஜெண்டுகளுக்கு 50 முதல் 80 சதவிகிதம் வரை கமிஷன் கொடுக்கும். இதுதவிர விளம்பரங்களில் ஏராளமான பணம் செலவழிந்துவிடும். ஆங்காங்கே கிளை-காரியாலயங்கள் ஏற்படுத்துவதிலும் நிர்வாகச் செலவும் சேர்ந்து பெருந்தொகை விரயமாகிவிடும். சில கம்பெனிகள் பாலிஸி சேர்ப்பதற்காகமட்டும் முதல் வருஷ பிரிமியத்தைவிட அதிகம் செலவிட்டு வந்தன பிராவிடெண்ட் கம்பெனிகள் நிலைமையோ சொல்லவே வேண்டியதில்லை. இக்கம்பெனிகளின் மானேஜிங் ஏஜெண்டுகள் மட்டும் முதல் வருஷ பிரிமியத்தில் ரூபாய்க்கு இரண்டணு வரை ஏப்பம் விட்டுவிடுவர்.

இன்ஷ்யூரன்ஸ் தொழில் படுமோசமாகி வருவதை உணர்ந்த சர்க்கார் 1938-ல் ஒரு புதிய சட்டத்தை ஏற்படுத்தி பல கடுமையான நிபந்தனைகளைப் போட்டனர். ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் அதிகப்படியான கமிஷன் நிர்ணயிக்கப்பட்டது. இன்னின்ன வகையில்தான் பாலிஸிதாரர்களின் பணம் சேமித்து வைக்கப்பட வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்தச் செலவு வரையறுக்கப்பட்டது. சர்க்கார் பத்திரங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களில் 60 சதவிகிதம் பணம் சேமிக்கப்பட வேண்டுமென்றும் புதிய கம்பெனிகள் சர்க்காரிடம் டிபாஸிட் கட்டிய பிறகே வேலை தொடங்கலாமென்றும் சட்டம் இயற்றப்பட்டது. இன்ஷ்யூரன்ஸ் கண்ட்ரோலர் என்ற ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு மேற்பார்வை அதிகாரம் வழங்கப்பட்டது.

1938-ம் வருஷத்திய சட்டம் எவ்வாறு இன்ஷ்யூரன்ஸ் தொழிலைபாதித்திருக்கின்றது என்பதை கவனிப்போம். முதலாவதாக, சில சிறிய கம்பெனிகள் மூடப்பட்டன. பல கம்பெனிகள் தங்கள் செலவுகளைக்

குறைத்துக் கொள்ள முடியாமல் தவித்தன. மொத்தத்தில் 1938-ல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் செலவு 36 சத விகிதமாக இருந்தது. 1948-ல் 29 ஆகவும் 1952-ல் 27 ஆகவும் குறைந்திருக்கிறது. ஆயினும் நிலைமை திருப்தியானது என்று நாம் சொல்வதற்கில்லை.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சாதாரணமாக ஒரு பாங்கு செய்யும் தொழில் செய்வதுடன் பாலிஸிதாரர்களின் மரணம் நேரிடும்போது கூடுதலான தொகை கொடுக்கிறது என்று சொல்லலாம். இப்படிப் பார்ப்போமானால் ஒரு பாங்கு தான் கொடுக்கும் வட்டி விகிதத்துக்கும் கடன் கொடுத்து வாங்கும் வட்டி விகிதத்துக்கும் ஏற்படும் வித்தியாசத்தையே லாபமாகப் பெறுகிறது. இதைத் தவிர பாங்குகள் தங்கள் கணக்குதாரர்களுக்குச் செய்யும் பல பணிவிடைகளுக்கும் ஊதியம் பெறுகின்றன. இதைக் கொண்டு நிர்வாகச் செலவைச் செய்கிறது. எஞ்சியதை பங்குதாரர்களுக்கு லாபமாகக் கொடுக்கிறது.

இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் பாலிஸிதாரர்களின பணத்தை லாபகரமானதும் நீண்ட நாட்களுக்கு பத்திரமானதுமான வழிகளில் சேமித்து வைக்க வேண்டும். இதனின்றும் கிடைக்கும் வட்டியில் ஒரு பங்கையாவது பாலிஸிதாரர்களுக்குக் கொடுக்கவேண்டும். மரணமடைந்த பாலிஸி தாரர்களின் சந்ததியார்களுக்கு கொடுக்கப் படும் நஷ்டத்தை இதர பாலிஸிதாரர்களும் ஏற்றுக் கொள்ளும்படி கூடுதலான பிரிமியம் தொகை நிர்ணயிக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட முறைப்படி இன்ஷ்யூரன்ஸ் தொழிலின் செலவை நிர்ணயம் செய்து பார்க்கும்பொழுது இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் பாங்குகளைவிட பத்துமடங்கு அதிகச் செலவு செய்து வந்திருக்கின்றன. தங்கள் சந்ததியார்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற நோக்கத்துடன் இன்ஷ்யூர் செய்து வந்த பொது மக்கள் இதற்காக அதிகப்படி கிரயம் கொடுத்து வந்திருக்கின்றனர். இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டவுடனேயே பிரிமியம் தொகை குறைக்கப்பட்டிருப்பதும் இதற்கு முன்னர் சர்க்காரால் நடத்தப்பட்ட போஸ்டல் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சர்க்கார் ஊழியர்களுக்கு குறைந்த விகிதத்தில் இன்ஷ்யூரன்ஸ் வழங்கப்பட்டு வந்ததும் இதற்குப் போதிய சான்ருகும்.

இன்ஷ்யூரன்ஸ் தொழில் என்று சாதாரணமாகச் சொல்லப்படும் இது ஒரு தொழில்தானு என்று பார்ப்போமானுல் இந்தியாவில் இது ஒரு தொழில் அல்ல என்ற முடிவுக்குத் தான் வரவேண்டி யிருக்கிறது. அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளில் இன்ஷ்யூரன்ஸ கம்பெனிகள் பல தொழில் துறைகளில் முதலீடு செய்து வருகின்றன. தொழிலதிபர்கள் பலர் இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகிகளாகவும் உள்ளனர். ஆகையால் பலதரப்பட்ட தொழில்களில் இன்ஷ்யூரன்ஸ் சேமிப்பு பணம் பயன்படுத்தப்பட்டு விருத்தியாகிக் கொண்டு வருகிறது. இதன் நிமித்தமாகவே இன்ஷ்யூரன்ஸ், பாங்கிங் இவைகளை தொழில வகையில் சேர்த்தனர். இந்தியாவில் இந்நிலைமை இன்னும் ஏற்படவில்லை. சர்க்கார் நிர்வாகத்தில் சேமிப்புப் பணம் தொழில் திட்டங்களுக்குப் பயன்படும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்தியாவில் இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட சர்க்கார் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கிறது. பல கம்பெனிகளையும் ஒன்று சேர்த்து நிர்வாகச் செலவை மூன்றிலொரு பங்காகக் குறைக்க வேண்டும். ஏஜெண்டுகள் என்ற முறையை ஒழித்து நிரந்தர சம்பளத்தில் பாலிஸிதாரர்களுக்கு உதவி செய்யவும் புது இன்ஷ்யூரன்ஸ் சேகரிக்கவும் பிரசாரகர்களை ஏற்படுத்த வேண்டும். கம்பெனிகள் இன்ஷ்யூரன்ஸ் தொகை பட்டுவாடா செய்து வந்ததைவிட குறைந்த காலத்தில் பணம் கொடுப்பதற்கான சுலபமான வழிகளைக் கையாளவேண்டும்.

இன்ஷ்யூரன்ஸ் தொழிலை சர்க்கார் நிர்வகிப்பது மிகவும் சிலாகிக்கத் தக்கதே. நிர்வாகத் திறமையுடன் இன்ஷ்யூரன்ஸ் நடத்தப்பட்டு வரவேண்டுமென்பதே நமது கோரிக்கை. ★

திங்களுக்குத் திங்கள்

முப்பத்தேழு ஆண்டுகளுக்குப்பின் அமிர்தசரஸில் காங்கிரஸ் மகாசபையின் 61-வது கூட்டம் சமீபத்தில் நடந்து முடிந்திருக்கிறது. 1919–ல் இங்கு கூடிய காங்கிரஸில் தான் காந்திஜியின் சத்தியமும் அஹிம்ஸையும் ஒளி வீச ஆரம்பித்தன. அந்த காந்தீய பண்பாட்டை காங்கிரஸ்காரர்கள் மீண்டும் நினைவு படுத்திக் கொள்ள ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது. தேசத்தின் எதிர்கால பொருளாதார அமைப்பு பற்றி பொது மக்களுக்கு திட்டமான லட்சியம் எது என்பதை ஆவடியில் எடுத்துரைத்தது போல ராஜ்யங்களின் எதிர்கால அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை இக்காங்கிரஸ் தெளிவு படுத்தியிருக்கிறது. தக்ஷிண பிரதேச அமைப்புக்கான கோரிக்கையை வெளியிட்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*　　*　　*

இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்திற்கான நகல திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் வெற்றி மக்கள் பணத்தை சேமித்து கொடுத்து உதவுவதையும் புது வரிகளை ஏற்றுக் கொண்டு கொடுப்பதையுமே பொருத்திருக்கிறது. முதல் திட்டத்தின் சாதனைகள் நம்பிக்கை அளித்திருப்பது காரணமாக அதைவிட இரு மடங்குக்கு செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவது, முதலீட்டைப் பெருக்குவது வேலை வாய்ப்புகளை விஸ்தரிப்பது வருமானத்திலும் செலவிலுமுள்ள உயர்வு தாழ்வுகளை குறைப்பது இவை எல்லாம் இனி மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள். வருமான தாரதம்மியத்தை தணிக்கவும் வழிதேடப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள குடும்ப வருமானங்களைப் போல 30 மடங்கு என்பதை வரி செலுத்திய பிறகு தனி ஆளுக்கு கிடைக்கும் நிகர வருமானங்களுக்கு ஒரு நியாயமான உச்ச எல்லையாக நிர்ணயிக்கலாம் என்று விசாரணைக் கமிஷன் ஆலோசனை கூறியிருக்கிறது. படிப்படியாக இதை அடைய முயற்சிக்கப்படும்.

*　　*　　*

வருகிற 20உ தமிழ்நாட்டில் எங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டும் என்று பல கட்சித்தலைவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். இதில் காங்கிரஸ் தலைவர் கக்கனும், திராவிட கழகத்தலைவர் ஈ. வே. ரா.வும் கலந்து கொள்ளவில்லை. தேவிகுளம், பீர்மேடு விஷயமாக தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டிக்கவே இந்த ஏற்பாடாம். ராஜ்யங்களின் புனரமைப்பு குறித்து இந்திய சர்க்கார் வெளியிட்ட முடிவின் எதிரொலி இது. இம் முடிவு பலராஜ்யங்களிலுள்ளவர்களுக்கு திருப்தியை அளிக்கவில்லை. இதைத் தொடர்ந்து பம்பாய், ஒரிஸ்ஸா, மேற்குவங்கம் ஆகிய இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டன. தமிழ்நாட்டில் கல் எறிவது ரயில் நிறுத்துவதுடன் கிளர்ச்சி நின்றது.

தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் அதிருப்தியடைய காரணம் இல்லாமல் போய்விடவில்லை. கோரிய தேவிகுளம், பீர்மேடு கிடைக்கவில்லை என்பதுடன்மட்டுமின்றி கமிஷன் அனுமதித்த செங்கோட்டையின் மேற்குப்பகுதி இப்போது கேரள ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டு விட்டதும வருந்தத்தக்கதே!

*　　*　　*

மேற்கு வங்க, பீஹார் முதல் மந்திரிகள் இருவரும் கலந்தாலோசித்து இரு ராஜ்யங்களையும் ஒன்று படுத்தும் யோசனையை வெளியிட்டனர். இந்த அடிப்படையில் தமிழ் நாடு கேரள கர்நாடக ராஜ்யங்கள் ஒன்றாக இணைவதற்கான பூர்வாங்க பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய இத்திராவிட பாஷைகள் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை. தென்னாட்டின் பண்பாட்டைக் காப்பாற்ற

தக்ஷிண தேச ஏற்பாடு சிறந்த யோசனைதான்.

* * *

இந்திய சர்க்கார் ஒரு அவசரச் சட்டத்தை பிறப்பித்து இந்தியக் கம் பெனிகளும் அந்நிய கம்பெனிகளும் நடத்தி வந்த ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களின் நிர்வாகத்தை மேற் கொண்டிருக்கிறார்கள்.

இன்ஷ்யூரன்ஸ் தொழில் நேர்மை யாகவும் திறமையாகவும் நடத்தப் பட்டால்தான் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அதனால் பலன் உண்டு. இந்தியக் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு கொடுத்துவிட்டு அவைகளை சர்க்கார் உடமையாக்கிக் கொள்ளப் போகி றார்கள்.

இதைத் தொடர்ந்து மூன்றாவது நபர் மோட்டார் இன்ஷ்யூரன்ஸை ராஜ்ய சர்க்கார் மேற்கொள்வதுபற்றி ஆலோசித்து வருவதாக சென்னை நிதிமந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார். (மூன்றாவது நபர் இன்ஷ்யூரன்ஸ் என்றால் மோட் டார் விபத்தில் அடிபட்டோ அல்லது இறந்தோ போகும் நபருக்காக கொடுக்கப்படும் இன்ஷ்யூரன்ஸ் என்று அர்த்தம்)

* * *

குடியரசு தினம் வழக்கம்போல குதூகலமாக நாடெங்கும் கொண்டா டப்பட்டிருக்கிறது. நேரு வெளி யிட்ட ராஜ்ய மண்டலயோசனையை அங்கீகரித்து இந்திய சர்க்கார் நகல் மசோதாவை தயாரித்து வெளியிட்டுள் ளனர். இதை குடியரசு தினப் பரிசாகக் கூறலாம். இந்த மசோதா சட்டமான பின் வடக்கு மண்டலம், மத்ய மண்ட லம், கிழக்கு மண்டலம், மேற்கு மண்ட லம், தக்ஷிண மண்டலம் என்று நாடு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலுள்ள ராஜ்யங்கள் தங்கள் பொதுநலன் கூட்டாக நிறைவேற்ற ஒரு சபையை அமைத்துக் கொள்ளலாம், ஒரே கவர்னர், ஒரே ஹைக்கோர்ட் என்றும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

* * *

சுதந்திரம் பெற்று எட்டு வரு ஷங்களுக்குப் பின் இப்போதுதான் பாகிஸ்தானில் ஒரு அரசியல் திட்டம் உருவாகி அமுலுக்கு வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் காமன் வெல்த்தைச் சேர்ந்த குடியரசாக இது இருக்குமாம். பாகிஸ்தான் ஜனாதி பதி ஒரு முஸ்லிமாகத்தான் இருக்க வேண்டுமாம். இஸ்லாம் கொள்கைக்கு விரோதமாக எந்த சட்டமும் இயற்றப் படக் கூடாதாம். சிறுபான்மையோர் நலன் இதனால் பாதிக்கப்படாது என்று சொல்லமுடியாது.

எகிப்தில் ஒரு அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக் கிறது. இந்த அரசியல் சட்டத்தின் மீது மக்களின் அபிப்பிராயத்தைக் கோர ஜூன்மீ 23ந்தேதி தேர்தல் நடைபெறும் என்று பிரதமர் நாஸிர் அறிவித்திருக்கிறார். இந்த அரசியல் சட்டப்படி பெண்களுக்கு முதல் தடவையாக வாக்குரிமை கிடைத் திருக்கிறது. சமூக நீதியையும் சம சந்தர்ப்பத்தையும் எல்லோருக்கும் இந்த சட்டம் உறுதி செய்கிறது.

* * *

குடியரசு தினத்திற்கு மறுநாள் காந்திஜி நினைவு மண்டபத்தை ராஜாஜி திறந்து வைத்திருக்கிறார். இந்தியாவிலேயே தெய்வீக அம்சம் பொருந்திய இத்தகைய ஞாபகச் சின்னம் காந்திஜிக்கு இங்குதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காந்திஜி எம்மதமும் சம்மதமே என்ற கொள் கையுடையவர். ஆகவே எல்லா மதத் தின் உபதேசங்களும் இந்த மண்ட பத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

* * *

இலங்கையில் இப்போது ஏற் பட்டுள்ள மொழி நெருக்கடி இலங்கை அரசாங்கத்தினரால் சிருஷ்டி செய்யப்பட்டதாகும். தமிழ் மொழி சிங்கள மொழியுடன் ராஜாங்க பாஷையாக இருக்க வேண்டும் என் பது ஏற்கனவே சர்க்கார் ஒப்புக் கொண்ட விஷயம். சிங்களத் தீவிர வாதிகள் செய்த கிளர்ச்சி காரண மாக இலங்கை சர்க்கார் தடுமாறி இருக்கின்றனர். சர்க்காரின் இந்தப் போக்கை ஆட்சேபித்து தமிழ் மந் திரிகளான ஸ்ரீ வி. குமாரஸ்வாமியும், ஸ்ரீ எஸ். நடேசனும் ராஜிநாமா செய்துள்ளனர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையோராக இருக்கும்

பிரதேசங்கள் அடங்கிய தமிழ் ராஜ்யத்தை ஏற்படுத்தும்படி இலங்கை பார்லிமெண்டிலுள்ள தமிழ் அங்கத்தினர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராணியிடம் மகஜர் சமர்ப்பிக்க இலங்கைத் தமிழர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இது குரங்கு மத்யஸ்தமாக முடியாமலிருக்க வேண்டுமே!

* * *

இப்போது ஆரம்ப ஆசிரியர்களுக்கு கிடைத்துவரும் அனுகூலங்கள் விரைவில் மற்றப்பிரிவு ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று சென்னை கல்விமந்திரி தெரிவித்திருக்கிறார். இது சம்பந்தமான உத்திரவு அடுத்த மாதம் எதிர் பார்க்கப்படுகிறது.

உபாத்தியாயர்களின் ஊதியத்தை உயர்த்துவது முதன்மையானது என்று திட்டக் கமிஷன் கருதவில்லையாம். கல்விக்காக திட்டக் கமிஷன் ஒதுக்கிய ரூ. 225 கோடியில் ரூ. 15 கோடிதான் சென்னைக்கு கிடைக்கும். ஆனால் பெரியமனது செய்து சம்பளத்தை திருத்தியமைக்கப் போவதாக இந்திய சர்க்காரின் கல்வி ஆலோசகர் சையதீன் கூறியிருக்கிறார்.

* * *

ரஷ்யா தன் சமாதான ஆவலைத் தெளிவாக வெளியிட்டு விட்டது; ரஷ்யாவும் அமெரிக்காவும் தமக்கிடையே ஒரு நேச ஒத்துழைப்பை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்னு ரஷ்யப் பிரதமர் புல்கானின் வெளியிட்ட யோசனையை ஐஸன்ஹோவர் நிராகரித்து விட்டார். புல்கானின் பிரிட்டன், பிரான்ஸுடன்கூட இத்தகைய ஒப்பந்தம் செய்து கொள்ள சம்மதம் என்று தெரிவித்திருந்தார். செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல் ஆகிவிட்டது இந்த ஒப்பந்தம்.

'போர்மோஸா பிரச்னை சமரஸமாகத் தீர்க்கப்பட வேண்டும். அப்படி செய்யாவிடில் யுத்தம் தான், வேறு வழியில்லை!' என்றால் அதற்கும் தயார் என்று சீனக்குடியரசு பிரதமரான சூ-யென்லாய் தெரிவித்திருக்கிறார்.

* * *

ஹிந்திக்காக வேறு எந்த மொழியின் நலனையும் தியாகம் செய்ய தான் இசைய இயலாது என்று ஸ்ரீ பி. ஜி. கேர் கூறியிருக்கிறார். மொழிப்புரட்சி அமைதியாக நடைபெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். தக்ஷிணத்தின் நலனை மதித்து கமிஷன் முடிவு செய்யுமாம். இக்கமிஷன் ரிப்போர்டு ஜூலையில் சமர்ப்பிக்கப்படும். ராஷ்டிரபதியும் ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என்கிற உறுதி மொழியை மீண்டும் அளித்திருக்கிறார்.

ஆங்கிலம் ராஜாங்க பாஷையாக நீடிக்கவேண்டும் என்பதை பல கட்சி பிரமுகர்கள் தமிழ் கலாசாரக் கழகத்தின ஆதரவில் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறார்கள். ராஜாஜி, பெரியார் ஈ. வே. ரா. பி. டி. ராஜன், ஸி. என். அண்ணாதுரை, ம. பொ. சிவஞானம் முதலியவர்கள் இதில் கலந்து கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

* * *

மில் துணிகளுக்கு உள்ள எக்ஸைஸ் வரியை உயர்த்தி கைத்தறி துணிக்கு விற்பனைவரி இல்லாமல் செய்ய ராஜ்யங்கள் இணங்கியுள்ளன,

* * *

தாம்பரம்–விழுப்புரம் மின்சார ரயில் திட்டம் கைவிடப்பட மாட்டாது என ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

* * *

இந்தியாவின் புகழை சர்வதேச அரங்கில் உயர்த்துவதில் பெரும் பங்குபெற்ற ஸ்ரீ கிருஷ்ணமேனன் மத்திய சர்க்காரில் மந்திரி பொறுப்பை ஏற்றிருக்கிறார். மந்திரியாக இருந்து கொண்டே அவர் அயல் நாட்டில் நடைபெறும் மகாநாடுகளிலும்கலந்து கொள்ளலாம்.

* * *

இம்மாதம் 2உ குமரிமுனையிலிருந்து பூதான யாத்திரை சுசீலா நய்யார் தலைமையில ஆரம்பமாகியிருக்கிறது. ராஷ்டிரபதி ராஜன்பாபு இதை நேரில் ஆரம்பித்துவைத்து ஆசி கூறியிருக்கிறார். இந்த இயக்கத்தின் கீழ் 1957-ம் வருஷத்திற்குள் 5 கோடி ஏக்கர் நிலம் சேகரித்து விநியோகிக்கப்பட வேண்டும் என்பது வினோபாவின் லட்சியம். அதை சாதிக்கவே இந்த யாத்திரையைத் தொடங்கி யிருக்கின்றனர்.

இந்தியப்
பத்திரிகைத் தொழில்

க. சந்தானம், நிதி கமிஷன் தலைவர்

தற்கால நாகரீக வாழ்வில் பத்திரிகைத் தொழில் ஒரு முக்ய பங்கை பெற்றிருக்கிறது. அதுவும் ஜனநாயகமுறை பின்பற்றப்படும் நாடுகளில் பத்திரிகைகள் பெரும் சேவை செய்கின்றன.

மிகவும் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் பத்திரிகைத் தொழில் ஒரு பெரும் வர்த்தகத் தொழிலாகவே நடைபெற்று வருகின்றது. நியூயார்க் டைம்ஸ், லண்டன் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளின் வருமானம் இந்தியாவிலுள்ள பெரிய ராஜ்யம் ஒன்றின் வருமானத்தைவிட அதிகமாகும். சுமார் 100 வருஷங்களுக்குமுன் பத்திரிகைத் தொழில் என்று ஒன்று இல்லவே இல்லை. இன்று பத்திரிகைத் தொழில், வக்கீல் தொழில், டாக்டர் தொழில் இவைகளைப்போல ஒரு பிரபல தொழிலாகிவிட்டது. தேர்தல்கள் பற்றிய விஷயங்கள், மந்திரிகள் நியமன விஷயங்கள், சர்க்கார் கொள்கைகள் இவை எல்லாம் செக்ரடேரியட் ஆபீஸ்களில் காட்டிலும் பத்திரிகை ஆபீஸ்களிலேயே அத்துபடி செய்யப்படுகின்றன. முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் பலவற்றிலுள்ள பத்திரிகைத் தொழிலின் நிலைமை அது. இந்தியாவிலும் நிலைமை இப்படித்தான் என்றாலும் இதர நாடுகளுடன் ஒப்பிடுகையில் இத்தொழில் இங்கு போதிய வளர்ச்சி பெறவில்லையென்றே கூறவேண்டியிருக்கிறது.

இதற்கான காரணங்கள்: (1) அந்நியர் ஆட்சி, (2) மக்களின் வறுமை, படிப்பின்மை, (3) பல பாஷைகள் இருப்பது.

அந்நியர் ஆட்சி காரணமாக பத்திரிகையின் பிறப்பும் சரி, வளர்ப்பும் சரி, தக்கபடி அமையவில்லை. ஆங்கிலோ – இந்தியர்கள்தான் இந்தவழியில் முதலில் சிரத்தைகாட்டினர். பின்னரே பத்திரிகைத் தொழிலில் இந்தியர் பிரவேசிக்க ஆரம்பித்தனர். அந்நிய பாஷையான ஆங்கிலத்தில் இத்தொழில் ஆரம்பிக்கப் பட்டது. பின்பு தான் இதர பாஷைகளில் பத்திரிகைகள் வெளிவரலாயின.

இந்தியா சுதந்திரம் அடையும் வரை பத்திரிகையாளர்களின் நோக்கமெல்லாம் எப்படியாவது பத்திரிகையை நடத்திநாடு சுதந்திரமடைய தங்களாலான

★ சமீப காலம் வரை பல முக்கிய பதவிகளை வகித்து சேவை செய்த ஸ்ரீ க. சந்தானம் சிறந்த பத்திரிகாசிரியர் என்பது பலருக்குத் தெரிந்திராது. இக்கட்டுரையில் பத்திரிகைத் தொழில் நிலைமையை இவர் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

சேவையைச் செய்துவர வேண்டும் என்பதே. இந்த நிலையில் பத்திரிகைகளின் நிலைமை நித்ய கண்டமாக இருந்ததால் அவை வளர்ச்சியடைய முடியவில்லை. முதல் உலக மகா யுத்தத்திற்கு முன்பும் இரண்டாவது உலகப் போருக்கு முன்பும் வரவுக்கும் செலவுக்கும் சரிகட்டி வந்த பத்திரிகைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

அந்நியர் ஆட்சி நீடித்த வரையில் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அதிக மவுஸ் இருந்தது. பணமும் ஆங்கிலப் பத்திரிகைகளில்தான் அதிக முதலீடு செய்யப்பட்டது. மகாத்மா காந்தி 1920-ல் தேசிய போராட்டத்தை ஆரம்பித்தபோது ஒவ்வொருவரும் பிரதேச பாஷையிலேயே பேசவேண்டும், பிரசுரங்கள் பிரதேசமொழியிலேயே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆங்கில பாஷை பத்திரிகைகளுக்கு முதலாவதாக ஏற்படும் தடையாகும் இது. இப்போது நிலைமை தெளிவாகி விட்டது. இன்னும் 25 அல்லது 30 வருஷங்களில் ஆங்கில பாஷையில் பத்திரிகைகளே இந்தியாவில் இல்லாமல் இருக்கும் நிலைமை ஏற்படலாம். சில ஆங்கில வாரப் பத்திரிகைகளும் சில டெக்னிகல் சஞ்சிகைகள் மட்டுமே ஆங்கிலத்தில் வெளிவரலாம்.

மூன்றாவதாக, படிப்பின்மையைப் பற்றி கவனிக்கலாம். இந்தியாவில் 35 கோடி பேர் வசிக்கின்றனர். பத்திரிகையின் மூலம் விஷயம் அறிந்து கொள்பவர்கள் 100-க்கு இரண்டு அல்லது மூன்று பேர்கள்தான். வறுமை காரணமாக பத்திரிகை போதிய வளர்ச்சியடையவில்லை என்பதும் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். இந்திய மக்கள் பத்திரிகைகளை இன்னும் ஒரு அத்யாவசியப் பொருளாகக் கொள்ளவில்லை.

இன்றும் பத்திரிகை வாசிப்பது ஒரு ஆடம்பரமென்றே கருதப்படுகிறது. பக்கத்து வீட்டுக்காரன் பத்திரிகையை வாங்கியாவது வாசிக்கலாமா என்ற மனப்பான்மை இருந்து வருகிறது. ஆனால் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், பொருளாதார நிலைமை சீர்பட்டு வருவதாலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மிகவும் அவசியமானவைதான் என்று இப்போது உணரப்பட்டு வருகிறது.

இந்தியப் பத்திரிகைத் தொழிலின் சரித்திரத்தை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் உலகயுத்தம்வரை ஒரு கட்டமாகவும், இரண்டாவது உலக யுத்தம்வரை இரண்டாவது கட்டமாகவும், தற்கால பத்திரிகை நிலைமையை மூன்றாவது கட்டமாகவும் பிரிக்கலாம். அந்நாள் முதற்கொண்டே, ஹிந்து, அமிர்த பஜார் பத்திரிகா போன்ற பத்திரிகைகளும் மற்றும் சில பிரதேச மொழிப் பத்திரிகைகளும் அநேக இன்னல்களை அனுபவித்தும்கூட எப்படியோ சமாளித்து தலை தூக்கி யிருக்கின்றன. ஆரம்ப காலத்தில் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள்தான் சிறந்த ஆதரவைப் பெற்றிருந்தன. அப்போதிருந்த சுதேசப் பத்திரிகைகள் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளைக் காப்பியடித்தன. 1914 வரை உள்ள 'ஹிந்து'வை நீங்கள் இப்போது புரட்டிப் பார்த்தால் ஐரோப்பா இதர நாடுகள் பற்றிய செய்திகள் அதிகமாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

இதற்குக் காரணம் அக்காலத்தில் செய்திகளையனுப்பும் ஸ்தாபனங்கள் போதிய அளவு அபிவிருத்தி யடையாததேயாகும். இந்தியப் பத்திரிகைகள் ஒவ்வொரு நாட்டிலும் தங்கள் சொந்த நிருபர்களை வைத்துக் கொள்ள முடியாத நிலைமையிலிருந்தன. ஆகவே கிடைத்த செய்திகளைப் பிரசுரித்தே பத்திரிகையை வெளிக் கொண்டுவர முயற்சித்தன. லோகமான்ய திலகரும் அவரைப் போன்ற பத்திரிகை ஆர்வம் மிகுந்த சிலரும் தேசிய உணர்ச்சியைத் தூண்டும் முறையில் பத்திரிகைகள் நடத்தி வந்தனர்.

1920 முதல் *1940* வரை சத்தியாக்ரக இயக்கங்களின் காரணமாக பெரும் போராட்டங்களை பத்திரிகைகள் நடத்தியிருக்கின்றன. பல பத்திரிகைகள் அநுபவித்த கஷ்டங்கள் அநேகருக்குத் தெரிந்திராது.

நானும் ஒரு பத்திரிகை ஆசிரியராக சிலகாலம் சேவை செய்திருக்கிறேன். *1932*-ல் சத்தியாக்கிரக இயக்கத்திலீடுபட்டு சிறையிலிருந்து வெளிவந்தபின் ராஜாஜியைச் சந்திக்க சென்னை வந்தேன். ஸ்ரீ கே. பாஷ்யம் வீட்டில் பத்திரிகாசிரியர் ஸ்ரீ சதானந்தைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் சென்னையில் ஒரு அச்சகத்தை வாங்கியிருந்தார். பத்திரிகை நடத்தும் எண்ணத்தில் ஒரு பத்திரிகையையும் விலைக்கு வாங்கியிருந்தார். அதை நடத்த ஆசிரியர் பதவிக்கு ஒருவர் அவருக்குத் தேவைப்பட்டார்.

''சந்தானம் இங்கு இருக்கும் போது நீ என் ஆசிரியர் பதவிக்கு ஆள் தேடுகிறாய்?'' என்று சதானந்திடம் ராஜாஜி என்னைக் குறிப்பிட்டு சொன்னார். உடனே எனக்கு ஆசிரியர் பதவியளிக்கப்பட்டது. அப்பத்திரிகைதான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'.

சுமார் ஐந்து வருஷகாலம் இப்பத்திரிகையைப் பெரும் போராட்டங்களுக்கு இடையே நடத்தினோம். ஒவ்வொரு நாளும் பத்திரிகை வெளிவருமா என்ற சந்தேகம் இருந்து கொண்டே வந்தது. அரசியல் அனுபவத்துடன் மக்களின் மனோபாவத்தையும் ஓரளவு உணர்ந்திருந்ததால் பல சிக்கல்களையும் சமாளித்து பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தேன். இம்மாதிரி பல பத்திரிகைகள் மக்களின் ஆதரவைப் பெற துடிதுடித்தன. இதை இரண்டாவது கட்டம் எனலாம்.

பின்னர் இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்டது. பத்திரிகைகள் எல்லாமே நல்ல வருவாயைப் பெற ஆரம்பித்தன. யுத்தம் ஆரம்பித்த இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் சின்னஞ்சிறு பத்திரிகைகள்கூட சுபிட்சமான நிலைக்கு வந்துவிட்டன. இந்தியா சுதந்திரமடைந்த பின்பு இந்தியப் பத்திரிகை உலகிலேயே புது அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது,

இந்தியாவின் பத்திரிகைத் தொழிலின் எதிர்காலம் எப்படி? ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வசதிகள் இருக்காது என்றே சொல்லலாம். ஆனால் இப்போதைக்கு இன்னும் சில வருஷங்களுக்கு ஆங்கிலப் பத்திரிகைகள்தான் பிரமாதமாக இருந்துவரும். சுதந்திரம் கிடைத்த பின்பும் ஆங்கிலப் பத்திரிகைகள் படிக்கும் வழக்கம் நம்மவர்களிடமிருந்து போகவில்லை.

ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து பிரதேச மொழி பத்திரிகைகளுக்கு மாறுவது என்பது லேசில் நடக்கக் கூடியதல்ல. ஏராளமான தொகையை முதலீடு செய்ய வேண்டும். லாபம் கிடைக்க பத்து அல்லது பதினைந்து வருஷங்கள் பொறுத்திருக்க வேண்டும். இதனுல் தான் வர்த்தகப்பிரமுகர்கள் பத்திரிகை ஆரம்பித்து நடத்த பயப்படுகிருர்கள். மேல் நாடுகளில் பத்திரிகைகள் ஏராளமான மக்களால் வாங்கி படிக்கப்படுகின்றன. ஆனுல் இந்தியாவில் அம்மாதிரி நிலை ஏற்பட வெகுகாலமாகலாம். இன்று படித்தவர்களிலேயே 10 சதவிகிதம் பேர்தான் பத்திரிகையை படிக்க முற்படுகிருர்கள்.

நாளையே இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களும் பத்திரிக்கைளப் படிக்க ஆரம்பித்துவிட்டால் அதற்கான இயந்திர சாதனங்கள் ஆகியவை எல்லாம் தேடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். அவ்வளவு அதிக பிரதிகளையும் அச்சிட தக்க சாதனங்கள் நம்மிடம் இல்லை.

பத்திரிகைத் தொழிலை சர்க்கார் ஏற்று நடத்த முடியாது. அது தனிப்பட்டவர்கள் வசம் தான் இருக்க வேண்டும்.

பத்திரிகை நடத்துபவர்களிடம் ஒரு தனி அதிகாரம் இருக்கவே செய்கிறது. அதுவும் ஜனநாயகத்தில் இந்த அதிகாரம் மிகவும் அதிக முக்யத்துவமுள்ளது. தேர்தலின் போது ஒவ்வொரு அரசியல்வாதியும் பத்திரிகைகளின் ஆதரவைத் தேடும் நிலையில் இருக்கிருர். ஆகவே பத்திரிகைத் தொழில் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதில் ஆபத்து இருக்கிறது.

தேர்தலின் போது ஒவ்வொரு பத்திரிகையும் ஏதாவது ஒரு கட்சியை ஆதரிக்கும் என்ருலும் அம்மாதிரி ஒரு கட்சியை மட்டும் ஆதரிப்பது என்கிற நிலைமை ஏற்படுவது துரதிருஷ்டவசமானதே என்று நான் கருதுகிறேன். அரசியல் கட்சிகள் பெரிய பத்திரிகைகளை சொந்தத்தில் வைத்துக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என்பது என் கருத்து. அம்மாதிரி கட்சிகள் தங்கள் கொள்கைகளை விளக்க சிறிய பத்திரிகைகளை நடத்தலாம்.

பத்திரிகை கமிஷன் யாதாஸ்தில் உள்ளபடி இந்தியாவில் 25 லட்சம் பத்திரிகைகள் விற்பனையாகின்றன. இந்தியாவில் 8 கோடி குடும்பங்களிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பமும் ஒரு பத்திரிகை வாங்கி படிப்பதாக வைத்துக் கொண்டால் இந்தியப் பத்திரிகைத் தொழில் அடுத்த 30 வருஷங்களில் நூறு மடங்கு பெருக வேண்டும். இந்த யாதாஸ்து பத்திரிகைத் தொழிலின் சென்ற காலம், நிகழ் காலம் இவைகளைப்பற்றி மிக விரிவாகப் பிரஸ்தாபித்திருக்கிறதே யொழிய, எதிர் காலம் பற்றி அந்த அளவிற்கு அது தன் கவனத்தைச் செலுத்தவில்லையென்றே நான் கருதுகிறேன்.

ஆனுல் இந்த யாதாஸ்தில், உழைக்கும் பத்திரிகையாளருக்கு நியாயச் சம்பளம், வேலை செய்ய வசதிகள் இவைகளெல்லாம் செய்துதர சிபார்சு செய்யப்பட்டிருப்பதும், அவைகளை சர்க்கார் ஏற்று சட்டம் செய்திருப்பதும் வரவேற்கத் தக்கதே. ★

விகட வித்தை

திருவிசலூர் விகடம் ராமஸ்வாமி சாஸ்திரிகள்

விகடம் ராமஸ்வாமி சாஸ்திரிகளை அறியாதவர்கள் இருக்க முடியாது. இவர் விகடங்களைக் கேட்டு விலாப்புடைக்க சிரித்தவர்கள் எவ்வளவோ பேர். இவர் விகடவித்தை குறித்து இக்கட்டுரையில் விளக்குகிருர்.

விகடம் என்பது பல பிராணிகள் பட்சிகள் போல சப்திப்பது என்று சிலர் எண்ணுகிருர்கள். அது சரியல்ல. இந்த வித்தை லேசில் பழக்கமாகி விடாது. இவைகளில் சில வற்றைப் பழகிக்கொள்ள அசுரசாதகம் செய்யவேண்டியிருக்கும்.

விகடவித்தை என்ருல் ஏதோ எல்லாரையும் சிரிக்க வைக்கும்கலை என்று தான் நாம் நினைக்கிருேம். ஆனுல் பக்தியையும் குழைத்து இந்த விகடத்துடன் போட்ட முயல வேண்டும். அப்போதுதான் இக்கலை பரிமளிக்கும். பகவான் ஒரு இடத்தில் சொல்லும்போது "என்னை அன்புடனே அல்லது கேலியாகவோ அல்லது ஆத்திரமாகவோ பேசினுலும் கூட நான் ரக்ஷிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிருர்.



எனக்குள்ள ஒரே வருத்தம் எனக்கு இங்கலீஷ் நன்ருகத் தெரிந்திருக்க வில்லையே என்பதுதான். அதுமட்டும் தெரிந்திருந்தால் மேல்நாடுகள் சென்று என் வித்தையை பலரறியச் செய்திருப்பேன். அவர்களும் ரசித்திருப்பார்கள். ஆனுல் நம் நாட்டில் "என்ன சாஸ்திரிகளே ஜமாய்த்துட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு என்னிடம் இருந்து பொடிவேறு வாங்கிப் போட்டுக்கொண்டு போய் விடுகிருர்கள் என் ரஸிகர்கள்."

வெறும் விகடங்கள் செய்வதால் யாருக்கும் நன்மையில்லை. இக்காலத்திலுள்ள போக்குகளை எடுத்துக்

காட்டுவதைக் கொண்டு யாரையும் நான் பரிகசிப்பதாக தவருக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் எனக்கு பொன்னுடை போர்த்தி பத்ர விகட ஸ்ரீ ராமசாமி சாஸ்திரிகள் என்ற பட்டத்தை அளித்தபோது விகடத்துடன் "பக்திமார்க்க உபன்யாசங்களிலும் கலந்து கொள்" என்று எனக்கு ஆகஞாபித்திருக்கிருர்கள். இந்த விகடங்களில் சில ஜலத்தில் உட்கார்ந்துக்கொண்டு சாதகம் செய்தவை; மழையில் நனைந்து கொண்டு சாதகம் செய்தவை; ஈரத் துணியை தலையில் போட்டுக்கொண்டு சாதகம் செய்தவை. பட்சிகளுடனும் மிருகங்களுடன் நான் பேசி யிருக்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் கட்டுத்தறியும் கூடவேதம் சொல்லும் என்று புகழ் பெற்றதும் மூவர் பாடல் பெற்றது மான திருவிசலூரில் 1886-ல் பிறந்தேன், என் முன்னேர்களில் ஸ்ரீராம பத்ர தீக்ஷிதர் என்பவர் விகட வித்தையில் நிபுணராக விளங்கியவர்.

நான் மூன்ருவது பாரம்வரை படித்தேனே வொழிய படிப்பதற்குப் பதில் ரயில் என்ஜின்மாதிரி ஊதி எல்லாரையும் ஏமாற வைத்து வந்தேன்.

ஊரைவிட்டு கால்போன இடங்களுக்குச் சென்றேன். கண்டிரக் கோட்டை ஜமீன்தார், செட்டிமார்கள் ஆதரவு எனக்குக் கிடைத்தது. அந் நாட்களில்எங்குபோனுலும் உபசரிப்பு தான். இல்லை சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும் என்பார்கள். இப்போது என்னடாவென்ருல் பசித்து வருபவனைப் பார்த்து சாப்பிட்டாகி விட்டது போலிருக்கிறது என்று சொல்லுகிருர்கள்.

ஆவுடையார் கோயிலுக்கருகிலுள்ள மாவுடைக் குறிச்சி ராமஸ்வாமி அய்யர் (ராமண்ண) என்பவரிடம் 15 நாட்கள்தான் இவ்வித்தையை கற்க அனுக்ரகம் வாங்கிக்கொண்டேன்.

பழங்கால வித்வான்களான பழனி கிருஷ்ணய்யர் (கடம்) அழகநம்பியா பிள்ளை (மிருதங்கம்) திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் (பிடில்) மாமுண்டியா பிள்ளை அவர்கள், தக்ஷணமூர்த்தி பிள்ளை அவர்கள் (கஞ்சிரா) இவர்களுடைய வாசிப்பை எல்லாம் வாயினலேயே சப்தித்து இன்று நான் செய்து காட்டுகிறேன் என்ருல் அது அபார சாதகம் காரணமாகவே சாத்யமாகிறது. இத்தகைய அரிய வித்தையை பிறருக்கு சொல்லித்தர வேண்டும் என்கிற ஆர்வமும் ஆசையும் இருக்கிறது. ஆனல் இவைகளை எப்படியும் கற்றுக்கொண்டே தீருவது என்கிற திடமுள்ள சிஷ்யர்களை இன்னும் நான் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன். இந்த மாதிரி பிரபல மேதைகளின் அபூர்வவாசிப்புகள் நல்ல சிஷ்யர்கள் மூலமாக நிலைத்திருக்க விரும்புகிறேன்.

விகடவித்தை என்பது முன்காலத்தில் அரசர்களால் மதிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டதாகும். பீர்பால், தெனலிராமன் இவர்கள் ஆதரிக்கப் படவில்லையா? இந்த வித்தையை

தேங்காய் உணர்த்தும் உண்மை.

ஹரியும் சிவனும் ஒன்று என்பதை அநேகம் பேர் அறிவதில்லை. சுவாமிக்கு நைவேத்யம் செய்யும் தேங்காயை உடைத்தால்இரண்டு மூடிகளாகின்றன. ஒன்று தான் சைவம். மற்றென்று வைஷ்ணவம். ஒரு மூடியில் மூன்று கண்கள் இருப்பதை காணலாம். மற்றொரு மூடியில் மூன்று கோடுகள் நாமம் மாதிரி இருப்பதை காணலாம். ஹரியும் சிவனும் ஒன்று என்பதை காட்டவே தான் பெரியோர்கள் நாராயண என்ற பதத்திலிருந்து ரா என்ற எழுத்தையும் நமசிவாயா என்ற பதத்திலிருந்து ம என்ற எழுத்தையும் சேர்த்து 'ராம' என்று செய்திருக்கிருர்கள்.

—விகடம் ராமஸ்வாமி சாஸ்திரிகள்

ரஸித்து விட்டுப்போனல் மட்டும் போதாது. இந்த வித்தை நசித்துவிடாமல் செய்ய போதிய ஆதரவும் அவசியம்.

விகடம் செய்யும்போது பல ஆண்கள், பெண்கள், அசடு, சமத்து, பைத்யம், மிருகம், பட்சி இம்மாதிரி எவ்வளவோ தினுசாக செய்துகாட்ட வேண்டியிருக்கிறது. ஒரே ஜன்மத்தில் இப்படி பல ஜன்மங்களை அனுபவித்து விடுவதால் இத்தொழில் செய்பவர்களுக்கு மறுஜன்மமில்லை என்றுகூடச் சொல்லாம்.

எனக்கு இது மட்டுமின்றி அன்ன தானம் செய்யும் பாக்கியமும் நல்ல புஷ்பங்கள் பூக்கும் நந்தவனம் அமைத்துள்ள பாக்கியமும் கிட்டியிருக்கிறது. ஸ்ரீதர அய்யாவாளின் ஞாபகார்த்த சபா ஒன்றை ஆரம்பித்து நடத்தி அப்பெரியாரின் நினைவை எல்லாருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற அபிலாஷை குடியரசு தினத்தில் தான்பூர்த்தியாயிற்று. திருப்புகழ் மணி. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் ஆரம்பித்து வைத்த அச்சபை இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் ராஜாராம் சங்கீதவித்வான் கே. ஸி. சுப்பிரமணியம் இவர்களை காரியதரிசியாகக் கொண்டு செயல்படவிருக்கிறது. ஸ்ரீதர அய்யாவாளின் உத்ஸவத்தை இன்னும் விசேஷமாகக் கொண்டாட வேண்டியே இந்த ஏற்பாடு செய்துள்ளேன்.

"ஒழிக" ஒழிய வேண்டும்!

'ஒழிக' என்ற வார்த்தை அடியோடு தடை செய்யப்படவேண்டும். அப்போது தான் உலகத்திற்கே சுபிட்சம் ஏற்படும். இந்நாடு பட்டினி என்றால் என்ன என்பதேயே அறியாதது. இப்போதுள்ள நிலைமைகள் சீர்பட்டு அந்த பழைய நிலைமையிலிருந்த நாடு என்று ஏற்படுமோ தெரியவில்லை.

—விகடம்
ராமஸ்வாமி சாஸ்திரிகள்

காங்கிரஸ் கூடிய ஷாஹித் நகர்

இந்திய தேசீய காங்கிரஸின் 61-வது மகாசபை கூட்டம் கூடிய ஷாஹித்நகர் என்ற இடம் ராமனுடைய புதல்வர்களான லவனும், குசனும் பிறந்த இடமென்று கூறப்படுகிறது. ஷாஹித்நகரை ஒரு பகுதியாகப் பெற்றுள்ள அமிர்தசரஸ் சரித்திர பிரசித்திபெற்ற புனிதநகரம். ஜாலியன் வாலாபாக் படுகொலையில் வீரசுவர்க்கம் எய்திய பாரதப் புதல்வர்கள் அமரத்வம் அடைந்த வீர நகரம். இந்தப் படுகொலை 1919 ஏப்ரல் 13-ல் நடைபெற்றது. இந்த இடம் புகழ்பெற்ற பொற்கோயிலுக்கு இரண்டு பர்லாங் தூரத்தில் உள்ளது.



பஞ்சசீலம்

பஞ்சசீலம் என்ற வார்த்தை சமீபகாலமாக சர்வதேச அரங்கில் அதிகமாக அடிபட்டு வருகிறது. இக்கொள்கைகளை நிர்ணயித்து அவைகளை தானும் அனுசரித்து பிறநாடுகளையும் அதை ஏற்கச் செய்வதன் மூலம் உலகில் சமாதானம் நிலவ இந்தியா வழி செய்துள்ளது. இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையின் அஸ்திவாரமே பஞ்சசீலம் தான்.

இக்கொள்கைகளை ரஷ்யா, சீனு, யூகோ, எகிப்து, பர்மா, இந்தோனேஷ்யா, இந்தோ சீனு ஆகிய பல நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த பஞ்சசீலக் கொள்கைகள் எவை?

(1) ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் ஆதிக்கத்திற்கும் பிரதேச எல்லை விஸ்தீரணத்திற்கும் பரஸ்பர, மரியாதை அளிப்பது.

(2) ஆக்ரமிப்பு என்பது கூடாது.

(3) எக்காரணத்தைக் கொண்டும் ஒரு நாட்டின் உள் நாட்டு பொருளாதார அரசியல் கொள்கை பற்றிய விஷயங்களில் மற்ருெரு நாடு தலையிடாமை.

(4) சரி சமத்துவ பரஸ்பர அனுகூலங்கள்.

(5) சமாதான முறையில் ஒன்றுபட்டு வாழ்வது.

இந்த ஐந்து கொள்கைகளையும் உலக நாடுகள் எல்லாமே பின்பற்ற முடியும். இதனுல் பீதி, சந்தேகம் இவை நீங்கி எல்லா நாடுகளும் சரிசமமான நிலையில் முன்னேறுவது சாத்யம்.



பண்டித நேரு இந்த பஞ்சசீலக் கொள்கைகளை விளக்கிப் பேசியிருப்பதாவது:

"ராணுவ அர்த்தத்தில் நாம் பல மில்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் நம மக்களின் தன்னம்பிக்கையில் நமக்கு அசைக்க முடியாத பலம் இருக்கிறது. பீதியுள்ள இந்த உலகில் யாரைக் கண்டும் அஞ்சுவதில்லை. எல்லாருடன் நண்பர்களாக இருக்க விரும்பும் நாம் எதற்காக பயப்பட வேண்டும்? உலக அமைதிக்கு ராணுவ உடன்படிக்கைகளோ அணுக்குண்டுகளோ அல்லது ஆயுதசாலைகளோ அவசியம் என்று நாம் கருதவில்லை நட்பு, ஒத்துழைப்பு இவைகளை ஆதாரமாகக் கொண்ட உடன்படிக்கைகளே அவசியம்.

இந்த பஞ்சசீலக் கொள்கைகளில் மேற்கு நாடுகள் இன்றும் நம்பிக்கை கொள்ளாமல் ராணுவ உடன்படிக்கைகளைச் செய்து வருகின்றன.

அரசியல் அரங்கில் இந்த பஞ்சசீல கொள்கைகள் எவ்வளவு முக்கியமானவையோ அவ்வளவு முக்கியமானவை தனி மனிதனுக்கு வேண்டிய பஞ்சசீலக கொள்கைகளாகும். அந்த ஐந்து குணங்கள், அன்பு, மன உறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத் தன்மை இவைகளேயாகும்.

பஞ்சசீலக் கொள்கையை ஏற்ற நாடுகள், தலைவர்கள்: 1. வியட்மின்: ஹோசிமின் 2. யூகோ: டிட்டோ 3. ரஷ்யா: புல்கானின் 4. சீனா: சூ என் லாய் 5. இந்தோனேஷ்யா: ஜோஜோ 6, எகிப்து. நாஸிர், 7 பர்மா: யூ-நூ 8. சூடான்: அஷாரி 9. ஸாவூதி அரேபியா: ஸாத்.

பாக்டுங் மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் பஞ்சசீலக் கொள்கையை அங்கிகரித்தன.

நூறு வருட சேவை

மார்ச் மாதம் துவக்கத்தில் நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கும் ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி (டீசர்ஸ் காலேஜ்) சென்னையின் கல்வி அபிவிருத்தியில் பெரும்பங்கு கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே மிகப்பழமையான கல்வி ஸ்தாபனங்களில் ஒன்று இக்கல்லூரி. இதில் பயிற்சி பெற்றவர்கள் அநேகர் இன்று மிகப்புகழ் பெற்றுவிளங்குகின்றனர். பிரபலஸ்தர் மகாகனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி, டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் எஸ். இ. ரங்கனாதன் மற்றும் பலர் இதில் படித்தவர்கள்தான். இன்னும் இதில் பயின்ற எவ்வளவோ பேர்கள் ஹெட்மாஸ்டர்களாகவும், பேராசிரியர்களாகவும் இருந்து வருகின்றனர்.

1856 மார்ச் 1உ வேப்பேரியில் மதராஸ் நார்மல் ஸ்கூல் என்ற பெயரில் இந்த ஸ்தாபனம் துவக்கப்பட்டது. இந்த நார்மல் ஸ்கூலில் படிப்பவர்களுக்கு சாதாரணக் கல்வியுடன் போதனாகல்வியும் போதிக்கப்பட்டது. இதில் தேறியவர்களுக்கு 'டிப்ளமோ'க்கள் வழங்கப்பட்டன,

1862 ல் இந்த ஸ்தாபனம் வேப்பேரியிலிருந்து மவுண்ட் ரோடிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. இதிலிருந்து 10 வருஷங்களுக்குப்பின் ஆசிரியர் பயிற்சிக்கு செல்லுபவர்கள் மட்டுமே இக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டனர். 1886-1887 ல் இந்த ஸ்தாபனம் சென்னை சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டு 'எல்-டி' டிகிரிக்கான பயிற்சியை அளிக்க ஆரம்பித்தது. இச்சமயத்தில்தான் இந்த ஸ்தாபனம் சைதாப்பேட்டையில் இப்போதுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. 1900 வருஷத்தில் ஹாஸ்டல் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. 1914ல் 'மானியூவல் டிரெய்னிங்' (கைத்தொழில் பயிற்சி) வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அப்போது சென்னை மாகாணத்தில் இது ஒன்றுதான் ஆசிரியர் பயிற்சி கல்லூரியாக இருந்ததால் மைசூர், ஹைதராபாத், திருவாங்கூர், குடகு ஆகிய இடங்களிலுள்ளவர்களும் பயிற்சிக்கு இங்கு தான் வரவேண்டியிருந்தது. 1921 வரை மாணவிகளும் இதில் சேர்க்கப்பட்டனர். பின்னர் லேடி வெல்லிங்டன் பயிற்சி கல்லூரி ஸ்திரீகளுக்காக ஏற்பட்டுவிட்டதால் மாணவிகளை இதில் அனுமதிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. 1925-ல் கைத்தொழில்களின் பயிற்சியும், 1927-ல் முதியோர் கல்வி இரவு பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த கல்லூரிக்கு பிரின்ஸ்பால்களாக இருந்தவர்கள் ஏ. ஏ. ஹால், டங்கன், ஆர். எம். ஸ்டிராதம், பி. கே. அனந்தநாராயண அய்யர், என். ஆர். கிருஷ்ணமா, ஜே. பி. பிராங்கோ, வி. ஆர். ரங்கனாத முதலியார். இப்போது பிரின்ஸ்பால் பதவியை வகிப்பவர் எம். ஆர். பெருமாள். இக்கல்லூரி இப்போது வருஷத்தில் 150 பட்டதாரிகளை (ஆண்கள் மட்டும்) பி. டி. டிகிரிக்கு பயிற்சி அளிக்கிறது, ஏற்கனவே எல். டி யாக இருந்ததுதான் இப்போது பி. டி. .யாக மாறியிருக்கிறது. இம்மாற்றம் சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு செய்யப்பட்டது. ஒரு வருஷம் தீவிரப் பயிற்சி அளிக்கப்படும் காலத்தில் ஐந்து வாரகாலம் சுமார் 20 பள்ளிகளில் பாடங்களைப் போதிக்கும் பயிற்சி மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இவர்களைத் தவிர சுமார் 40 செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்தின் கீழ் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சி கல்லூரி மேலும் அபிவிருத்தி யடைந்து போதனா முறை ஆராய்ச்சிகள் ஏற்படும் வசதிகளைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★



உஸ்பெக்கிஸ்தான்

ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கு மிடையே சமீபகாலமாக கலாசார தொடர்பு அதிகரித்துள்ளது. ரஷ்யாவிலிருந்து கலைஞர்கள் கோஷ்டி இந்தியாவிற்கும் இந்தியாவிலிருந்து கலைஞர்கள் கோஷ்டி ரஷ்யாவிற்கும் விஜயம் செய்திருப்பதை நாம் அறிவோம்.

உஸ்பெக் நமது நாட்டிற்கு, அந்நியநாடு என்று அழைக்குமளவுக்கு வெகுதூரத்திலில்லை .உஸ்பெக்கின் தலைநகர் டேஷ்கண்ட் மாஸ்கோவை விட டில்லிக்கு சமீபத்தில் உள்ளது. பழங்காலத்திலிருந்தே இந்தியாவிற்கும் உஸ்பெக்கிற்குமிடையே வர்த்தகத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

ஸ்ரீ கே. சுப்ரமணியம் தலைமையில் சென்ற கோஷ்டியில் என். எஸ். கிருஷ்ணன்–டி. ஏ. மதுரம், துர்க்காகோட்டே முதலியவர்கள் சென்றது நினைவிருக்கும்.

அடுத்தபடியாக இந்தியசர்க்கார் உதவி மந்திரி ஸ்ரீ மரகதம் சந்திரசேகர் தலைமையில் தாராசௌத்ரி, கோபிநாத் முதலிய நடன நிபுணர்கள் கொண்ட கோஷ்டியினர் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தனர். இதன்பின் பிரபல நட்சத்திரங்களான நிருபராய், நர்கீஸ், சேதன் ஆனந்த், பால்ராஜ் ஸஹானி இவர்கள் கொண்ட கோஷ்டி ரஷ்யா சென்றது. ரஷ்யாவிலிருந்து பல கலைஞர்கள் கோஷ்டி இந்தியாவிற்கு வந்துள்ளன. சமீபத்தில் உஸ்பெக் கோஷ்டியினர் சென்னைக்கும் வந்திருந்தனர்.

இந்திய எல்லையைத் தாண்டியதும் இந்தியாவிலிருந்து இந்திய கோஷ்டி இறங்கிய முதல் ரஷ்யநகரம் உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரான டேஷ்கண்டு தான். இந்த நகரத்திற்கு விஜயம் செய்ததுபற்றி ஸ்ரீமதி தாராசௌத்ரியும் ஸ்ரீமதி நிருபாராயும் இக்கட்டுரை எழுத விவரங்கள் பலவற்றைத் தெரிவித்தனர். அவர்களுக்கு 'திங்கள்' சார்பில் நன்றி.

உஸ்பெக்கிஸ்தான் நடனகோஷ்டியாரின் நடனங்களைக் கண்டும் அவர்களைப்பற்றிய விவரங்களை அறிந்த பின்புந்தான் நமக்கும் அவர்களுக்கு மிடையே கலை, கலாசாரம் முதலிய விஷயங்களில் பல ஒற்றுமைகள் இருப்பதை அறிய முடிந்தது. இந்திய முஸ்லிம்களுக்கும் உஸ்பெக் வாசிகளுக்கு மிடையே அநேக விஷயங்களில் ஒருமைப்பாடு காணப்படுகின்றன. அவர்கள் பாரசீக, அரபு வார்த்தைகளைப் பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். பெரிய கஞ்சிரா போன்ற "தாயிரா" "தப்ஸ்" என்ற தோல் இசைக் கருவிகளை உஸ்பெக் கோஷ்டியினர் உபயோகித்தனர். இதே பெயருள்ள இசைக் கருவிகள் இந்தியாவிலுள்ள முஸலிம்களால் உபயோகிக்கப்பட்டு, வருகின்றன. உஸ்பெக் நடன கோஷ்டியில் மிக இனிமையாகப் பாடியபெண்மணியின் பெயர் ஹனீபா நஜிரோ. இந்திய முஸ்லிம் பெண்கள் அநேகர் இப் பெயரை வைத்துக்கொண்டிருக்கின்றனர். நஜிரோ என்பது தகப்பன் பெயராகவோ அல்லது அவர்களது கணவன் பெயராகவோ இருக்க வேண்டும். இவருடைய பாட்டு குரான் ஓதும்போது கேட்கப்படும் இசைபோல இருந்தது. ஆகவே இவ்வளவு நெருங்கிய ஒற்றுமை காணப்படும் இத்தேசத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

உஸ்பெக்கிஸ்தான் சரித்திர பிரசித்திபெற்ற சம்பவங்கள் நிறைந்த தேசமாகும். இந்த நாட்டு நகரங்களின் சிறப்பு பல திசைகளிலும் பரவியிருந்தது. இவற்றின் புகழை ஆங்கிலக்கவி கீட்ஸ் பாடியிருக்கிறார். இந்திய சரித்திர மாணவர்களுக்கு

உஸ்பெக் தேசீய உடையில் பண்டிதநேரு

போக்காராவும், சாமர்க்கண்டும் தெரியாமல் இருக்க முடியாது.

உஸ்பெக்கிஸ்தான் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த தேசீய குடியரசு சமஷ்டியிலுள்ள 16 நாடுகளில் ஒன்ருகும். மத்திய ஆசியாவின் இதய பாகத்தில் உள்ள மூன்று குடியரசுகளுள் உஸ்பெக்கிஸ்தான் ஒன்று. மற்ற இரண்டு டாஜிகிஸ்தான், கிரிகிஜியா என்பவையாகும். இக்குடியரசுகள் எல்லாம் சோவியத் யூனியனில் சமபங்காளிகள். இவை இஷ்டப்பட்டால் பிரிந்து போவதற்கும் உரிமை பெற்றிருக்கின்றன.

சோவியத் குடியரசு ஆரம்பத்திலிருந்தே தேசங்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக் கொண்டது. சோவியத் அனேகமாக ரத்தம் சிந்தாமலேயே அதிகாரத்தைக் கைப்பற்றியது. 1822-ல்தான் ஐக்ய சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு அங்குரார்ப்பணமாயிற்று.

உஸ்பெக், டாஜிக் இவ்விரு குடியரசுகளை சேர்ந்த ஜனங்களின் கலாசாரம் மிகவும் சரித்திரப் புகழ் வாய்ந்தது என்ருலும் லெனின் பிறப்பதற்கு முன்னமேயே அவர்களுடைய கலாசாரம் நசித்துப் போய்விட்டது. மதத்தின் பெயரால் ஜார் சக்கிரவர்த்தியின் பினுமி அரசர்களாகிய அமீர்கள் அநீதிகளையும் அக்கிரமங்களையும் செய்து வந்தனர். சோவியத் புரட்சி அவர்களுடைய ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது ஜனங்களை சித்திரவதை செய்வதற்கு அமீர்கான் உபயோகித்து வந்த கருவிகளும், அவர்களுடைய இதர சொத்துக்களும் இப்போது சோவியத் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரம் டேஷ்கண்ட். உஸ்பெக்கிஸ்தானில் ஏழைகள் வசிக்கும் வீடுகள் மண் குடிசைகள்தான். ஆனல் ஒவ்வொரு வீட்டிலும் மின்சார விளக்குகள் எரிகின்றன. டேஷ்கண்ட்மீது விமானத்தில் பறந்தால் மேல்புரம் நட்சத்திரங்கள் கொண்ட வானத்தையும் கீழே மின்னொளி வீசும் பூமியையும் காணலாம். உஸ்பெக்கிஸ்தானில் மின்சார வசதி பெருத கிராமமே கிடையாது. உஸ்பெக்கி

ஸ்தானிலுள்ளவர்கள் பெரும்பாலும் முஸ்லீம்களே என்ருலும் பெண்கள் 'பர்தா' தரிப்பதில்லை. சில பெண்கள் மேனுட்டினர் மாதிரி உடைதரிக்கிருர்கள்.

மொகலாயர்கள் இந்தியாவிற்கு உஸ்பெக்கிஸ்தானிலிருந்து தான் வந்தவர்கள். டேஷ்கண்ட் நகரத்தைப் பார்த்தால் லக்ஷ்மணபுரியோ அல்லது அமிர்தசரஸ் நகரைப் போலவோ தோன்றுகிறதாம்.

குல்பர்கா என்ற புகழ்பெற்ற பட்டுத்துணி உஸ்பெக்கிஸ்தானில் மிக விசேஷம். இந்த பட்டுத்துணிகளை உஸ்பெக் மலைஜாதியினர் காஷ்மீருக்கு கொண்டுவந்து விற்பது வழக்கம். உஸ்பெக்கிஸ்தானில் பருத்தி ஏராளமாக உற்பத்தியாகிறது.

டேஷ்கண்டில் பருத்திப் பண்ணைகள் நிலக்கரிசுரங்கங்கள், தவிர எஃகு தொழிற்சாலைகளும் இருக்கின்றன. கைத்தொழில் துறையில் உஸ்பெக்கிஸ்தான் வெகுவாக முன்னேறியிருக்கிறது. பழமையை உஸ்பெக்கியர்கள் உதறித்தள்ளிவிடவில்லை புதுமைகளையும் ஒதுக்கி விடுவதில்லை.

உஸ்பெக் நடனராணி கெய்தானி. இவர் சென்னைக்கு வந்திருந்தார்.

உழைப்பதற்கு சளைக்காதவர்கள் என்பதை அவர்களைப் பார்க்கும்போதே யாரும் முடிவு செய்யலாம்.

டேஷ்கண்டின் மத்தியில் மிக அழகான சதுக்கம் இருக்கிறது. அதில் பிரம்மாண்டமான ஸ்டாலின் உருவச் சிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த சதுக்கத்தில் ஆறு முக்கிய ரஸ்தாக்கள் சந்திக்கின்றன.

டேஷ்கண்டில் மழை சேர்ந்தாற் போல எட்டுமாதங்களுக்குப் பெய்யாமலேயே இருந்துவிடுமாம். ஆகவே செயற்கை நீர்ப்பாசன முறைகளில் விசேஷ கவனத்தை உஸ்பெக்கியர்கள் காட்டி வருகிறார்கள். 250 மைல் நீளமுள்ள பாசன கால்வாய் என்பதை 1939-ம் வருஷத்தில் 45 நாட்களில் உஸ்பெக்கியர்கள் வெட்டியிருக்கின்றனர்.

உடை, கட்டிடம் எல்லாவற்றிலுமே தேசீயத்தைஉஸ்பெக்கியர்கள் கடைப்பிடிக்கின்றனர். பண்டித நேருவுக்கும் இந்திராகாந்திக்கும் உஸ்பெக்கியர்கள் தங்கள் தேசீய உடைகளை அன்பளிப்பாக அளித்தது நினைவிருக்கும். சென்னை வந்த உஸ்பெக் நடன கோஷ்டியினர் கவர்னர் ஸ்ரீ பிரகாசாவுக்கும் இந்த தேசீய உடையை அன்பளிப்பாக அளித்துள்ளனர். சுமார் 20 வருஷங்களுக்கு முன் சர்க்கார் கட்டிடம் ஒன்றை ரஷ்ய இன்ஜினியர் கட்டினர். அக்கட்டிடம் இவர்களது தேசீய உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாக இல்லை. அதை இடித்துத் தள்ளிவிட்டு தங்களுக்கு இஷ்டமான முறையில் உஸ்பெக்கியர்கள் கட்டிடத்தை அமைக்கவிருக்கின்றனர்.

உஸ்பெக் இலக்கியத்தின் தந்தையான அலிஷெர் நவாப் என்பவருக்கு உஸ்பெக்கியர்கள் சிலை வைத்து கௌரவித்திருக்கிறார்கள். அலிஷெர் 500வருஷங்களுக்குமுன் வசித்தவராம்.

உஸ்பெக் மொழிக்கே உருவம் அமைத்துக்கொடுத்தவர் இவர். உஸ்பெக் கவி அலிஷெர் பாரதியார் போல் முண்டாசுகட்டியவர். ஆனால் தாடி இவருக்கு உண்டு. இந்த சிலைக் கருகாமையில் டெலிவிஷன் ஸ்டுடியோவும், ஒரு ஸ்டேடியமும் கட்டப் பட்டு வருகிறதாம். டேஷ்கண்டிலுள்ள ஆபரா தியேட்டருக்கும் அலிஷெர் நவாபின் பெயரேவைக்கப் பட்டிருக்கிறது.

டேஷ்கண்டிற்கு அடுத்த படியாக முக்கியமாக உள்ள நகரம் டார்மெஸ் என்பது. இது அமூநதிக்கரையில் ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ளது. மகா அலெக்ஸாந்தர் இந்த நகரத்தை நிர்மாணித்தவர். இந்த கட்டிடங்களில் கிரீஸ்கலை பாணிதென் படுகிறது . அல்காரிஸம் என்கிற அல் ஜீப்ரா புஸ்தகம் எழுதப்பட இந்த கட்டிடங்களின் பாணி, சித்திரங்கள் மிகவும் உதவியதாக கூறப்படுகிறது. சித்திரசிற்பவேலைகள் எல்லாம் கையினால் செய்யப்பட்டவையே.மத்தியஆசியாவில் அகன்ற வாயுள்ள பாத்திரம் தான் சுபிட்சத்தின் சின்னமாக கருதப் படுகிறது. (ஐரோப்பாவில் கொம்பு தான் சுபிட்சத்தின்சின்னம்.) ஆகவே இந்தப் பாத்திரம்தான் சித்திரங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

கல்வித்துறையில் உஸ்பெக்கியர்கள் பின் தங்கிவிடவில்லை. பிரான்ஸில் 10000 பேர்களில் 36 பேர்களுக்கு உயர்தரக்கல்வி கிடைக்கிறது. ஸ்விட்ஸர்லாந்தில் 10000 பேர்களில் 23 பேர்களுக்கும், ஆப்கானிஸ்தானத்தில் 3 பேர்களுக்கும், உயர்தரக் கல்வி கிடைக்கிறது. ஆனால் உஸ்பெக்கிஸ்தானத்தில் 10000 பேர்களில் 73 பேர்களுக்கு உயர்தரக் கல்வி கிடைக்கிறது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நம் நாட்டில் அநேகமாக ஏழைகள் வசிக்கும் குடிசைகள் ஒதுங்கிய இடங்களிலும் நல்ல வீடுகள் உள்ள இடங்கள் தனிப்பட்டும் காணப்படும். ஆனால் உஸ்பெக்கிஸ்தானில் வீடும் குடிசையும் கலந்தே காணப்படுகின்றன. குடிசையில் காணப்படும் ஸ்திரீகள் வறுமையில் உழல்பவராக இருப்பவர்கள் என்று யாராவது நினைத்தால்ஏமாந்துதான் போக வேண்டும்.

உஸ்பெக்கிஸ்தானில் வாழ்கைத்தரம் உயர்ந்தே காணப்படுகிறது. விவசாயிகளில் பலர் கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுப் பண்ணையில் வேலை செய்பவர்களுக்கு சம்பளம், கோதுமை, குழந்தைகளுக்கு கல்வி, உணவு எல்லாம் அளிக்கப் படுகிறது. ஆஸ்பத்திரிகள் பிரசவ விடுதிகள் எல்லாமே கூட்டுப் பண்ணையில் நடக்கின்றன.

இந்த உஸ்பெக்கிஸ்தானின் விஸ்தீரணம் 65,000 சதுரமைல். ஜனத் தொகை 50,50,000.

இதர சோவியத் குடியரசுகள்

பான்னே-கரேலியா, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா, மால்டேவியா இவ்வைந்தும் 1940-ல் சோவியத் சமஷ்டியில் சேர்த்துக் கொள்ளப் பட்டன.

மேற்கில் ஒயிட் ரஷ்யா, உக்ரைன் குடியரசுகளும், காகஸஸில் ஆஜர்பைஜான், ஜார்ஜியா, ஆர்மேனியா இம் மூன்றும் இருக்கின்றன.

காஸ்பியன் கடலுக்கு கிழக்கில் காஸக், டாக்கோமன் இருக்கின்றன. ரஷ்ய சோவியத் குயடிரசுக்கு அடுத்த பெரிய குடியரசு உக்ரைன்தான்.

சோவியத் ரஷ்யாவில் அடங்கிய 16 சோஷலிஸ்ட் குடியரசுகளுக்குள் 17 சிறிய சுய ஆட்சிக் குடியரசுகள் அடங்கியிருக்கின்றன. அடுத்தபடியாக சுயாட்சி பிரதேசங்கள் இருக்கின்றன. இன்னும் சில உட்பிரிவுகளுக்கு தேசீய ஜில்லாக்கள் என்று பெயர். உக்ரைனில் நூற்றுக்கு மேற்பட்ட யூதசோவியத்துக்கள் இருக்கின்றன. உக்ரைனில் எந்தப் பகுதியிலும் வசிக்கும் யூதக் குழந்தைகளும் ரஷ்ய பாஷை படிக்கவிட்டாலும் கட்டாயம் உக்ரேனிய பாஷை படிக்க வேண்டும்.

சோவியத் ரஷ்யா முழுவதும் பொதுவான பொருளாதார திட்டத்தின் மூலம் இணைக்கப் பட்டிருக்கிறது. கலாசார வேற்றுமைகள் ரஷ்யதேசீய ஜனங்களுக்கிடையே பிளவுகளை உண்டுபண்ணவில்லை. இவ் விஷயத்தை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். ★



கிரிக்கெட் நிபுணர் ஹட்டன்

முதல்தர கிரிக்கெட்டிலிருந்து பிரிட்டிஷ் கிரிக்கெட்நிபுணர் எல். ஹட்டன் விலக முடிவு செய்திருப்பது இங்கிலீஷ் கிரிக்கெட்டிற்கு மட்டுமின்றி கிரிக்கெட் உலகிற்கே பெரும் நஷ்டமாகும். கேப்டன் பதவிக்குத்தான் முற்றிலும் பொருத்தமானவர் என்பதை இவர் நிரூபித்து விட்டார்.

இவருக்கு இப்போது வயது 39 தான் ஆகிறது. கிரிக்கெட் ஆடுவதையே தொழிலாகக் கொண்ட யாரும் இந்த வயதில் கிரிக்கெட்டிலிருந்து விலக ஒரு நாளும் விரும்பமாட்டார்கள். கிரேஸ், ரஞ்ஜி, ஹாப்ஸ், ஹமாண்ட் ஆகிய நிபுணர்களுடன்தான் இவர் ஒப்பிடக்கூடியவர்.

பந்தை அடிப்பதில் மகா நிபுணர் இவர். கால்களின் அருகில் வந்துவிட்டதைக் கூட லாகவமாக அடித்து

எஸ். ஸ்ரீராமன்,

சென்னை கிரிக்கெட் சங்க கௌரவ காரியதரிசி

விளாசக்கூடிய திறமை பெற்றவர். இங்கிலாந்தின் கோஷ்டிக்கு தலைமை வகித்த முதல் நிபுணர் இவர்தான் என்றே சொல்லாம். இதற்குமுன் கிரிக்கெட்டையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு கேப்டன் பதவிகள் கொடுக்கப்படுவதில்லை. அமெச்சூர்கள்தான் கேப்டன்களாக நியமிக்கப்பட்டு வந்தனர். இன்று அவர் கிரிக்கெட்டிலிருந்து விலகினாலும் சுமார் 25 வருஷ காலம் அவர் கிரிக்கெட்டில் இருந்து விட்டார். அவர் யார்க்ஷையரைச் சேர்ந்தவர். இவர் ஆடவில்லை என்றால் அந்த கிரிக்கெட் ஆட்டத்தையே பார்க்க எந்த யார்க்ஷையர்காரனும் போகமாட்டானாம்.

லார்ட்ஸில் இவர் அடித்த செஞ்சுரி மிகப் பிரமாதமானது. நீண்ட காலம் அவர் மனதில் எண்ணிய எண்ணம் அன்றுதான் ஈடேறியது. அந்த மூன்று மணி நேர ஆட்டத்தில்தான் பந்து அடிப்பதில் மிகத் திறமைசாலி என்பதைக் காட்டி விட்டார். இவரைப் போல் (ஆப் டிரைவ்) பக்கவாட்டில் மட்டையைச் சுழற்றி பந்தை அடிக்கும் நிபுணர்களைக் காண்பது அரிது. அன்று மட்டும் அவர் ஐந்தே கால் மணி நேரம் ஆடியிருக்கிறார். 150 ரன்களில் 20 தரம் (பவுண்டரி) எல்லைக்கோடு வரை அடித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் 1938-ல் நடைபெற்ற ஓவல் டெஸ்டில் இவர் ஆட்டம் அபாரம். இவருக்கு அப்போது வயது 22. இவர் அன்று 13 மணி 20 நிமிஷம் ஆடியிருக்கிறார். டெஸ்ட் கிரிக்கெட்டிலேயே இது ஒரு ரிகார்டு.

1952 ல் இந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் இங்கிலாந்து சென்றிருந்தபோது அங்கு மிக பிரபலமானவர் கிரிக்கெட் நிபுணர் ஹட்டன் தான். ஆஸ்திரேலியர்களிடமிருந்து வெற்றிசின்னத்தை 20 வருஷங்களுக்கு பின்பு அதாவது ஜார்டனுக்குப் பிறகு பிரிட்டிஷ்காரர்களுக்கு வெற்றி கொடுத்தவர் ஹட்டன்தான். 1954 ல் பாகிஸ்தானுடன் ஆடவிருந்த டெஸ்ட் மாட்ச்கள் இரண்டில் இவர் ஆட முடியாமல் போய்விட்டது. இதற்குக் காரணம் நரம்புத் தளர்ச்சியேதான். முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இவர் முன்புபோல ஆட முடியவில்லை.

இவர் 1952 ல் கேப்டனாகி, பிரிட்டனில் இந்தியாவுடன் ஆடிய டெஸ்ட் பந்தயங்கள் மூன்றில் வென்றார். ஒன்றில் 'ட்ரா' வாகி பிரிட்டனின் பெருமையை ஓங்கச்செய்தார். அடுத்தபடியாக அவர் நியூஜிலாந்து கோஷ்டிக்கு எதிராக பிரிட்டிஷ் கோஷ்டிக்கு தலைமை வகித்து நடத்தினார். 1953ல் ஆஸ்திரேலியாக் கோஷ்டியை முறியடித்து வெற்றிச்சின்னத்தை பிரிட்டனுக்குப் பெற்றுக் கொடுத்தார். தென்னாப்பிரிக்காவுக்கு இவர் தன் கோஷ்டியுடன் அழைக்கப்பட்ட போது இவர் முதுகு வலி காரணமாக செல்ல முடியவில்லை. ஆஸ்திரேலியாவில் ஓவர் லிஸ்டில் இவர் 364 ரன்கள் எடுத்து ரிக்கார்டை ஏற்படுத்தினார். சுமார் 25 வருஷங்களுக்கு முன்பு இவர் பிரிட்டனின் ஆரம்ப 'பேட்ஸ்மேன்' ஆக புகழ் பெற்றவர். இத்தகைய கிரிக்கெட் டெஸ்ட் நிபுணர் இந்திய மண்ணில் ஆடும்முன்பே கிரிக்கெட்டிலிருந்து விலகுவது மிக துரதிருஷ்டவசமென்றே சொல்லவேண்டும். ★

தேவிகுளம்-

திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தின் தமிழர்வாழ் பகுதி 9 தாலுககாக்கள். இதில் அகஸ்தீஸ்வரம், தோவளை, கல்குளம், விளவங்கோடு ஆகியவைகளும் செங்கோட்டையின் கிழக்குப் பகுதியும் சென்னையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

செங்கோட்டையின் மற்ெருரு பகுதி கமிஷன் அனுமதித்தும் இந்திய சர்க்கார் அனுமதிக்காததாகும்.

மற்ற பகுதிகளான நொய்யாற்றின் கரை, பீர்மேடு—தேவிகுளம். சித்தூர் இவை திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்துடனேயே சேரவேண்டும் என்று முடிவாகியுள்ளது.

திருவாங்கூரின் தென் தாலுக்காக்கள் பண்டைய தமிழகம். அது பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது. பாண்டியநாடு வீழ்ச்சிக்குப்பின் இத்தென் தாலுக்காக்கள் 3 யூனிட்டுகளாகப் பிரிந்தன.

(1) மண் கோட்டையால் வளைக்கப்பட்ட புறத்தாய்நாடு. (2) மங்கலம் முதல் மணக்குடி வரையுள்ள நாஞ்சில் நாடு, (3) கல்குளம், விளவங்கோடு நொய்யாற்றின்கரை முதலிய தாலுக்காக்கள் கொண்ட வேணுடு.

ஒன்பதாவது நூற்ருண்டுவரை இப்பகுதிகளில் தமிழ்பாஷை ஒன்றுதான் இருந்தது. பின்னர்தான் மலையாள பாஷை தோன்றியதாக பேராசிரியர் கால்டுவெல் தன் 'கம்பேரடிவ் திராவிடியன் கிராமர்' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிருர். இப்பகுதிகளில் பண்டைக்காலத்தில் தமிழ்தான் வழங்கிவந்த தென்பதற்கு பல கல்வெட்டு ஆதாரங்கள் இருக்கின்றன.

செங்கோட்டை தாலுக்காவின் அமைப்பை நோக்கினுல் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை ஒரு திட்டு பிரதேசமாக இருப்பதைக் காணலாம். செங்கோட்டை, கொல்லம் ரயில்பாதை ஏற்படுகிறவரை திருவாங்கூர் ராஜ்யத்திற்கும் செங்கோட்டைக்கும் தொடர்பு இல்லாமல்

இழக்க முடியாது!

"திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத்தில உள்ள எல்லா தமிழ் பிரதேசங்களையும், சென்னை ராஜ்யத்தில் சேர்க்க வேண்டும் என்று தமிழ் மக்கள் தெரிவித்த நியாயமான கோரிக்கை நிராகரித்ததற்கு இந்திய சர்க்கார் காரணம் தெரிவிக்கவில்லை. இந்திய சர்க்கார் காரணம் தெரிவித்திருந்தால் நிலைமையை பரிசீலனை செய்வதற்கு இடம் ஏற்படும். தமிழ் மக்களுக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டு விட்டது. இந்திய சர்க்காரின் இத்தகைய முடிவைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்கள் கட்சியை சென்னை சர்க்கார் திறமையாக எடுத்துக்கூறி வாதிக்கத் தவறிவிட்டனர். செங்கோட்டையின் ஒரு பகுதி திருவாங்கூர் கொச்சியில் இருக்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் தீர்ப்பளித்திருப்பது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும் இந்த முடிவை சென்னை சர்க்கார் ஏற்றுக் கொண்டதாக தி-கொ. முதல் மந்திரியே தெரிவித்திருக்கிருர்...... தமிழ் மக்கள் இந்திய சர்க்காரின் முடிவைக் கண்டு மிகுந்த கவலையடைந்திருக்கிருர்கள். அவர்கள் இவ்வாறு வருத்தப்படுவது முற்றிலும் நியாயமே. ஆகவே இந்திய சர்க்கார் தமிழ் மகக்ளின் உணர்ச்சிக்கு மரியாதை செய்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டும்.

—ம. பொ. சி.

-பீர்மேடு

இருந்த இந்தப்பகுதியில் வசிக்கும் 95 சதவிகிதம்பேர் தமிழர்களேயாவர்.

தேவிகுளம் பீர்மேடு இவ்விரண்டும் நேரிய மங்கலம் பாலமும், பள்ளி வாசல்ரோடும் திறக்கப்படும் முன் மேற்கிலிருந்து பிரவேசிக்க வழி இல்லாமலேயே இருந்தது. இப்பிரதேசங்கள் மண்ணுடியர், கண்ணன் தேவன் போன்ற குறுநில மன்னர்கள் ஆட்சியில் இருந்தன. எனவே இத்தாலுக்காக்களின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள். பள்ளிவாசல்ரோடு திறந்தபின்பு தான் மலையாளிகள் இங்கு வந்து குடியேறினர்.

தேயிலைத் தோட்டங்களுக்குப் பிரபலமான பீர்மேடு மலைப்பாங்கானது. அங்குள்ள ஒரு மலையின் அடிவாரத்தில் ஒரு புனித முஸ்லீமின் உடல் அடக்கமாயிருக்கின்றது. இவருடைய முழுப் பெயர் பீர்முஹம்மது பஹாவுத்தீன் என்பது. இவர் தான் இந்தச் செழிப்பான மலைப்பிரதேசத்தில் முதன் முதலாகக் குடியேறி காபி, தேயிலைத் தோட்டங்கள் பயிரிட்டார். அதனுல் இந்தப் பகுதிக்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

கோவை ஜில்லாவில் ஒரு திட்டுப் பிரதேசமே சித்தூர். இதில் வசிப்பவர்கள் பெரும்பாலும் தமிழர்களே.

திருவாங்கூரிலும் கொச்சியிலும் நீண்டகாலம் தமிழே சர்க்கார் பாஷையாக இருந்திருக்கிறது என்பதை பழங்கால தஸ்தாவேஜிகளைக் கொண்டே நிரூபிக்கலாம். பிற்காலத்தில் சர்க்கார் சேவைகளில் மலையாளிகள் அதிகரித்ததால் மலையாள பாஷையாக மாறிற்று.

தேவிகுளத்திலுள்ள ஆனைமுடி சிகரத்தின் உயரம் 8841 அடி. தமிழ்நாட்டுடன் இத்தமிழ்ப் பகுதிகள் சேரவேண்டும் என்பதற்கான போராட்டத்தை முதன் முதலாக திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 1949 ஏப்ரல்மாதம் ஆரம்பித்தது. பலர் சிறை சென்றனர். சர்தார் படேல் ஸ்ரீ காமராஜரை தூதராக அனுப்பி வைத்தார். அவர் அளித்த வாக்குறுதியின்பேரில் போராட்டம் நின்றது.

கிளர்ச்சி வேண்டாமே!

"ராஜ்ய சீரமைப்பு கமிஷன் யதாஸ்துமீது இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவுகளை நாம் ஏற்றுக் கொள்வோம். இதை எதிர்க்குமாறு மக்களைத் தூண்டுவதுதவறு. ஏனெனில் கிளர்ச்சிகள் நாட்டை பல வீனப்படுத்தும். தேவிகுளம், பீர்மேடு தாலுக்காக்கள் நமக்குக் கிடைக்க வேண்டுமென்ற விருப்பத்திலும் அக்கறையிலும் நான் எவருக்கும் பின்னடைந்தவனல்ல. ஆனுல் ஒரு விஷயத்தைக் கிளர்ச்சிக்காரருக்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ராஜ்ய சீரமைப்பு போன்ற விஷயத்தில் பல வகை கருத்துகளும் பல வகை கோரிக்கைகளும இருப்பது சகஜம். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சொந்தமான தாவா இருக்கத்தான் செய்யும். ஆகையால் நாட்டிலே உள்ள மூன்ருவது தரப்பான பெரும் ஸ்தாபனம் பல ராஜ்யங்களின் கோரிக்கைகளை நன்ருக சீர்தூக்கிப் பார்த்து இப்போது அதன் தீர்ப்பை கூறியுள்ளது. சில அம்சங்களில் தீர்ப்பு தமிழ் நாட்டுக்கு வரோதமாக இருக்கலாம். தேவிகுளம் பீர்மேடு சம்பந்தமாக நமது தாவாவை இழந்து விட்டோம என்பது பற்றி நான் வருத்தமடைகிறேன்.

இந்தத் தீர்ப்பு நமக்கு திருப்திகரமாக இல்லாவிடிலும் நாம் உலக நாடுகளிடையே கூடி வாழ்தல் முறை வேண்டுமென்று பேசி வருவதால் அதை நாட்டில் நாம் அனுஷ்டிக்க வேண்டியது அவசியம்.

—எம். பக்தவத்ஸலம்.

கும்பகோணத்தில் மகாமகம்

கும்பகோணம் என்றதுமே எல்லோருக்கும் மகாமகம் தான் நினைவுக்குவரும். இந்த வைபவம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறையே நிகழ்வதாகும். இந்த தடவை மகாமகம் பதினோராவது ஆண்டிலேயே நடைபெறுகிறது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களின் விருப்பப்படி மகாமகம் பிப்ரவரி 25ல கொண்டாடப்படும்.

இப்புண்ணிய தினத்தில் மகாமகக் குளத்தில் நீராடுவது மிகவும் புண்ணியம் என்று கருதப்படுகிறது.

கங்கை, யமுனை முதலிய ஒன்பது முக்கிய நதிகளும் தங்கள் ஜலத்தில் பாபம் செய்தவர்களின் பாபங்களை தாங்கள் ஏற்றுக்கொள்வதால் அவைகளைப் போக்குவதற்காக ஒன்பது கன்னிகைகளாக உருக்கொண்டு இக்குளத்திற்கு வந்து நீராடி பாபங்களைப் போக்கிக் கொண்டு தங்கள் அம்சங்களில் பாதியுடன் அக்குளத்தில் தங்குகிறார்கள். இக்காரணம் பற்றியே அக்குளத்திற்கு கன்னியா தீர்த்தம் என்று பெயர் வந்தது. இந்த ஒன்பது கன்னிகைகளின் விக்ரகங்களை மகாமகக் குளத்தை யொட்டியுள்ள காசி விசுவநாத ஸ்வாமி ஆலயத்தில் காணலாம். இந்த நவகன்னிகைகள்: கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, வேகவதி (கிருஷ்ணை) பாலாறு, குமரி (துங்கபத்திரா), சரயூ. இவர்கள் உள்ள அக்கோவில் சுமார் கி.மு. 200 வருஷங்களுக்குமுன்பு கட்டப்பட்டது.

மகாமக ஸ்நானக் கிரமமாவது:— பஞ்சக் குரோத ஸ்தலங்கள் எனப்படும் திருநாகேசுவரம், தாராசுரம், திருவேரகம் (சுவாமிமலை) பாடலவனம் (கருப்பூர்), திருவிடமருதூர் ஆகிய ஸ்தலங்களில் முதலில் யாத்திரை செய்தபின்பே கும்பகோணம் வரவேண்டும். மகாமகக் குளத்தை ஒரு முறை வலம் வரவேண்டும். பின்னர் சங்கற்பம் செய்து கொண்டு சந்தனம், புஷ்பம், காதோலை, கருகமணி, நாணயங்கள் இவைகளைத் தீர்த்தத்திலிட்டு நீராடவேண்டும்.

ஐந்து முறை ஸ்நானம் செய்த பின்பு பிதுர்தர்ப்பணம் பலிஹோமம் செய்து முடித்து தானங்கள் செய்ய வேண்டும். பின்னர் குளத்தை வலமாக வந்து காசிவிசுவநாதரையும் நவகன்னிகைகளையும்தரிசித்து பின் அரசமரப்பிரதக்ஷிணம் செய்யவேண்டும். பின்னர் காவேரியில் நீராடியபின் கும்பேசரை தரிசித்து இதரகோவில்களுக்குச் செல்வதுதான் முறை. அன்று பகலில் மட்டும் உணவு அருந்தி விட்டு மறுநாள் குளத்தில் ஸ்நானம் செய்து பின்னர் விரதத்தை முடிக்க வேண்டும்.

குளத்தைச் சுற்றியுள்ள 16 மண்டபங்களையும் கோவிந்த தீக்ஷிதர் என்பவர் கட்டினார். 16–ம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்ட அச்சுதப்ப நாயக்கனின் முதல் மந்திரி இவர். இந்த 16 மண்டபங்களில் 16 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

மடாதிபதிகள், காமகோடி பீடாதிபதி மற்ற மடத்து தலைவர்கள் எல்லோரும் ஸ்தானத்திற்கு வருவதுண்டு. அக்காலத்தில் மகாராஜாக்களும் மகாமக ஸ்நானத்திற்கு வருவதுண்டு என்று தெரிகிறது. விஜயநகர அரசர் கிருஷ்ண தேவராயர் கி. பி. 1517ம் வருஷம் மகாமகத்திற்கு வந்து ஸ்நானம் செய்து, தானங்கள் செய்திருப்பது பற்றி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ★

கும்பகோணத்தில் மகாமகம்

பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை மாசி மாதம் பௌர்ணமியன்று இந்தியாவிலுள்ள புண்ணிய நதிகள் ரூபத்திலுள்ள நவகன்னிகைகளும் இந்த மகாமகக் குளத்திற்கு வந்துவிடுகிறார்கள் என்பது ஐதீகம். ஆகவே இந்த புண்ய தினத்தில் இக்குளத்தில் ஸ்நானம் செய்வதை ஹிந்துக்கள் மிக விசேஷமாகக் கருதுகிறார்கள். அன்று இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் லக்ஷக்கணக்கான யாத்ரீகர்கள் இந்த ஸ்நானத்தை உத்தேசித்து இங்கு கூடுகிறார்கள்.

மகாமகக்குளக் கரைகளில் ஒன்பது கோவில்கள் உள்ளன. குளத்தை யொட்டினாற் போலுள்ள காசி விசுவநாதஸ்வாமி கோவிலில் இந்த ஒன்பது கன்னிகைகளும் காட்சியளிக்கிறார்கள்.

போட்டோக்கள்: என். ராமகிருஷ்ணா





ஸ்ரீ சாரங்கபாணி கோவிலின் உட்புற பிரகாரத்தைச்சுற்றி வரும்போது முன் கோபுரம் தெரிகிறது.........இடது புறம் ஸ்ரீ கும்பேஸ்வரர் கோவிலின் பிரம்மாண்டமான கோபுரம் காக்ஷியளிக்கிறது.



மகாமகக் குளத்திற்கு அருகாமையிலுள்ள ஸ்ரீ காசிவிஸ்வநாதர் ஆலயம்

ஸ்ரீ கும்பேஸ்வரர் ஆலயத்திலுள்ள தெப்பக்குளம்





ஸ்ரீ சாரங்கபாணி தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.........
பொற்றாமரைக் குளத்திலிருந்து கோவிலின் முழுத்தோற்றம்.





ஸ்ரீராமஸ்வாமி கோவி
லில் காணப்படும் மற்
ளெரு சிலை...ஸ்ரீ நாகேஸ்
வரர் ஆலயத்தில் உள்ள
இத்தக் கல் தேரின் சக்க
ரம் ஒரே கல்லால் செய்
யப் பட்டது.

சிற்பக்கலை சறநது விளங்கும் ஸ்ரீ ராம ஸ்வாமி கோவிலில் தூண் ஒன்றில் குதிரை வீரன் சிலை செதுக்கப்பட்டிருக்கிறது......கும்பேஸ்வரர் பவனிவரும் தேர்கள் அலங்கரிக்கப்பட்டு தயாராக நிற்கின்றன.



ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலில் உட்புறம் ராமாயணக் கதையை படங்களாகச் சித்தரித்திருக்கிருர்கள். ஆரம்பத்திலுள்ள சேஷசயனக் காட்சி.

ஸ்ரீ ராமஸ்வாமி கோவில்

ஸ்ரீ நாகேஸ்வர ஸ்வாமி கோவில்





மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

சந்தோஷ சந்திப்பு!

மாஸ்கோவில் போல்ஷாய் தியேட்டரில் எங்கள் நடனக் கச்சேரி முடிந்த பின்பு தியேட்டரின் கிரீன் ரூமில் ஒரு சிறு விருந்து நடைபெற்றது. ரஷ்யாவின் மந்திரிகளில் ஒருவர் (சிறு தாடியுடன் கூடியவர்) எங்களைப் பாராட்டிப் பேசினர். என்னை அருகில் அழைத்து ரஷ்ய பாஷையில் ஏதோ பாராட்டி என் கையை முத்தமிட்டார். அவர் பாஷை எனக்குப் புரியவில்லை. நானும் பதிலுக்கு வந்தனம் தெரிவித்தேன். அந்த விருந்து முடியும் வரை அவர் யார் என்று எனக்குத் தெரியாது. பின்னரே அவர் ரஷ்யாவின் பாதுகாப்பு மந்திரி புல்கானின் என்பது தெரியவந்தது. (அப்போது மாலன்கோவ் ரஷ்யாவின் பிரதம மந்திரி.) சமீபத்தில் புல்கானின் சென்னைக்கு விஜயம் செய்த போது அவரை சந்திந்தேன். என்னை மாஸ்கோவுக்கு வந்து நடனக் கச்சேரிகள் செய்ய அழைத்தார். அவர் பிரதமர் ஆகுமுன்பே ரஷ்யப் பிரதமருடன் கைகுலுக்கிய முதல் இந்தியப் பெண்மணி நான்தான் என்பதை சொல்வதில் தவறு இல்லை. அந்தச் சம்பவத்தை நான் என்றென்றும் மறக்க முடியாது.

தாரா சௌத்ரி.
சென்னை,

இறகொடிந்த பறவை!

மறக்க முடியாத சம்பவம்! மனதை அறுக்கும் மாருத - ஆருத - வேதனை. எடுத்தியம்ப - எழுதுங்கால் நடுங்கிறது. என் பதினேழாம் வயதிலே கால் பந்தாட்டம் வாழ்வில் ஊனத்தை உண்டாக்கி விட்டது. ஒரு நாள் கடற்கரையில் கால் பந்தாட்டம் விளையாடினேன். காலிலே அன்று பட்ட அடி என்வாழ்விலே பேரிடியாக இருக்குமென்று அன்று நான் நினைக்கவே இல்லை.

சென்னை, திருப்பத்தூர், புதுக்கோட்டை, நெய்யூர் முதலிய மருத்துவ நிலையங்களில் 'மருத்துவ நிலையப் பறவை'யாக பத்தாண்டுகளுக்கு மேல் இருந்தேன். செய்த சஸ்திர சிகிச்சைகளுக்கு கணக்கே இல்லை. 'காயம்' என்பதற்குத் தமிழிலே உடல் என்று பொருள் இருந்தாலும், சஸ்திர சிகிச்சையால் என் கால்களிலே ஏற்பட்ட காயங்களைத்தான் 'காயம்' என்று என்னல் உணர முடிகிறது.

இப்பொழுது கால்கள் இரண்டும் இடுப்பிற்குக் கீழ் மடக்க முடியாமல் நீட்டியபடியே கிடக்கின்றன; நடக்கவோ, மடக்கவோ முடியாது என்னுல். நடக்கவிரும்பினல் இருவர் தோளில் தொங்கிக் கொண்டுதான் வரவேண்டும்.

நாற்சுவரையே உலகமாக - கட்டிலையே நாற்காலியாக, எனது மார்பையே மேசையாகக் கொண்டு என் கலைப்பணி நடக்கிறது. பறந்து திரிய வேண்டிய பறவை இதோ இறகொடிந்து கிடக்கிறது. இளமொட்டிலே கசக்கப்பட்டு விட்டது என் வாழ்வு. புள்ளிமான் போன்று துள்ளித்திரிய வேண்டிய நான் கட்டிலிலே கிடக்கிறேன்.

'சுவர்க்க நீக்கம்' என்ற அமர காவியத்தைப் படைத்த மில்டன், குருடன். சங்கீத மேதை பீதோவான் செவிடன். உலகை ஆட்டிப்படைத்த ஜூலியஸ் ஸீஸர் காக்கை வலிப்புக் காரன். வால்டேர், கீட்ஸ், டிராட்ஸ்கி, ஸீஸரோ காச நோயாளர்கள். கொய பெல்சுக்குப் பிறவியில் பாதம் சூம்பி இருந்தது. கெய்சருக்குக் கையில் கோளாறு. ரூஸ்வெல்டுக்குக் காலில் ஊனம். நம் நாட்டிலிருந்த இரட்டைப் புலவரில் ஒருவர் குருடர், மற்றவர் நொண்டி. இருப்பினும் இவர்க ளெல்லாம் தங்கள் குறைகளை உண ராது மனித குலத்துக்கு ஆற்றிய சேவை மகத்தானது, மகோன்னத மானது. இதை உணர்ந்துதான் நான் எனது மறக்கமுடியாத சம்பவத்தை மறந்து விட்டுக் கலைப்பணியாற்று கிறேன்.

கலைப்பித்தன்,
தரங்கம்பாடி.

சேவையில் இன்பம்!

அப்போது நான் காலரா ஓவர்ஸி யர் வேலை பார்த்துக் கொண்டிருந் தேன். ஒரு கிராமத்தில் ஒன்பது வயதுள்ள ஒரு பெண் குழந்தைக்கு காலரா நோய் கண்டிருந்தது.

குழந்தையின் நலத்தில் தாய் அக் கறை காட்டவில்லை, காரணம் முந் தின நாள் அவள் கணவன் காலரா வினால் மாண்ட வருத்தம்! நான்கு குழந்தைகளை எப்படிக் காப்பது என்ற பிரச்னை.

'நாமும் அப்பாவைப்போல் இறந்து விடுவோமோ' என்ற பயம் குழந்தை யின் முகத்தில் நன்ருகத் தெரிந்தது. குழந்தையை என் இருப்பிடம் கொண்டு வந்தேன்.

''பாப்பா, உனக்கு ஒன்றும் இல்லை. பயப்பட வேண்டாம். கொஞ்சம் மருந்து தருகிறேன். குடித்து விடு, மாலைக்குள் சுகமாய் விடும்'' என் றேன்.

''எனக்குத்தான் ஒன்றுமில்லையே, மருந்து எதுக்கு?''

''இனிமேல் ஒண்ணும் வராமல் பாதுகாத்துக் கொள்வதற்காக'' என் றேன் குழந்தையிடம்.

மருந்தைக் கொடுத்து வீட்டிற்குக் கொண்டுபோய் படுக்க வைத்தேன்.

மறுநாள் காலை அதே வீட்டிற்குச் சென்றேன். சென்றவுடன் என் காலைக் கட்டிக் கொண்டது அந்தக் குழந்தை. அன்புடன் அணைத்து ஒரு முத்தமும் ஒரு ரூபாயும் கொடுத்து விட்டு விடை பெறறுக் கொண்டேன்.

இன்னொரு கிராமத்தில் ஒரு நிகழ்ச்சி. என் வேலையை முடித்து விட்டுப் படுத்திருந்தேன். ஒரு தாய் பரக்கப் பரக்க ஓடி வந்து ''ஐயா, ஐயா'' என்று எழுப்பினுள். உடன் சென்றேன், இருபது வயதான அவள் பையனுக்குக் காலரா நோய் கண்டிருந்தது.

முழு நம்பிக்கையுடன் என் வேலையி லீடுபட்டு அந்தப் பையனுக்கு மருந்து கொடுத்தேன்.

மறுநாள் அந்தத் தாய் என்னிருப் பிடம் வந்து, ''உங்கள் கையினுல் மருந்து கொடுத்தீர்கள். பையன் பிழைத்துக் கொண்டான், பெரிய மனது பண்ணி இதை வைத்துக் கொள்ள வேண்டும்'' என்று இரண்டு ரூபாய்களை என்னிடம் நீட்டினுள்.

''அம்மா, எனக்கு சர்க்காரில் சம்ப ளம் கொடுக்கிருர்கள். எனக்கு இது தானே வேலை. உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் இருந்தால் போதும்'' என்றேன்.

மன்ருடினுள் சிறுவனின் தாய். ஆனுல் நான் மறுத்து விட்டேன்.

கடைசியாக, இரு கைகளையும் கூப் பியவாறு ''நீங்க நல்லாயிருக்கணும்'' என வாய் நிறைய வாழ்த்திச் சென்ருள்.

நான்கு வருடங்களுக்கு மேலாகியும் சேவையில் இன்பம் ஊட்டிய இவ்விரு நிகழ்ச்சிகளும் என் பசுமை நினைவி லிருந்து இன்னும் மறையவில்லை.

எம். எஸ். முத்துகிருஷ்ணன்,
பெரியாறு அணைக்கட்டு.

இயற்கை கொண்டாடும் தீபாவளி!

மின்னல்

'பரணிகுமார்'

இடி, மின்னல் என்றால் பயப்படுகிறவர்கள் பல்லாயிரம் பேர்கள் என்றால் சந்தோஷப்படுகிறவர்கள் ஒரு ஆயிரம் பேராவது உண்டு. மின்னல் மின்னுகிறது. அதைத் தொடர்ந்து சில வினாடிகளில் இடி இடிக்கிறது. அப்போது கள்வர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள். ஆமாம். நீங்கள் சில பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருப்பீர்களே! கதவெல்லாம் தாள் போட்டது போட்டபடி இருக்கும், ஒரு சுவற்றிலே திருடன் எப்படி அந்த இரும்புத் துண்டால் இடம் காட்டுகிறானோ அந்த இடம் மந்திரம் போட்டது போல இடிந்து விழுந்து விடும். உள்ளே புகுந்து ஓசைப்படாமல் திருடிக் கொண்டு போய்விடுவான். அவன் கையிலிருக்கும் அந்த இரும்புக் கம்பிக்கு "கன்னக்கோல்" என்று பெயர். மின்னல் மின்னி, இடி இடிக்கும்போது திருடன் இரும்புக் கம்பியை பூமியிலே புதைத்து வைப்பான். இடி இடித்த பிறகு சாணத்தில் இருக்கும் அதை எடுத்துக் கொண்டு தன் முயற்சியில் இறங்குவான். மின்னலாலும் இடியினாலும் அதற்கு ஏதோ ஒரு பலமான சக்தி ஏற்பட்டு விடுவதாகக் கூறுவார்கள்.

பயப்படுகிறவர்களில் பலவகை உண்டு. குடும்பத்தின் மூத்த மகன் வெளியே சென்றிருந்தால் இடி அவன் தலையில்தான் விழும் என்ற நம்பிக்கை இன்றும்கூட இருந்து வருகிறது. 'மின்னல் கண்ணைப் பறிக்கும். இடி உயிரையே பறித்து விடும்' என்பார்கள். இடி, மின்னலின் போது பச்சை மரத்தடியில் நிற்கக் கூடாது; வெட்ட வெளியில் குப்புறப் படுத்துக் கொண்டு விடவேண்டும் என்கிறார்கள். எல்லோரும் காரணம் தெரிந்தே இப்படிக் கூறுகின்றனர் என்று நாம் சொல்லிவிட முடியாது. இடி இடிக்கும்போது 'அர்ஜுனா அர்ஜுனா' என்பார்கள். 'மின்னலைப் போல் தோன்றி மறைந்தார்' என்பாள் காதலி தோழியிடம்! இடி தேவனுடைய ஆயுதம் என்று நம்புகிறவர்கள் உண்டு. 'அர்ஜுன, பல்குன, பார்த்திப, கிரீடி, தனஞ்செயஹ' என்று வீட்டில் பெரியவர்கள் சொல்கிறார்கள். இடி இடிக்கும் போது பாசுபதாஸ்திரத்துடன் அர்ஜுனன் நிற்பானாம். நாம் 'அர்ஜுனா.. அர்ஜுனா' என்றால் இடி அவனிடம் பயந்து இடிக்காதாம். கிரேக்கர்கள் முன்பு தங்கள் கடவுள் அவரது எதிரிகள் மீது இடி என்ற ஆயுதத்தைப் பிரயோகித்ததாகக் கருதினார்கள்.

ஆனால் மின்னலும் இடியும் எப்படி ஏற்படுகின்றன? விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பின் மின்னலையும் இடியையும் பற்றி நமக்கு பல விஷயங்கள் தெரிய வருகின்றன. மின்னலும் இடியும் சேர்ந்தே ஏற்படுகின்றன. மின்னலைப்பற்றி அறிந்து கொள்ளு முன் ஆரம்பப் பொருளான அணுவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு அணுவும் ஒரு மத்திய நியூக்லஸ் என்ற பாகத்தைக் கொண்டிருக்கிறது. அதைச்சுற்றிப் பல எலெக்டிரான்கள் (மின் அணுக்கள்) வேகமாகச் சுழன்று கொண்டே இருக்கின்றன, இவற்றில் நெகடிவ் மின்சக்தி உள்ளது. இந்த எலெக்ட்ரான்களின் எண்ணிக்கை அந்தந்த அணுவைப் பொருத்ததாக இருக்கும். ஹைட்ரஜன் அணுவில் ஒரு எலெக்ட்ரான் உள்ளது. ஆனால் மற்ற பொருள்களின் அணுவில் இந்த எலெக்ட்ரான்களின் எண்ணிக்கை சுமார் நூறுவரை உள்ளது.

சில அணுக்களில், முக்கியமாக செம்பு, வெள்ளி போன்ற உலோகங்களின் அணுக்களில் இந்த எலெக்ட்ரான்கள் அவ்வளவு சக்தியுடன் அணுவைச் சுற்றுவதில்லை, அவற்றை சுலபமாக ஒரு அணுவிலிருந்து மற்றொரு அணுவுக்கு அனுப்பிவிட முடியும். அந்த அணுக்களின் ஓட்டத்தையே மின்சார ஓட்டம் என்கிறோம். ஒரு பொருளிலுள்ள எலெக்ட்ரான்களின் எண்ணிக்கை, அதன் குறித்த எண்ணிக்கையைவிடக் குறைந்தால்,

கண்ணைப் பறிக்கும் மின்னல் ஜோதி

அதாவது அதிலிருந்து சில எலெக்ட்ரான்களை நாம் நீக்கி விட்டால், அது பாஸிடிவ் மின் சக்தி பெற்று விடுகிறது.

இவ்விதம் பாஸிடிவ் மின்சக்தி பெற்ற அணுவின் அருகில் நெகடிவ் மின்சக்தி பெற்ற அணுவந்தால், நெகடிவ் மின்சக்தி அணு தனது அதிகப்படியான எலெக்டரான்களை பாஸிடிவ் மின்சக்தி பெற்ற அணுவை நோக்கி அனுப்பும். இவை ஒன்றை ஒன்று ஈடு செய்து கொள்கின்றன. இந்த இரு சக்திகளின் அளவு அதிகமாயிருந்தால் அவற்றை ஒன்றையொன்று தொடும்படிச் செய்யவேண்டிய அவசியமில்லை, அந்த அதிகப்படியான எலெக்ட்ரான்கள் நெகடிவ் அணுவிலிருந்து இடைவெளியைத் தாண்டிச் சென்று பாஸிடிவ் அணுவை அடையும். அப்போது தான் மின்பொறி ஏற்படுகிறது. இந்த மின்பொறி எலெக்ட்ரான்கள் அல்ல. சக்திவாய்ந்த இந்த அணுக்கள் செல்லும் வேகத்தில் சூடுபெற்று ஜ்வலிக்கும் காற்றைத்தான் நாம் பொறியாகப் பார்க்கிறோம்.

மின்னல் எப்போதும் இத்தகைய எதிர் எதிர் மின்சக்தி பெற்ற அணுக்களிடையே ஏற்படுகிறது. இத்தகைய அணுக்கள் அடுத்தடுத்த மேகங்களிலோ மேகத்தின் அடிப்புறத்திலும் பூமியின் மேற்புறத்திலுமோ காணப்படும். பொதுவாக ஒரு மேகத்தில் சேர்ந்திருக்கும் நீர்த்திவலைகளில் நெகடிவ் மின்சக்தி தங்கியிருக்கிறது. அதிகப்படியான நெகடிவ் மின்சக்தி மேகத்தில் சேர்ந்து விட்டால், அது பூமியின் மேற்பரப்பில் அதற்கு அருகிலிருக்கும் பாஸிடிவ் மின்சக்தியுடைய அணுக்களை நோக்கிப் பாய்கிறது. அப்போது தான் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஏற்படுகிறது.

மின்னல் ஒரே தொடர்ந்தமின் பொறியாக இருக்க வேண்டியதில்லை. பல படிப்படியான தொடர்ந்த மின் பொறிகளாகவும் இருக்கலாம். முதலில் மின்சாரம் பூமிக்குச் செல்ல ஒரு தடவை குறைந்த பாதையை நிர்ணயித்த பிறகு, அதன் மூலம் அணுக்கள் வேகமாகப் பாய்ந்து செல்லும் போது மின்னல் ஏற்படுகிறது. இதன் வேகம் ஒரு செகண்டுக்கு இருபதினாயிரம்

முதல் ஒருலக்ஷம் மைல் வரை இருக்கக்கூடும். இவ்விதம் மேகததிலிருந்து வரும் மின்பொறிகள். மின்சாரம் பாய்ந்து செல்லும் பொருளைத்தேடி வருவதால்தான் உயர்ந்த கட்டிடங்கள், மரங்கள்மீது மின்னல் பாய்ந்து விடுவதைப் பார்க்கலாம். மின்னலின் வெளிச்சம் ஏராளமாக ஏற்படும் உஷ்ணத்தின் பலனாகும். அந்த உஷ்ணத்தினால் அதன் பாதையிலிருக்கும் காற்றை திடீரென்று விஸ்தரிக்கச் செய்கிறது. அப்போது வேகமாக வெளிச்செல்லும் அலைகள் அழுத்தமாக இருக்கும். அவை செல்லும் சப்தமே இப்படியாகும். மின்னலைப் பார்த்த சில வினாடிகள் கழித்தே இடி சப்தத்தைக் கேட்கிறோம். இதற்குக் காரணம் ஒளி செல்லும் வேகம் மிக மிக அதிகம் என்பதுதான். ஒலி ஒரு செகண்டுக்கு சுமார் ஆயிரத்து நூறு அடிதான் செல்கிறது. மின்னலுக்கும் இடிக்கும் இடையில் ஏற்படும் காலத்தை அளந்து மின்னல் ஏற்பட்ட இடத்தை நிர்ணயிக்க முடியும். மின்னல் என்பது மின்சாரத்தின் ஒரு விளைவு என்பதை முதன் முதலில் நிரூபித்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற விஞ்ஞான மேதையாவர். அவரது பிரசித்தி பெற்ற 'காற்றாடி சோதனை' மூலம் அவர் இதை நிர்ணயித்தார்.

மின்னலை தற்காலத்தில் செயற்கையில் உண்டாக்குகிறார்கள். இதனால் அசல் மின்னலைப் பற்றிப் பல விஷயங்களை அறிய முடிகிறது. அசல் மின்னலினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்க செயற்கை மின்னல் பரீட்சை உதவுகிறது. நீங்கள் இடி தாங்கியைப் பார்த்திருப்பீர்கள். உயர்ந்த கட்டிடங்களின் உச்சியில் வைக்கப்படும் ஒரு உலோகத் தண்டுக்குத்தான் இடிதாங்கி என்று பெயர். அதனுடனும் பூமிக்கடியில் வைக்கப்படும் உலோகத் தகட்டுடனும் ஒரு கம்பி இணைக்கப்படும். இதனால் அந்தக் கட்டிடத்தில் மின்னல் பாயாது என்று சொல்ல முடியாது. ஆனால் அது மின்னலைச் சுலபமாக கிரகித்து அதில் வெளிப்படும் மின்சக்தியால் அபாயம் ஏற்படாத முறையில் தரையினுள் செலுத்தி விடுகிறது. இரும்புக் கட்டிடங்களுக்கு சாதாரணமாக மின்னல் — இடியால் சேதம் ஏற்படுவதில்லை. எப்போதும் மின்னல், இடியுடன் மழை ஏற்பட்டால் மரத்தடியில் தங்குவது தவறு. மின்னலின் மின்சாரத்தை மரம் சுலபமாகக் கிரகிக்கக் கூடியது. அதன் கீழே நின்றால் நம் மீதும் மின்சக்தி பாயக் கூடும். மின்னல், இடி ஏற்படும்போது நம் மீது ஈரம் இல்லாமல் இருப்பது நல்லது. மின்னலைக் கண்டு நாம் பயப்படவேண்டிய அவசியமில்லாவிட்டாலும் அதைத் தகுந்த முறையில் தடுக்க வழி தேட வேண்டியது அவசியம்.

கடவுள் தவறு செய்பவனின் கண்களை மின்னல் மூலம் குத்திவிடுவார் என்கிறார்கள். 'உன் தலையில் இடி விழ' என்று விளையாட்டாகச் சொல்லுகிறார்கள். இடியைப் பற்றிய ஹாஸ்ய மொழி இது! இவற்றில் நமக்கு நம்பிக்கை இல்லாவிடிலும் மின்னல் ஆபத்து விளைவிக்கும் தன்மையுள்ளது என்பது ஒப்புக் கொள்ளத் தக்கதே! மின்னலுக்கு மின்சார சக்தி உண்டு என்பதை நாம் மறுக்க இயலாது! இயற்கையின் விந்தையே விந்தை!

" இடிக்குப் பயந்து மரத்தடியில் பதுங்காதே! "

காவிய சிருஷ்டி

இலக்கிய நாடு

பேராசிரியர் நாகராஜன் எம். ஏ.

இப்போது எங்கு பார்த்தாலும் நாட்டை உருவாக்கவும் சமூகத்தைச் சீர்திருத்தி அமைக்கவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் எத்தகைய நாட்டை நாம் இலட்சியமாகக் கொள்ளுதல் வேண்டும் என்று சிந்திப்பது அவசியம். ஏனெனில் இலட்சியம் இல்லாத வாழ்க்கை, இலட்சியம் இல்லாத முயற்சி வீணேயாகும்.

"கற்பனைத்திறன் மூலம் வாசகர்களை இவ்வுலகினின்றும் எடுத்துச் சென்று இலட்சிய உலகில் உலாவ விடுவோன் எவனோ, அவன் தீர்க்க தரிசனம் பெற்ற இலக்கிய கர்த்தா" என்றான் மேனாட்டுக் கலைஞன் ஒருவன். கம்பன் தன் அரும்பெரும் காவியத்திலே அதை நன்கு நிறைவேற்றியிருக்கிறான். அவன் ஓர் இலட்சிய நாட்டை சிருஷ்டித்திருக்கிறான். நாம் கம்பனோடு அந்நாட்டில் நுழைவோம்.

அங்கு முதலாவதாக நாம் காணும் காட்சி என்ன? உயரிய மலைகள், பரந்த கடல்கள், கருத்த மேகங்கள், காலத்து மழை—ஆனால் பாலைவனமானால் எவ்வளவு மழை பெய்தாலும் வீணல்லவா? அப்படியல்ல இந்நாட்டில்! வள்ளல்களைப்போல் வானம் பொழிய, நீர் தழைத்து வெள்ளம் நதியாக ஓடுகிறது. புகழ்மிக்க சூரிய குல மன்னர்கள் பல்லாண்டுகளாக இந்நாட்டை ஆண்டுவருகிறார்களாம். ஆகவே அந்த தர்மபூமியை வளமும் வனப்பும் மிகுந்ததாகச் செய்கிறதாம் சரயு என்னும் ஜீவநதி. இது கவிஞருக்கு முலைப்பாலூட்டிச் சீராட்டிக் குழந்தைகளை வளர்க்கும் தாயை நினைவூட்டுகிறது. கம்பன் பாடலைப் பாருங்கள்.

இரவிதன் குலத்து எண்ணில்பல்
வேந்தர்தம்
புரவு நல்லொழுக்கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை
அண்ணது இவ்
உரவு நீர்நிலத்து ஓங்கும்
உயிர்க்கு எலாம்.

அடுத்தபடியாக நாம் இந்நாட்டில் காணுவது செழிப்பான நன்செய் வயல்கள். மருதம் என்னும் அரசி கொலு வீற்றிருப்பதாக நில வளத்தை வர்ணிக்கிறான் கவிஞன். அவ்வரசியின் முன் மயில்கள் ஆடுகின்றனவாம்; தாமரை விளக்கம் தாங்குகிறதாம்; பல்விதமான இசை முழங்குகிறதாம். இவ்வாறாக இயற்கையிலேயே ஒரு கலை அரங்கு நிகழ்கிறதாம்.

இன்னும் சற்றுமுன் சென்றால் ஓர் ஊர் தென்படுகிறது. ஆனால் அதற்குள் நுழையுமுன்பே ஊர்ப்புறத்துள்ள சோலையைக் காண்கிறோம், அங்கே சந்தன மரங்களும், சண்பக மரங்களும், மலர்ச் செடிகளும், நிறைந்து காட்சி அளிக்கிறது அச்சோலை. அதில் இயற்கை அழகுக்கு இடையே கலைக் கழகங்கள் அமைந்துள்ளன. பெண் மணிகள் ஓடி ஆடி பந்து பயில்கின்றனர். அழகுக்கலை விரும்பும் ஆடவர்கள் இப பெண்களின் கண்களிலிருந்தே அருங்கலைகளையெல்லாம் தெரிந்து கொள்ளுகிறார்கள். ஆகவே, அச்சோலை அறிவுக் கோயிலாகவும் அழகுக் கோயிலாகவும் விளங்குகிறது,

சோலையைத் தாண்டிச் சென்றால் நாம் ஊருள் நுழைகிறோம். நுழையும் போதே பலவிதமான விழாக் காட்சிகளைக் காண்கிறோம். நாகரிகமும் பண்பாடும் இன்பமும் நிறைந்த கொண்டாட்டம். இவற்றைப் பார்த்துக்கொண்டே ஒரு சாதாரண வீட்டினுள் புகுவோம். அறுசுவை உண

வுடன் விருந்தினர் சூழ உண்பதைக் காண்கிறோம்.

"முந்து முக்கனியில்...தாமும் விருந்தொடும் தமரினோடும் அந்தணர் அமுது அருத்தி அயில்வுறும் அமலைத்து எங்கும்" என்கிறான் கவிஞன்.

பொன்னும் மணியும் அணிகலனாக அணிந்த மங்கையர் 'இல்லை' யென்றிரப்போருக்கு வாரி வழங்கும் காக்ஷியைக் காணலாம்.

இனி, அந்நாட்டு அரசாங்கம் எத்தகையது? வலிமையைத் துணை கொள்ளாது அன்பைத் துணை கொண்டு நடக்கிறது அரசாங்கம். அந்நாட்டில் நல்லறமும், மனச் செம்மையும், அருளும்தான் சமுதாயத்தைத் தாங்கும் தூண்கள். அரசை ஏற்று நடத்தும் தலைவரோ நற்குணங்களின் உறைவிடம். அன்பில் பெற்ற தாயையும், நன்மை தருவதில் தவத்தையும், தீயதை உறுத்துவதில் நேர்மையும், தீமையைப் போக்குவதில் மருந்தையும், அறிவுச் சுடரையும் ஒத்திருக்கிறார் அத்தலைவர்.

தாயொக்கும் அன்பில்;
தவமொக்கும் நலம் பயப்பின்;
சேயொக்கும முன் நின்று
ஒரு செல்கதி உய்க்கும் நீரால்,
நோயொக்கும் என்னின்
மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவு ஒக்கும்
எவர்க்கும் அன்னான்.

இத்தகைய தலைவரைக் கொண்ட நல்லரசாட்சியிலே பொருளும் பொங்குகிறது; ஒழுக்கமும் ஓங்குகிறது.

மேலும், இந்நாட்டில் ஒரு புதுமை உண்டு. முன்னையோர்கள் அரசனை உயிர் என்று கூறி முடியாட்சியை சிறப்பித்தது போக, நாட்டு மக்களை கம்பன் உயிர் எனவும், அரசனை அவ்வுயிரைத் தாங்கும் உடல் எனவும் கூறிக் குடியாட்சியைச் சிறப்பித்துக் கூறுகிறான். எதேச்சாதிகாரியாக இல்லாமல், நாட்டு மக்களின் பிரதிநிதியாக இருந்து அவர்கள் நலனை வளர்க்கிறான் அவ்வரசன். எத்தகைய கருத்துப் புரட்சி!

நெல்லும் உயிர் அன்றே,
நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்.

— (புறநானூறு)

வையம் மன்னுயிர் ஆக.
அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்
அன்ன மன்னன்.

— (கம்பராமாயணம்)

இனி, கம்பனுடைய இலட்சிய நாட்டில் கிடைக்காதன எவை? அங்கு மக்களிடையே குற்றம் இல்லை. அகால இறப்பு இல்லை, செம்மை அற்ற சிந்தனை இல்லை, அரசனுக்குத் தண்டனை விதிக்க வாய்ப்பு இல்லை. வறுமையால் வாடுவோர் இல்லை. பகைமை இல்லை. ஆகவே வள்ளல் தன்மைக்கோ, வலிமைக்கோ வாய்ப்பு இல்லை. எல்லோரும் எல்லா நற்பொருளும் இயற்கையாகவே பெற்றுள்ளனர். எனவே இல்லாதார் ஒருவருமில்லை, ஆகையால் இல்லாதவர்கள், உடையார்கள் என்ற சொற்கள் பழக்கத்தில் இல்லை.

எல்லாம் எல்லாருப்
பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை,
உடையார்களும் இல்லை மாதோ!

இத்தகைய ஓர் இலட்சிய நாட்டைத் தன கற்பனையின் மூலம் சிருஷ்டித்த கம்பன், 'அந்நாடு கற்பனையாக மட்டும் நின்றுவிட வேண்டியதில்லை; அதை இவ்வுலகிலே உருவாக்க முடியும்' என்ற உறுதியுடன் அதற்கான வழியையும் வகுத்திருக்கிறான். உயர்ந்த இலட்சியங்களுடன் கூடிய உடன்பாட்டுக் கல்வியை மனிதருக்கெல்லாம் வேற்றுமை இன்றி அளிக்க வேண்டும். அங்ஙனம் செய்தால் அக்கல்வி கேள்வியைப் பரப்பும்; நன் முயற்சியைத் தூண்டும்; அன்பை ஊட்டும்; அறவாழ்க்கையைத் தோற்றுவிக்கும்; பேரின்பம் அளிக்கும். இக்கருத்துக்கள் அடங்கிய கம்ப சித்திரத்தைப் பார்ப்போம்:

ஏகம் முதல் கல்வி முளைத்து
எழுந்து எண்இல் கேள்வி
யாகம் முதல்திண் பணைபோக்கி
அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித்
தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது
போலும் அன்றே! ★

மனோதத்துவம்

பிஞ்சு நெஞ்சில் துவேஷம்!

ராசு

அன்று ஞாயிறுக்கிழமை. என் சகோதரன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என் மதனி பலகாரமும் காபியும் எனக்குக் கொண்டு வந்து வைத்தாள். என் சகோதரனுக்கு இரண்டு குழந்தைகள். மூத்தவனுக்கு எட்டுவயது இருக்கும். இளையவனுக்கு ஐந்து வயதிருக்கும். என் அருகிலேயே அவர்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கும் பலகாரமும், பானமும் கொண்டு வந்து கொடுத்தாள் மதனி.

மூத்தவனுக்குக் காபியும், இளையவனுக்கு ஓவல்டின்னும் கொண்டு வந்து வைக்கப்பட்டது, இருவரும் அதைப் பருகினர். மூத்தவன் காப்பியைமனத்திருப்தியோடுஅருந்தவில்லை. அவன் கவனம் முழுவதும் இளையவன் ஓவல்டின்னை அருந்துவதிலேயே இருந்தது.

"ஏண்டா, உனக்கு ஓவல்டின் பிடிக்காதா?" என்று கேட்டேன் நான்.

அவன் பதில் சொல்வதற்குள் உள்ளிருந்து என் மதனி பதில் அளித்தாள்.

"சின்னவனுக்கு டாக்டர் ஓவல்டின் கொடுக்கும்படி சொன்னார். உடம்பு தேறவேயில்லை!"

நான்கு மாதங்களுக்கு முன்பு ஜுரத்தில் படுத்தவன் அதிலிருந்து உடம்பு நோஞ்சலாகவே இருக்கிறது.

"எல்லாத்திலேயும் இப்படித்தான், சித்தப்பா, உடம்பு சரியாயில்லே, சரியாயில்லேன்னு அவனுக்கு பழமும் பிஸ்கோத்தும் வாங்கிக்கொடுக்கிரு, எனக்குமட்டும் ஒன்றும் கிடையாது!"

அவன் உள்ளத்திலிருந்து பீறிட்டெழுந்த வார்த்தைகள் என்னைதிடுக்கிடவைத்தன. எவ்வளவுஆக்ரோஷம் நிறைந்த வார்த்தைகள்! அவன் உள்ளத்தில் வளர்ந்து வரும் துவேஷத்தைப் படம் பிடித்துக் காட்டியது அவனது பதில். இதை என் மதனி உணரவில்லை. குழந்தை என்னமோ தனக்கும் வேண்டுமென்று கேட்கிருன் என்ற நினைப்பில் இருக்கிருள். அவன் உள்ளத்தில் தளிர்விடத்தொடங்கியுள்ள இத்துவேஷ மனப்பான்மை நாளடைவில் அண்ணன் தம்பியரிடையே தீராப் பகை என்ற அளவில் வந்து நிற்கப் போகிறது என்பதை அவள் சிறிதும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

அவளைக் குற்றம் சொல்வதில் பிரயோசனம் இல்லை. எவ்வளவு தூரத்துக்குப் போகும் என்பது அவளுக்குத் தெரியாது. குழந்தையின் உள்ளத்திலே ஏற்படும் இச்சிறு மாறுதல் துவேஷத்தின் வித்து என்பது அவளுக்குத் தெரியாது.

என் சகோதரன் வீட்டோடு இது நின்று விடவில்லை. இன்றைய உலகில் அனேகமாக இம்மாதிரி நிகழ்ச்சியை ஒவ்வொரு வீடுகளிலும் காணலாம். ஒரு குழந்தைக்கு மறறோர் குழந்தை வித்தியாசம் என்றநிலை எங்கும் காணப்படுகிறது. இரண்டாவது குழந்தை பிறந்ததும் மூத்த குழந்தையிடம் உள்ள பிரியம் ஓரளவு குறைந்து விடுவதை நாம் நிதர்சனமாகக் காணலாம்.

குழந்தைகள் உள்ளம் நிர்மலமானது; கள்ளங்கபடமற்றது; தான் வேறு, மற்றகுழந்தை வேறு என்ற பாகுபாடே அதன் உள்ளத்தில்

தோன்றுவதில்லை. தன்னைப் போன்றே மற்ற குழந்தைகளும் என்ற எண்ணமே அதன் உள்ளத்தில் பரவி நிற்கிறது.

எவ்வளவுக் கெவ்வளவு குழந்தையின் உள்ளம் நிர்மலமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு மிருதுவாக இருக்கும். எந்தச் சிறு விஷயமும் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும் பருவம் அது. இந்நிலையில் அவர்கள் உள்ளத்தில் துவேஷத்தை வளர்த்து விட்டால் அப்புறம் அதை மாற்றுவது இயலாத காரியம். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?' என்பன போன்ற மூதுரைகள் இதை நன்கு வலியுறுத்தும்.

'தான் உயர்ந்தவன். மற்றவன் தாழ்ந்தவன்' என்ற மனப்பான்மை குழந்தையின் உள்ளத்திலே புகுந்திடாதவாறு நாம் மிகுந்த ஜாக்கிரதையாக வளர்க்கவேண்டும் இருகுழந்தைகளிடையே வித்தியாசத்தை நாம் புகுத்தக்கூடாது. ஒருவனுக்கு ஒருவித துணி மணி வாங்கினுல், மற்றவனுக்கும் அதே போன்று வாங்கித்தர வேண்டும். வைத்தியர் ஓவல்டின் கொடுக்குமாறு சொல்கிறுர், அந்தக் குழந்தைகுகு மட்டும் ஓவல்டின் கொடுத்துவிட்டு நின்று விடுவது நல்லதல்ல. முதல் நாள் காபியைக் குடிக்கும்போது குழந்தை தனக்கும் ஓவல்டின் வேண்டும் என்று கேட்பான். தாயார் கொடுக்க மறுப்பாள், வைத்தியர் அவனுக்குக் கொடுக்குமாறு சொல்லியிருப்பதாகத் தெரிவிப்பாள். அதை ஏற்க மறுத்து அவன் சண்டித்தனம் செய்தால். மிரட்டுவாள்; அல்லது இரண்டு அறை வைப்பாள். தாய்க்குப் பயந்து தன் ஆவலை அடக்கிக் கொள்ளுவான் குழந்தை. ஆனுல் அவன் மிருதுவான உள்ளத்திலே மாசுபடிந்து விட்டது. தன்னைவிட தன் சகோதரனுக்குஅதிக சலுகையைத் தாய் தருகிருள் என்ற எண்ணம் தோன்றுகிறது அவனுள்ளத்தில். அவர்களிடையே போட்டி தொடங்குகிறது. அவனைக் காட்டிலும் அதிக சலுகையைத் தாயாரிடம் பெற அவன் முயலுகிருன். தன்னைவிட அவன் உயர்ந்தவனுகவும் தன் சுகதுக்கங்களுக்குப் பெருந்தடையாகவும் அவன் இருக்கிருன்; இம்மாதிரி குமுறல்கள் அவன் உள்ளத்திலே எழுகின்றன.

குழந்தையின் இளம் உள்ளத்திலே எழும் இம்மாதிரி குமுறல்களை நாம் எளிதில் உணரமுடியாது. மிருதுவான இதயம் படைத்த குழந்தைகளாலும் அவற்றை அதிகம் வெளிப்படுத்த முடியாது. ஓரிரு சமயங்களில் அவர்களையும் மீறி உள்ளத்திலிருந்து பீறிட்டெழும் வார்த்தைகளிலிருந்தே அவற்றை நாம் உணர முடியும்.

இதையே நாம் மற்ருெரு கோணத்திலிருந்து பார்ப்போம்.

தற்காலத்தில் சினிமா பாட்டை முணுமுணுக்காத குழந்தைகள் இல்லை. ஆறு,ஏழு வயது சிறுவன்கூட சினிமா பாட்டை தன் மழலைக் குரலில் பாடுகிருன். சின்னவன் பாடும்போது குரல் எவ்வளவோ கர்ண கடூரமாக இருந்தாலும் அதைப்பற்றி நாம் பெருமையாகப் புகழ்கிருேம். பிற்காலத்தில் பெரும் சங்கீதவித்வானுக விளங்குவான் என்று ஜோஸ்யம் சொல்கிருேம். அதே சமயம் பெரியவனின் குரல் இனிமையாக இருந்தாலும் கர்ணகடூரமாக இருப்பதாகச் சொல்கிருேம். காட்டுக்கத்தல் கத்துவதாகக் கோபிக்கிருேம். இரண்டுபேர் பாடுவதும் நன்ருக இருக்கிறது என்று ஒரு வார்த்தை சொல்வதால ஒன்றும் குறைந்து விடாது. ஆனுல், அதை யாரும் சொல்வது கிடையாது. அப்போது தன்னைவிட மற்றவனையே வீட்டிலுள்ளவர்கள் விரும்புகிருர்கள் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றுகிறது. ஆகவே தன் சகோதரனை அவன் வெறுக்கத் தொடங்குகிருன். அவனை மட்டம்தட்ட ஒவ்வொரு சமயத்தையும் அவன் எதிர்பார்க்கிருன். ஆரம்பகாலத்தில் இது இளையவனுக்குத் தெரியாது. வயதாகி பெரியவனுகும் போது சகோதரனைத் திருப்பி எதிர்க்கத் தொடங்குவான். அதுவே குடும்பத்திலே மனப் பிளவைத் தோற்றுவிக்கும் முதல் வித்து.

இன்னும் சில வீடுகளில் நாம் சகஜமாகக் கண்டுவரும் நிகழ்ச்சிகளில் ஒன்றைக் கவனிப்போம். கைக் குழந்தை தொட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும். அதற்குப்பெரிய குழந்தை மெல்ல பதுங்கிப் பதுங்கி

தொட்டில் அருகே வரும். யாராவது தன்னைக் கவனிக்கிறார்களோவென்று நாற்புறமும் சுற்றிப்பார்க்கும். அடுத்த நிமிஷம் பளார் என்று குழந்தையின் முகத்திலோ, வயிற்றிலோ அகப்பட்ட இடத்தில் அறையும்; அல்லது வெடுக்கென்று கிள்ளிவிடும். குழந்தையின் அலறல்கேட்டுத் தாய் ஓடிவரும்போது அதன் அருகில் 'திருதிரு' வென்று விழித்துக் கொண்டு நிற்கும்.

கிள்ளியதோ, அறைந்ததோ, குழந்தை தெரிந்து செய்யவில்லை. குழந்தையின் உள்ளத்திலே தோன்றியுள்ள துவேஷ மனப்பான்மையே அவ்விதம் செய்யத் தூண்டியது. தன்னுடைய சுகத்துக்கு அக்குழந்தை தடையாக முளைத்துள்ளது என்ற எண்ணம் அதன் உள்ளத்திலே வேரூகப் பதிந்திருப்பதாலேயே இம்மாதிரியான காரியங்களில் ஈடுபட நேரிடுகிறது.

சிறு குழந்தையைக் கொஞ்சும்போது அருகில் நிற்கும் பெரிய குழந்தையின முகத்தைப் பாருங்கள், அக்குழந்தையைப் போன்று தன்னையும் தாயார் கொஞ்சவில்லையே என்ற ஏக்கம் பிரதிபலிப்பதை நன்கு கவனிக்கலாம். அதே சமயம் அக்குழந்தையையே தரையில் உட்காரச் செய்து அதன் மடியில் சிறிய குழந்தையைப் படுக்க வைத்துக் கொஞ்சுங்கள். அப்போது அதன் முகத்தில் கரைகாணாத மகிழ்ச்சி தென்படுவதைக் காணலாம். சிறு குழந்தை தவறு செய்தாலும் சரி; அல்லது புகழத்தக்க காரியம் செய்தாலும் சரி, அதைப் புகழ்வதோ, தண்டிப்பதோ தனிமையிலேயே இருக்க வேண்டியது அவசியம். அன்றி அருகில் இருக்கும் குழந்தைகளையும் அதே முறையில் நடத்துங்கள்.

'குழந்தை எவ்வளவு அழகாக இருக்கிறாள்' என்று ஒரு சிறுமியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு வேறு குழந்தையைப் புகழ்ந்தால், அச்சிறுமியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். தன்னைவிட அக்குழந்தை அழகாக இருக்கிறதா என்ற துவேஷம் அதன் உள்ளத்தில் தலை தூக்குகிறது. ஆனால், "இந்தக் குழந்தையைப் பார்! நம்ப கீதா மாதிரியே இருக்கிறாளே" என்று சொல்லுங்கள். அக்குழந்தை அழகாக இல்லா விட்டாலும், தன்னைப்போன்று அக் குழந்தையும் அழகுள்ளவளே என்ற எண்ணம் கீதாவின் உள்ளத்தில் தோன்றுகிறது. அவள் மிக்க மகிழ்ச்சியுறுகிறாள்.

"குழந்தைகளே நாட்டின் எதிர்காலச் சந்ததியர். அவர்கள் ஒற்றுமையுடன் துவேஷத்திற்கடிமையாகாமல் சுகமாக வாழவேண்டும்" என்ற கருத்தை ஒவ்வொரு தாய்மாரும் தன் கருத்தில் கொள்ளவேண்டும். அதன் மூலம் இளம் உள்ளங்களில் துவேஷ மனப்பான்மை ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ★

மனிதனின் மதிப்பு ரூ. 40–தான்!

மனிதனின் செல்வத்தைக் கொண்டு நாம் அவனை மதிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு மனிதனின் மதிப்பும் உண்மையில் ரூ. 40 தான். ஏறத்தாழ 140 ராத்தல் எடையுள்ள மனிதனை கூறுபோட்டு உடலிலிருந்து தனித்தனிப் பொருள்களாக எடுத்தால், கிடைக்கும் கொழுப்பிலிருந்து ஏழு சோப்புக்கட்டிகளையும், கந்தகத்திலிருந்து 100 கந்தக வில்லைகளையும், இரும்பிலிருந்து இரண்டு அங்குல ஆணியையும், கரியிலிருந்து 9000-ம் எழுதுகோல் கூர்களையும், பாஸ்பரத்திலிருந்து 2200 நெருப்புக்குச்சித் தலைகளையும், மக்னீஷியத்திலிருந்து ஒரு கரண்டி உப்பையும், சுண்ணும்பிலிருந்து ஒரு சிறு அறையை வெள்ளையடிப்பதற்கு போதிய சுண்ணும்பையும் பத்துகாலன் தண்ணீரையுமே பெறலாம். இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 40 தான்!

எழுதியவர்: ஸேவியர் செல்லதுரை

பெண்களின் விளையாட்டுகள்

சாவித்ரி

பெண்களுக்கென்றே பிரத்யேக விளையாட்டுகள் பல உண்டு. சோழி ஆடுவது, அம்மானை, கழக்கோடி இவைகள் ஆடுவது, ஸ்கிப்பிங் என்கிற கயிறு ஆட்டம் இவைகள் பெண்களுக்கென்றே ஏற்பட்டவை. அம்மானையும், கழக்கோடியும் ஆடத்தெரிந்த பெண்கள் இக்காலத்தில் இருக்கிறார்களா என்பது சந்தேகமே. ஆண்களுடன் போட்டியிட்டு வெளியில் வேலைசெய்யச் செல்லும் பெண்கள் இந்த ஆட்டங்களைப் பற்றி எல்லாம் கேள்விப்பட்டிருக்கலாம். ஸ்கிப்பிங் என்ற ஒரு ஆட்டமே போதும் தேகப் பயிற்சிக்கு. இதுமட்டும் சிறுமிகளிடையே ஓரளவு காணப்படுகிறது.

மற்ற முக்கியமான விளையாட்டுகள் கும்மியும் கோலாட்டமும். கும்மியடிப்பதை அநாகரீகமென்று கூட நினைப்பவர்கள் இக்காலத்தில் இருக்கிறார்கள். கோலாட்டப் பண்டிகை என்றே ஒரு பண்டிகை நாட்டுப்புறப் பகுதிகளில் ஐப்பசி மாதத்தில் நடைபெற்று வருகிறது. இந்த விளையாட்டுகளெல்லாம் பெண்களின் தேகப்பயிற்சிக்கும், மனக்களிப்புக்கும் ஏற்றவையாகும். தீபாவளி பண்டிகை முடிந்த பிறகு அமாவாசையன்று கிராமங்களிலுள்ள சிறுமிகள் சேர்ந்து கோலாட்டம் போட்டுக்கொண்டும், கும்மி யடித்துக்கொண்டும் போய் புற்றுமண் எடுத்துக் கொண்டு வந்து பசு உருவம் செய்து அதற்கு பூசை செய்து கோலாட்டம்

— குஜராத்தி வித்யாலய குழந்தைகள்.

போட்டு கும்மி அடிப்பார்கள். இம்முறையைபசுவன் வைத்தல்என்று சொல்வது வழக்கம். சில குறிப் பிட்ட நாட்களுக்குப்பின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கோலாட்டம் போட்டு பணம் திரட்டுவார்கள். சிறுமிகள்மட்டும் தான் இதில் கலந்து கொள்வர் என்று சொலவதற்கில்லை. யுவதிகளும் ஏன், பெரிய ஸ்திரீகளும் கலந்து கொள்வர். பின்னர் களிமண் பசுவை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆறு அல்லது குளத்தில் போட்டுவிட்டு வீடு திரும்புவார்கள்.

ஜலந்தரை என்று சொல்லப்படும் இக்கோலாட்ட வைபவம் பல இடங் களிலும் இன்னும் நடைபெற்று வரு கிறது. பசுவன் வைத்துக் கொண் டாடுவதால் மழை காலாகாலத்தில் பெய்துநாடு சுபிட்சமடையும் என்பது நீண்டகாலமாக இருந்து வரும் நம்பிக்கை.

கும்மி, கோலாட்டம் இவைகளுக் காகவே தனிபபாடல்கள் உண்டு எல்லோருக்கும் எளிதில் புரியும் படி இப்பாட்டுகள் அமைந்திருக்கும். கோலாட்டத்திலேயே பின்னல் கோலாட்டம் என்று ஒன்றுண்டு. பலர் ஆடும் இந்த ஆட்டத்தில் கோலாட்டக் கழிகளுடன் பல கயிறு கள் சேர்ந்து இணைக்கப்பட்டிருக்கும். பாடி ஆடிக்கொண்டே கயிற்றை பின்னி பின்னர் அதை அவிழ்க்க வேண்டும். இதை இக்காலத்தில் காண்பதே அரிதாகிவிட்டது.

கும்மியடிக்கும் பெண்கள் எப்படி இருப்பார்கள் என்று கேட்கலா மல்லவா? அழகிய சொக்கநாதபிள்ளை என்கிற புலவர் அப்பெண்களை வருணிக்கிறார் பாருங்கள்.

சீவிச் சிலர் குழற்பின்னலிட்டு சிலர்
சிங்கார கொண்டை சொருக்கு
மிட்டு
காவியங் கண்களில் மையிட்டு
பொட்டிட்டு,
கட்டாணி முத்துப்பற்காவியிட்டு.

இவர் பாடிய கும்மிப்பாட்டுதான் ஆண்டாள் கும்மி என்று வழங்கப் படுகிறது.

ஆட்டத்தின் அழகு அதிகரிக்க அதிகரிக்க பாட்டின் அழகும் அதி கரிக்கிறது. ஆனந்தக்கும்மி யடிப் போமடி என்று பாடுவதில் நிறைய அர்த்தம் இருக்கிறது. இந்த ஆட்டங் களில் மனதை செலுததி ஆடுபவர் களுக்கு கவலை எங்கிருக்கும்?

இந்த விளையாட்டுகளிலுள்ள விசே ஷங்கள் என்ன வென்றால் இந்த ஆடல் பாடல்கள் எல்லாம் பக்தி யோடு இணைந்தவை.

பொங்கல் பண்டிகை முடிந்தபின்பு குரவைகூத்து ஆடுவதென்பதை குடி யானவ பெண்மணிகளிடையே இப் போதும் காணலாம். ஒரு கூடையை நடுவில் வைத்துவிட்டு அதை சுற்றி சுற்றி வந்து கும்மியடிப்பார்கள். ஒவ் வொரு வீட்டிற்குமுன் இக்கூத்து நடைபெறும்போது அவ்வீட்டிலுள்ள வர்கள் அரிசியையும் வெல்லத்தையும் கூடையில் கொண்டு வந்து போடு வார்கள்.

பெண்கள் புஷ்பவதிகள் ஆகும் போது நடத்தப்படும் வைபவத்தின் போதும், வளைகாப்பு, சீமந்தத்தின் போதும் கும்மியடித்து குதித்தாடுவது என்பது இன்னும் சில இடங்களில் இருந்து வருகிறது. கல்யாண வைப வங்களே சுருங்கிப் போய்விடும் இக் காலங்களில் இதெல்லாம் எங்கே நடைபெறப் போகிறது?

கோலமிடுவதையும் ஒரு விளையாட் டுடனேயே முன்னோர்கள் சேர்த் திருக்கிறார்கள். இதை ஆந்திரர்கள் மொக்கு என்றும், கன்னடியர்கள் ரங்கவல்லி என்றும் வடக்கத்தியர் ரங் கோலி என்றும அழைக்கின்றனர். திருமணம், பண்டிகைகள் விசேஷ நாட்கள், மார்கழிமாதம் இவைகளின் போதெல்லாம தெருவையே அடைத்து கோலம்போடுதலை சகஜ மாகக் காணலாம். காலையும் மாலையும் வீட்டின் வாசல்முன் கோலமிடுவது மங்களகரமானது.

அவ்வீட்டில் லக்ஷ்மி வாசம் செய் கிறாள் என்பது நம்பிக்கை.

இக்கோலமிடுவதைக் குறித்து ஆண்டாள் கூறுவது.

தையோடு திங்களும்
தரை விளக்கி,
தண்மண்டலமிட்டு மாசி
முன்னாள்

ஐயறுண் மணற்கொண்டு
தெருவணிந்து
அழகினுக் கலங்கரித்தனள்

என்று குறிப்பிட்டிருக்கிருள் இதிலிருந்து, மார்கழி, தை, மாசி மாதங்களில் விசேஷமாக கோலமிடுவது வழக்கம் என்று தெரிகிறது.

கோலமிடுவதை பக்தியிலீடுபட்ட அக்கால மங்கைகள் ஒரு விளையாட்டாகவே கருதி வந்திருக்கின்றனர். திருமாலின் பஞ்சாயுதங்களான சங்கு சக்கிரம், கதை, புஷ்பம், வில் இவைகளை கோலமிடுவது அக்கால வழக்கம் என்று பெரியாழ்வாரின் பின்வரும் பாசுரத்திலிருந்து தெரிய வருகிறது.

பொங்கு வெண் மணல் கொண்டு
சிற்றிலும் முற்றத்து இழைகலுறில்
சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லு
அல்லது இழைக்கலுற்ருள்.

இக்காலத்தில் பாடத்தெரியுமா படிக்கத் தெரியுமா, நடனமாடத் தெரியுமா என்றெல்லாம் பெண்ணைப் பார்க்க வருபவர்கள் கேட்கிருர்கள். கோலம் போடத் தெரியுமா, கும்மியடிக்கத் தெரியுமா என்று கேட்பதில்லை.

பெண்கள் திடசாலிகளாக இருந்தால்தான் வருங்காலப் பயிர்களாகிய நம் சந்ததிகளை வீரக்குழந்தைகளாகப் பெற்றெடுக்கலாம். இதற்கு திடகாத்திரமும் ஆரோக்ய வாழ்வும் அவசியம். தமிழ் மொழியில் பிள்ளைத் தமிழ் என்ருெரு பிரபந்த வகை உண்டு. பிரபந்தத் தலைவரை குழந்தையாகக் கொண்டு பாடுவது. இந்த பிள்ளைத்தமிழில் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என்று இருவகையுண்டு. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, இப்பருவங்கள் இருவகை பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. பெண்பால் பிள்ளைத் தமிழில் கடைசி மூன்ருக சேர்க்கப் பட்டிருப்பவை அமமானை, நீராடல், ஊஞ்சல்.

இந்த மூன்றும் பெண்களுக்கான விசேஷ விளையாட்டுகள். இக்காலம் பெண்களுக்கு அம்மானை தெரியாது. தண்ணீரில் இறங்கி முழுக்கு போடவே பயம். வீட்டிற்குள் உள்ள ஊஞ்சலில் மட்டும் உட்கார்ந்து ஆடுவார்கள். ஆனல் அதுவும் வீசி ஆட்ட வழியில்லை. பண்டைகாலத்து தமிழ் பெண்கள் பந்துகூட விளையாடியிருக்கின்றனர்!

இந்த விளையாட்டுகள் தெரியாதவர்கள் பெண்களே இல்லை என்றுகூட சொல்லலாம். இந்த விளையாட்டுகளினுல் ஆடவும் வரும், பாடவும் வரும், அழகு செய்து கொள்ளவும் வரும் தேகப்பயிற்சியும் கிடைக்கும். இவைகளை நகரங்களிலும் வழக்கத்தில் கொண்டு வருவது மிக அவசியம். ★

போலீஸ் இலாகாவில்
துப்பறியும் நாய்கள்

"நந்தலால்"

நாய் வீட்டைக்காக்கும் என்பது குழந்தைகளுக்குங்கூடத் தெரியும். ஆனால் அது திருடனைக்கூட பிடித்துக் கொடுக்கும் என்பது பலருக்குத் தெரிந்திராது.

எல்லா நாய்களும் திருடனை பிடித்துக் கொடுத்துவிடாது. அதற்காக குறிப்பிட்ட நாய்களை பொறுக்கி எடுத்து அவைகளுக்கு விசேஷப்பயிற்சியை அளிக்கவேண்டும். இம்மாதிரி பயிற்சி அளித்து நாய்களை துப்பு துலக்க பயன்படுத்தலாம் என்பதை சென்னை போலீஸ் இலாகா கடைப்பிடித்து வெற்றியும் கண்டிருக்கிறது.

மோப்பம் பிடிப்பதில் நாய்கள் மிகத் திறமை வாய்ந்தன என்பதை கொண்டு திருடு, களவு, கொலை முதலிய குற்றங்களைக்கண்டுபிடிப்பதற்காக நாய்களை உபயோகப்படுத்தும் வழக்கம் இங்கிலாந்தில் வெகுகாலமாக இருந்து வருகிறது. இதே மாதிரி ஒரு நாய்ப்படை ஆரம்பிக்க வேண்டும் என்கிற எண்ணம் 1951 ல் போலீஸ் அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. அப்போது போலீஸ் தலைமை அதிகாரியாக இருந்தவர் ஸ்ரீ சஞ்சீவிப் பிள்ளை. இரகசிய போலீஸ் இலாக்காவைச் சேர்ந்த ஸ்ரீ பி. குப்புசாமி இங்கிலாந்து சென்று 'ஸ்காட்லாந்து யார்ட்' (பிரிட்டிஷ் போலீஸ் இலாகாவுக்குப் பெயர்) போலீஸ் பயிற்சி பெற்று டில்லி திரும்பிய சமயம்; நாய்களை துப்பு துலக்க உபயோகிப்பதையும் அவர் கண்டறிந்து வந்திருந்தார். அவர் தலைமையிலேயே போலீஸ் நாய்ப்படை ஆரம்பிக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் சாமுவேல் என்பவர் இங்கிலாந்து சென்று நாய்களை பழக்கும் விதத்தை அறிந்து திரும்பினர்.

ஆரம்பத்தில் இந்நாய்ப்படையில் ப்ருடஸ், ராணி, லீஜியா இம்மூன்று நாய்களே இருந்தன. சுமார் 60 குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவிய ப்ருடஸ் இறந்துவிட்டது. இறந்துபோன ராணியின் ஐந்து குட்டிகளில் மூன்றை மட்டும் போலீஸ் வேலைக்கு தற்போது பழக்கி யிருக்கிறார்கள்.

இப்போது நாய்ப்படையில் ஏழு நாய்கள் இருக்கின்றன. தேவா என்பதற்கு வயது 18 மாதங்கள், யுவராஜ் இந்த தேவாவிற்கு மூத்தது. பெக்கி என்கிற நாயை 'ஹிந்து' ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன் போலீஸுக்கு பரிசாக அளித்திருக்கிறார். இந்த நாய் சொன்னபடி செய்வதற்காக பல பரிசுகள் பெற

லீலா, யுவராஜ், குமார் இவைகளின் தாய் 'ராணி'

றிருக்கிறது. லீஜியா என்ற நாய் தான் இப்படையிலே ஸீனியர். லீலா என்ற நாயை சேத்துபட்டு ஸ்ரீ எஸ். விஸ்வநாதன் பரிசாக அளித்திருக்கிறார். இதற்கு 9 மாதம் தான் வயதாகிறது. தேவா, யுவராஜ் இவைகளின் கூடப்பிறப்பு குமார். வம்சவிருத்தி செய்வதற்காகமட்டுமே இது உபயோகிக்கப்படுகிறது.

இந்த நாய்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமானால் அதற்காகவே ஒரு நபரை நியமிக்கவேண்டும். அந்த நாய் அந்த நபர் சொல்வதைக் கேட்டு அதன்படிதான் நடக்கும். மற்ற யார் எதை சொன்னாலும் கேட்காது. 'வள்' என்று எரிந்து விழும், ஆகவே இந்த நாய்களுக்கு அளிக்கப்படும் முதல் பயிற்சி அவை யார் என்ன சொன்னாலும் கேட்கக்கூடாது என்பதே. அதேபோல் சாப்பிடுவதற்கும் யார் என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளக் கூடாது. இல்லையேல் திருடர்கள் அதை ஏமாற்றி விடலாம், அல்லது விஷம் கொடுத்து கொன்று விடலாம் அல்லவா?

மதில் மேல் ஒருவனை ஏறி குதிக்கச் சொல்லி நாயைப் பிடிக்க ஏவினார் ஒரு கான்ஸ்டபிள். 6 அடி உயரமுள்ள அந்தச் சுவரை அந்த நாய் வெகு அலட்சியமாகத் தாண்டியது பிரமிப்பையே தந்தது.

ஒவ்வொரு மனிதனிடமும் ஒருவித வாசனை எழுகிறது. இது சாதாரணமாக நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நாய்களுக்கு இது நன்றாகத் தெரிந்து விடுகிறது, இந்த வாசனை கூடுமான வரை கலந்து விடாமல் இருந்தால் நாய்கள் துப்பு துலக்குவது மிகவும் சுலபம்.

இந்த நாய்களை பொதுமக்கள் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் திருடன் கையாண்ட சாமான்களை தாங்கள் தங்கள் கையை வைத்து கையாளக் கூடாது. பொருள் பறி போன இடத்தில் அதிகமாகவும் நடமாடக் கூடாது. அப்படி செய்தால் பல பேர் உடம்பு வாசனைகள் கலந்து போவதால், திருடனின் வாசனைக் கண்டுபிடிக்க நாய் திண்டாடி விடும்.

பிரிட்டன் போன்ற நாடுகள் குளிர் தேசமாதலால் மனிதனிடமிருந்து நீங்கும் வாசனை பல மணி நேரம் கலந்து விடாமல் இருக்கின்றன, ஆனால் உஷ்ணப் பிரதேசமான இந்தியாவில் எந்த வாசனையும் அதிக நேரம் நீடித்து நிலைக்காது. சூரிய கிரணங்களால் இந்த வாசனைகள் மறைந்து காற்றுடன் கலந்து விடுகின்றன. ஆகவே திருட்டுப் போனதும் போலீஸாருக்குத் தகவல் கொடுத்து நாய்ப் படையை வரவழைப்பது நல்லது.

இந்த நாய்கள் பிடிபட்ட குற்றவாளியைக் கண்டதும் விழுந்து பிடுங்குவதில்லை. ஒரு கையை மட்டும் வாயில் பற்றி இழுத்து வருகிறது. திமிறி ஓட முயற்சித்தால் கட்டாயம் விழுந்து பிடுங்கும். ஆகவே நாயிடம் அகப்பட்டவுடன் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை.

எல்லா நாய்களையுமே இம்மாதிரி பயிற்சி செய்து விடலாம் என்பது சாத்யமில்லை. சில கோம்பை நாய்களையும், ராஜபாளையம் நாய்களையும் இந்தப் பயிற்சிக்கு உட்படுத்திப் பார்த்தார்கள். ஆனால் திருப்தி ஏற்படவில்லை. போலீஸ் வேலைக்கு லாயக்கான நாய்களுக்கு வேண்டிய யோக்யதாம்சங்கள்:(1) தோற்றம்,(நல்ல உயரமும், கண்டவுடன் நடுக்கம் கொடுக்கும்தோற்றமும் அவசியம்) (2) நல்ல தைரியமுள்ளவைகளாக இருக்க வேண்டும். இடைஞ்சலாக வரும் எதையும் தாண்டி சமாளித்து காரியத்தை சாதிக்கும் திறமை அவசியம். (3) தன்னை பழக்கிய எஜமானன் என்ன சொல்கிறானோ அதன்படி உடனே கேட்கும் பழக்கம் பெற்றிருக்க வேண்டும். (4) புத்தி கூர்மை மிக அவசியம். ஆகவே இந்த நான்கு குணங்களும் அநேக நாய்களிடம் சேர்ந்து காணப்படுவதில்லை. போலீஸ் வேலைக்கு லாயக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுபவைகள் அல்ஸேஷியன் நாய்களே.

இந்த நாய்ப்படை இந்தியாவிலேயே சென்னையில்தான் உள்ளது. இதர ராஜ்யங்களிலிருந்தும் நாய்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றனவாம். நாய்களைப் பழக்குவதென்றால் அவைகளுடன் ஒவ்வொன்றுக்கும் ஒரு எஜமானனும் கூடவே இருக்க வேண்டும்.

போலீஸ் நாய்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நாளைக்கு ரூ. 2 வீதம் செலவிடப்படுகிறது. காலையில் இவைகளுக்கு பாலும் முட்டையும் ஆகாரம். நடுப்பகலில சப்பிரமமான சாப்பாடு. சோறு. இறைச்சி, காய்கறி. காட்லிவர் ஆயில் இரவில் எலும்பு சூப்பும் ரொட்டியும் உணவில் ஒரு சிறிது உப்பும் சேர்க்கப்படுகிறது.

"கருமமே கண்ணாயினர் பசி நோக்கார் கண்துஞ்சார்'' என்பது போல திருடனைக் கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது உணவு சமயம் வந்தாலும் உணவுக்காக தன் வேலையை விட்டுவிடாது. வேலையை முடித்து விட்டுதான் உணவை உட்கொள்ளும்.

சாதாரணமாக நாய்களின் வயது சுமார் 15 வருஷகாலம். போலீஸ் படையிலுள்ள நாய்களின் வயது 18 மாதம் முதல் 3 வருஷங்கள் வரை இருக்கின்றன. சாதாரணமாக 5 வருஷங்களுக்கு பின் நாய்கள் இந்த துப்பறியும் வேலைக்கு லாயக்கில்லாது போகலாம் என்று தெரிகிறது.

இந்த நாய்கள் வசிப்பதற்கான 'கென்னல்' மரினாவிலுள்ள ஐ. ஜி. ஆபீஸ் கட்டிடத்தில்தான் இருக்கிறது.சமீபத்தில் தஞ்சாவூரில் நடந்த ஒரு கொலையில் குற்றவாளியைக் கண்டு பிடிக்க போலீஸ் நாய்களின் உதவி கோரப்பட்டு இவைகளில் சில தஞ்சைக்குச் சென்று காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டு வந்திருக்கின்றன.

சென்ற டிசம்பர் 26 தேதி முதல் 28 தேதிக்குள் சென்னை ஜார்ஜ்டவுன் கிடங்குத் தெருவில் ரூ. 16000 பொறுமான நகைகள் களவு போயிற்று. திருடர்கள் உபயோகித்த ஒரு துணி மூட்டையிலுள்ள வாசனையைக் கொண்டு லிஜீயாவும் யுவராஜும் நான்கு வேலைக்காரர்களைக் கண்டு பிடித்துக் கொடுத்துவிட்டன. இவர்களில் இருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். களவுபோன பொருள்களும் கைப்பற்றப்பட்டுவிட்டன.

ஐ. ஏ. எப். அதிகாரிகள் இந் நாய்களின் திறமையைக் கண்டுபிடிக்க ஒரு பரிசோதனை நடத்தினர். கைகுட்டையை போட்டுவிட்டு கூட்டத்துடன் கலந்து கொண்டுவிட்ட அதிகாரியை யுவராஜ் அடையாளம் கண்டு பிடித்துக் கொடுத்துவிட்டது.

போலீஸ் நாய்ப்படையின் பொறுப்பு 'கிரைம்' உதவி போலீஸ் கமிஷனர் ஸ்ரீரங்க பாஷ்யத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர் சுமார் 25 வருஷங்களாக இந்த இலாகாவில் அனுபவம் பெற்றவர்.

போலீஸ் நாய்கள்பற்றி பொது மக்களுக்குத் தெரிய வேண்டும், அதைப்பற்றி படங்களுடன் எழுத வேண்டும் என்று தெரிவித்ததும் அனுமதி கொடுத்த போலீஸ் கமிஷனர் ஸ்ரீ பார்த்தசாரதி அய்யங்காருக்கும், 'கிரைம்' இலாகா டிபுடி கமிஷனர் ஸ்ரீ கே. ஆர். ஷெனாய்க்கும் 'திங்கள்' சார்பில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்

இந்த போலீஸ் நாய்களின் சேவை குறித்து பொது மக்கள் நன்கு தெரிந்து கொள்வது மிக அவசியம். போலீஸ் இலாகாவினரே இந்த நாய்கள் சேவை பற்றிய ஒரு டாகுமெண்டரி படத்தை 16 மி. மீ. அளவில் சுமார் 400 அடியில் தயாரித்திருக்கிறார்கள். இவர்கள் இப்படத்தை 35 மி. மீ. அளவு படமாக மாற்றி நகரிலுள்ள சினிமா தியேட்டர்களில் போட்டுக்காட்ட ஏற்பாடுகள் செய்யவிருக்கின்றனர்.

நாய்களைப்பற்றி தகவல்கள் சேகரித்து படங்களும் எடுத்த பின்பு விடை பெற்றுப் புறப்பட்டோம், நாய்கள் வரிசையாக நின்று எங்களை வழி அனுப்பின. ★

மனிதனுக்குப் பலவிதங்களிலும் சேவை செய்யும் நன்றியுணர்ச்சியுள்ள நாயை இந்துக்கள் பைரவரின் வாகனமாக மதித்துப் போற்றுகிறார்கள். நேபாள மக்கள் தீபாவளியின் போது நாய்களையும் வணங்குகிறார்கள்.

துப்பறியும் நாய்ப் படை

மனிதர்களில் துப்பறிபவரை சாதாரணமாக துப்பறியும் சிங்கம் என்று சொல்வார்கள். சிங்கங்கள் துப்பறிகின்றனவா, எப்படித் துப்பறி கின்றன என்பது நமக்குத் தெரியாது. ஆனல் நாய்கள் தங்களுக் கென கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ மோப்பம் பிடிக்கும் சக்தியை உபயோகப்படுத்தி ஒரு குறிப்பிட்ட நபரைத் தொடர்ந்து பிடித்துவிடுகின்றன.

சென்ற மூன்று ஆண்டுகளாக சென்னை போலீசார் துப்பறி யும் நாய்ப் படை ஒன்றை ஏற்படுத்தி துப்பறியும் வேலைக்கு நாய்களை பயன் படுத்தி வருகின்றனர். இதனல் விசேஷ பலன் கிடைத் திருக்கிறது.

தங்கள் உடமைகளைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் பொது மக்கள் இந்த நாய்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

போட்டோக்கள் : சந்தாமியான்



ஹெட் கான்ஸ்டபிள் 597–தேவா ; கான்ஸ்டபிள் 744–யுவராஜ் ;
கான்ஸ்டபிள் 535–விஜியா ; கான்ஸ்டபிள் 2365–குமார் ;
அட்டைப்படம் கான்ஸ்டபிள் 2963–லீலா.



நாய்களுக்கு உடற்பயிற்சி அளிக்கப்படுகிறது





ஒவ்வொரு நாயுக்கும் ஒரு தனி எஜமானர் அவசியம். அவரது சொற்படிதான் அது கேட்கவேண்டும். மற்ற எவரிடமும் அவை ஆகாரங்கூட வாங்கிக் கொள்ளக்கூடாது. எஜமானர் சொற்படி எது செய்யச் சொன்னாலும் செய்ய வேண்டும். துப்பறியும் வேலைக்காக பொறுக்கி எடுக்கப்பட்ட நாய்களுக்கு இதற்கென விசேஷ பயிற்சி யளிக்கப்படுகின்றது.

...சிட் டௌன்...



ஸ்டான்ட் அப்...



 

......ஸ்டான்ட் அட் ஈஸ......

லெப்ட் டர்ன்......

போலீஸ் டிரில் நாய்களுக்கும் அளிக்கப்படுகிறது. அப்பொழுது நாய்கள் அதனதன் எஜமானர்களின் அருகாமையிலிருந்து கொண்டு அவர்களுடன் சேர்ந்து டிரில் செய்வதை இப்படங்களில் காணலாம். இந்த நாய்ப் படைக்கு ஒரு ஹெட் கான்ஸ்டபிள் பொறுப்பு வகிக்கிருர். அவர் உத்தரவுப்படி இதர கான்ஸ்டபிள்களும் நாய்களும் நடந்து கொள்ளவேண்டும்.

.....ரைட் டர்ன்......

......பார்வர்ட்......





துப்பறியும் நாய்கள் எப்படிப் பழக்கப்படுகின்றன என்பது இத் தொடர் படங்களில் தெரியவருகிறது. ஆரம்ப படத்தில் ஒரு



'திருடன்' பார்க் ஒன்றில் பராக் குப்பார்த்துக் கொண்டிருக்கும் நபரின் சட்டைப் பையிலிருக் கும் வஸ்துவை அபேஸ் செய்து விடுகிறான். சமாச்சாரம் போலீ ஸுக்கு அறிவிக்கப்படுகிறது. H C 597 ஸ்தலத்துக்குச் செல் லும்படி உத்தரவிடப்படுகிறார். அவர் தேவாவுடன் ஸ்தலத்திற் குச் செல்கிறார். 'திருடன்' நின்ற இடம் தேவாவுக்குக் காட்டிக் கொடுக்கப்படுகிறது. அதை மோப்பம் பிடித்தவுடன் திருடன் சென்ற வழியை தேவா தொடர்ந்து செல்கிறது. திருடன் ஒரு செடிமறைவில்

பதுங்கிக் கொண்டிருக்கிறான். அவனிடம் சென்றவுடன் தேவா குரைக்கிறது. பின்பு அவனது வலக்கரத்தைப் பிடித்து 'அரெஸ்ட்' செய்து விடுகிறது. இந்த நாடகத் திருடன் நாய் தன்னைக் கண்டு பிடித்து விட்டதை அறிந்து முகம் மலருகிறான். ஆனால் நிஜத்திருடன் முகம் எப்படி யிருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்துக் கொள்ள வேண்டும்.

திருடன் நின்ற அல்லது கையாண்ட பொருள்களை இதர நபர்கள் தொடாமல் இருக்கும் வரை நாய் திருடனைக் கண்டு பிடித்து விடுவது மிகவும் சுலபம்.



'திருடன்' ஒருவன் ஆறு அடி உயரமுள்ள மதில் சுவரொன்றை மிகவும் சிரமத்துடன் தாண்டிச் செல்கிறான். அவனைப் பின் தொடர்ந்த தேவா சுவரை லாகவமாகத் தாண்டுகிறது...திருடன் புதைத்து வைத்த பணப்பையை மண்ணிலிருந்து தோண்டி எடுத்து தன் எஜமானரிடம் கொடுக்கிறது.





வான ஊர்தி

சௌரீ

ரைட் சகோதரர்களால் விமானம் கண்டு பிடிக்கப்பட்ட தாக விஞ்ஞானம் கூறுகிறது. ஆனால் நம் தமிழகத்தில் பழங்காலத்திலிருந்தே புஷ்பக விமானமும் மயிற்பொறி யும் இருந்து வந்திருக்கின்றன என்பதற்கு 'வான ஊர்தி' என்னும் பழந்தமிழ்ச் சொல்லே தக்க சான்று.

ஆகாயவிமானம், ஏரோப்ளேன் என்ற சொற்கள் நம் வழக்கில் கலப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, அதே பொருளைக் குறிக்கும் 'வானஊர்தி' என்ற சொல் நம் பாமர மக்களுக்கும் தெரிந்திருந்தது. ஆனால், அந்த ஊர்தி (விமானம்) எத்தகைய உருவம், அமைப்புக்களைப் பெற்றிருந்தது என்று திட்டவட்ட மாகத் தெரியவில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம். வானத்தில் விமானம் கொண்டு சஞ்சரிக்க முடியுமென்று எண்ணியவர்கள் முதன் முதலில் நம் பாரத மக்கள்தான்.

காற்று, மேகம் போன்ற விமானங் களில் அமர்ந்து கொண்டு இந்திரன் முதலிய தேவதைகள் வானத்தில் பவனி வருவதாக ரிக்வேத சூக்தங் கள் வர்ணிக்கின்றன. பிறகு ராமாய ணம், மகாபாரதம், பாகவதம் முதலிய புராண நூல்களில் தெய்வீக சக்தி வாய்ந்த 'புஷ்பகம்' 'வ்யோமயானம்,' 'ஹம்ஸயானம்,' 'வ்யோமரதம்' முத

லிய பல வானஊர்திகளைப் பற்றிய வர்ணனைகள் கிடைக்கின்றன. 'கருடயானம்,' 'கருடயந்த்ரம்' என்ற ஊர்திகளை மகாபுராணம், விநயபீடகம் முதலிய ஜைன, பௌத்த மத முதல் நூல்கள் குறிப்பிடுகின்றன. இதையொட்டியே, திருத்தக்கதேவர் தன் சீவக சிந்தாமணி காவியத்தில்,

'அந்தரத்தார் மயனேயென
ஐயுறும்
தந்திரத்தால் தமநூல்
கரைகண்டவன்
வெந்திறலான் பெருந்தச்சனைக்
கூவியொர்
எந்திரஊர்தி இயற்றுமின்
என்றான்.'

என்று அரசன் சச்சந்தன் வான ஊர்தி ஒன்றைச் செய்து கொடுக்குமாறு சிற்பக்கலை வல்லவனை தச்சனிடம் கூறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல் அத்தச்சன் ஏழே நாட்களில் முடித்துக் கொணர்ந்த 'மயில்பொறி,' அதன் விசையை வலது புறம் திருப்பினால் வானில் பறக்கவும், இடது புறம் திருப்பினால் நிலத்தில் இறங்கிக் குத்திட்டு நிற்கவும் செய்யுமென்று கவி வர்ணிக்கிறார்.

சங்ககாலப் பாடல்களில் வான ஊர்திகளில் தேவதைகள் சஞ்சரிப்பரென்றும், பறக்கும் கோட்டைகள் இருந்தனவாகவும் குறிப்பிடப்படுகிறது. சோழன் நலங்கிள்ளியைப் பற்றி உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடும்போது (புறநானூறு, 27) "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவனேவா (செலுத்துபவனில்லாத) வானவூர்தி எய்துப வென்ப' என்று கூறுவதையும், பண்டை சோழ வேந்தர்களுடைய மேன்மையைப் புகழும் மாற்றோக்கத்து நப்பசலையார் (புறநா 39) "தூங்கெயி லெறிந்நின் ஊங்கணோர் நினைப்பின் அடுதல்நின் புகழுமன்றே." பறக்கும் கோட்டைகளை வென்ற உன் முன்னோர்களை நினைக்குங்கால், பகைவரைக் கொன்று வெற்றி வாகை சூடுதல் உனக்கு ஒரு புகழாக மாட்டாது. என்று சோழன் கிள்ளிவளவனைச் சொல்வதையும் நாம் சான்றாகக் கொள்ளலாம். இந்தச் செய்திகள் பிற்காலத்துத் தமிழ் நூல்களிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

சீவக சிந்தாமணியில் வரும்
மயில் பொறி.

இதுவரை சொல்லியவைகளெல்லாம் வான ஊர்தியைப்பற்றிய வெறும் வர்ணனை ஆதாரங்கள்தாம், என்றாலும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய பல சிற்ப கிரந்தங்களும், நுட்பமான தகவல்களும் இருக்கின்றன. நம் புராதன சிற்ப சாஸ்திரத்திற்கு வழிகாட்டிகளாக இருப்பவை, அகஸ்தியரின் 'அக்னியானம' மயன் இயற்றிய 'மயபதம்', ப்ருகு, கச்யபர், விச்வகர்மா முதலியோரின் 'ஸம்ஹிதை என்ற கிரந்தங்கள் முதலியவை. இந்நூல்களில் சுருக்கமாகவும், குறிப்பாகவும் பல நுட்பங்கள், ஊர்திகள் பற்றிய வர்ணனைகள் கிடைக்கின்றன. இவைகளை ஆராய்ந்து, மேலும் பல விபரங்களைச் சேர்த்து, சௌனகர், கார்கர், நாராயணர் இம்மூன்று மகரிஷிகளும் முறையே 'விமான சந்திரிகா', 'கேடவிலாஸ பரிசோதன', 'வ்யோமயான தந்த்ரம்' என்ற சிற்ப நூல்களை இயற்றினார்கள்.

மேற்குறித்த நூல்களை ஆதாரமாகக்கொண்டு பரத்வாஜ மகரிஷி 'யந்த்ர ஸர்வஸ்யம்', 'ஆகாச தந்த்ரம்' என்று இரு சிறந்த நூல்களை இயற்றியிருக்கிறார். முதல் நூலில் 'விமானாதிசரணம்' என்ற அத்தியாயத்தில், ஆகாய விமானம் கட்டும் வகைகள், அதை ஓட்டும் முறைகள், அதன் நுட்பமான யந்திர பாகங்கள் பற்றிய பல விபரங்கள் இருக்கின்றன. இந்நூலில் குறிப்பிடப்படும் பல சொற்களின் சரியான பொருள் கண்டு பிடிக்க இயலாமையால், செயலளவில்

ஆராய வசதி இல்லாமலிருக்கிறது.

பரத்வாஜரின் 'ஆகாச தந்த்ரம்' என்ற நூலில், பூமியில் பரவியிருக்கும் பலவகைக் காற்றுகள், காலநிலைகளுக்கேற்ப மாறுபடும் அவைகளின் அழுத்தம், சக்தி, வேகம் முதலியவற்றின் அளவுகள் விபரமாக ஆராயப்பட்டிருக்கின்றன. இவைகளோடு பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து விலகும் உபாயங்கள், இயந்திர உதவியால் வானத்தில் செல்லக்கூடிய தூர அளவு, சூரிய வெப்பம், காலநிலைக் கோளாறு. இயற்கையின் உற்பாதங்கள் முதலிய அபாயங்களிலிருந்து தப்பும் வழிகள் இவை போன்ற பல அரிய செய்திகளை அந்நூலில் விவரித்திருக்கிறார்.



புஷ்பக விமானம் இம்மாதிரி இருந்திருக்கலாம்.

பரத்வாஜர் வான ஊர்திகளைப் பொதுவாக மூன்று வகைகளில் பிரிக்கிறார், அவை, 'மாந்திரிகம்', 'தாந்திரிகம்', 'க்ருதகம்'. முதலிரண்டும் தெய்வீக சக்தி பெற்று இயங்குபவை. மூன்றாவது தான் மனிதன் ஆராய்ச்சிகளின் துணைகொண்டு, பௌதிகப் பொருள்களால் நிர்மாணிப்பது.

அவர் தம் நூல்களில், மின்சார சக்தியால் இயங்கும் விமானத்திற்கு 'சக்தியுத்காம விமானம்' என்றும், சூரிய கிரணங்களின் உதவியால் செல்லும் விமானத்திற்கு 'அம்சுவாக வர்கம்' என்றும், கரி, நீராவிகளால் இயங்குவதற்கு 'தூமயான வர்கம்' என்றும் பெயர்கள் கொடுத்திருக்கிறார். இந்த விமானங்களில் பல வகைக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய கிரணங்களின் சக்தியைத் தேககிவைக்கவும், தடுக்கவும் அவைகள் பயன்படும். அவைகளில், 'பகண தர்பணம்' என்ற கண்ணாடி வகையைத் தாயாரிக்கும் முறையை விவரிக்கிறார்.

"5 பங்கு சவிர பாஷாணம், 1 பங்கு சுவர்ணம். 7 பங்கு வெள்ளை வஜ்ரம், 9 பங்கு முத்து, 13 பங்கு கடல் நுரை, 7 பங்கு சுவரச்சலை, 2 பங்கு உப்பு, 16 பங்கு யஹம மட்சிகம், 16 பங்கு கனிஜம், 1 பங்கு தூட்சணம், 36 பங்கு மாக்கல் பொடி, 11 பங்கு காந்தாத்ரேயம், 27 பங்கு கடல் மீன்களின் கண்கள், செதில்கள் இவைகளையெல்லாம் நன்கு கலந்து மூசையில் வைத்து உருக்க வேண்டும். பிறகு அதை ஒரு பிரத்தியேக அச்சில் வார்த்துக் காயவைக்க வேண்டும். அது எத்தகைய கால நிலையைத் தாங்கவும், மிக உக்கிரமான சூரிய வெப்பத்தைத் தாங்கிக் கிரகிக்கவும் வல்ல 'பகணதர்பணம்' என்னும் கண்ணாடியாகி விடுகிறது.''

1953ல் பெங்களூர் தேசீய சம்ஸ்கிருத ஆராய்ச்சி நிலையத்தார் பரத்வாஜரின் மற்றொரு விமான சாஸ்திர நூல் கிடைத்திருப்பதாக வெளியிட்டார்கள். அந்த நூலில், 'சாகுதம்', 'சுந்தரம்', 'ருக்மம்' இவை போன்ற பல விமானங்கள் பற்றிய விவரங்கள் இருக்கின்றன. தீயினால் எரிக்கப்பட முடியாததும், ஆயுதங்களால் சேதப்படுத்த முடியாததுமான பெரிய போர் விமானத்தைப் பற்றியும் அதில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேலும் சில விசித்திரமான விமானங்களைப் பற்றி விவரிக்கும் போது, "இவைகளில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கொஞ்சமும் ஆட்டம் தெரியாது, எதிர் விமானத்திலிருப்பவர்களைப் படம் பிடிக்கவும், அவர்கள் பேசுவதைக் கேட்கவும் முடியும். விரும்பும் போது எதிரி விமானத்தை நாசப்படுத்தி விடலாம்." என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

மேலும், அந்நூலில் விமானத்தின் முப்பத்தோரு முக்கிய உறுப்புக்களைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது. விமான ஓட்டியிடம் காலநிலைக்கு ஏற்றபடி பலவித உடுப்புகள் இருக்க வேண்டும், வாயு மண்டலத்தில் பரவியிருக்கும் பதினைந்துவித விஷ அணுக்

களால் விமான ஓட்டிக்கு அபாய மேற்படும். அவைகளைத்தடுக்க சில குறிப்பிட்ட உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். இப்படிப் பல தகவல்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உலோகப் பொருள்கள் பற்றி விசேஷ ஆராய்ச்சி செய்துள்ள யோனகர் என்ற ரிஷியின் நூல்களை ஆதாரமாகக் கொண்டு பதினாறுவித உலோகப் பொருள்கள் விமானம் கட்டப் பயன்படுகின்றன வென்று பரத்வாஜர் குறிப்பிட்டிருக்கிறார்.

பெங்களூரில் கிடைத்த நூலில், 'வ்யாரஜீயந்த்ரம்', 'ஸௌரம்பகயந்த்ரம்' என்ற இருவகை விமானங்கள் பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. 'வ்யாரஜீ யந்த்ரம்' அபிரகத்தால் (மைக்கா) கட்டப்பட்டிருக்கும். இதில் பதினாறு கதவுகள் உண்டு. தூரத்திலிருந்து பார்த்தால் ஒளிக் குவியல் மாதிரி இருக்கும். அருகில் சென்று கவனித்தால் அது யந்திர விமானமென்பது புலப்படும். அது இயங்கி ஓடும்போது தீப்பொறிகளைக் கக்கிக் கொண்டே போகும். எதிரிகளை அழிக்கச் சிறந்த சாதனமான இது தரையிலும், நீரிலும் மணிக்கு 24 மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

'ஸௌரம்பக யந்த்ரம்' மூன்று மாடிகள் உள்ள விமானம். இதில் 400 பிரயாணிகள் சௌகரியமாக வீற்றிருக்கலாம் மணிக்கு 64 மைல் வேகத்தில் பறக்கும் இந்த விமானம் 'வித்யுத் சக்தி' (மின்சாரம்) உதவி கொண்டு இயங்கும்.

இவைகளைத்தவிர, போஜராஜன் இயற்றிய 'ஸமராங்கண சூத்ரதாரா' என்ற சிற்ப நூலில் பலவகை யந்திரங்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. அதன் 'யந்த்ர விதானம்' என்ற அத்தியாயத்தில் 224 சுலோகங்களால் பற்பல இயந்திரங்களின் அமைப்பு முறைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. போஜன் தன் நூலில் யந்திரம், விமானங்கள் இவைகளை இயக்கும் சக்திகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "பூமி, ஜலம், காற்று, நெருப்பு இவைகளின் 'பீஜம்' (மூலசக்தி), ஆகாயத்தின் பீஜங்கள் (ஈதர்) இவற்றின் சேர்க்கைதான் இன்றியமையாதது. இச்சேர்க்கைக்கு 'ஆச்ரயம்' என்று பெயர்" என்கிறார். அவர் தாம் குறிப்பிடும் இயந்திரங்களை, 'சாலக சாசுதம்' (பிறரால் இயக்கப்படுவது), 'ஸ்வயம் வாஹகம்' (தானே இயங்குவது) என இருவகைகளாகப் பிரித்திருக்கிறார்.

இப்படிப் பல பழைய சிற்ப நூல்கள் அரிய தகவல்களைக் கொடுக்கின்றன. "எல்லாவற்றையும் வெள்ளைக்காரர்கள் நம் நாட்டிலிருந்து தான் கற்றுக் கொண்டு போனார்கள்" என்று வறட்டுப் பழம் பெருமை பேசுபவர்களாகவும், அப்படிப் பேசுபவர்களை இளப்பமாக நையாண்டி செய்பவர்களாகவும் தான் நாம் தற்போது இருக்கிறோம். காரணம், நம் புராதன கிரந்தங்களைக் கற்றுத் தேர்ந்து, ஆராயும் பேரார்வம் நம்மிடம் இல்லாதது தான். இதனாலேயே பல அரிய நூல்கள் பெயரளவில் உலாவுகின்றனவே ஒழிய முழுவதும் கிடைக்கவில்லை. கிடைப்பவைகளை நன்கு ஆராயப் போதிய வசதிகளுமில்லை. காசி, பூனா, பெங்களூரிலுள்ள தேசீய ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி நிலையத்தார் சிறிது காலமாக இப்பெரும் அரிய ஆராய்ச்சித் துறையில் மூனைந்திருக்கிறார்கள்.

மேல் நாட்டாரிடம் உள்ள சலியா உழைப்பும், அயராத ஆர்வமும், நிறைந்த வசதிகளும் நமக்கு ஏற்பட்டால் நம் பழம்பெருமை அழியாப் பெருமையாகிவிடும் என்பதில் ஐயமில்லை. ★

சிங்கத்தின் குட்டியும் சின்னஞ் சிறு குட்டியாயிருக்கும் போது ரத்ததாகம் கொள்வதில்லை. மிருக வெறி பிடித்து அலைவதில்லை; ஆனால் அதன் நகமும், பற்களும் பூர்ண வளர்ச்சி பெற்றவுடன் தன் இனத்தின் குணத்தை அதுவும் பெறுகிறது. துரோகி பிறக்கும்போதே துரோகியாகப் பிறப்பதில்லை என்பதற்கொரு உதாரணம் இது.

—மேதை ஜான்ஸன்

★ இப்போது ஹைக்கோர்ட் இருக்கும் இடத்தில் ஒரு பெருமாள் கோயில் இருந்தது.

★ திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் மதிலின் மீது பீரங்கிகள் வைத்து டச்சுக்காரர்கள் ஸாந் தோம் மீது பிரயோகித்தனர்.

★ திப்புசுல்தானின் குதிரைப்படை ஸாந்தோமையும் திருவல்லிக்கேணியையும் தாக்கி யிருக்கிறது.

★ செயிண்ட் ஜார்ஜ் கோட்டை 1746 முதல் 1749 வரை பிரெஞ்சுக்காரர் வசம் இருந்தது.

★ அக்காலத்தில் பணக்காரர்கள் பல்லக்கு சவாரி செய்வதுண்டு. இவைகளையும் மற்றும் பல விவரங் களையும் வெளியிடுகிறது

அன்றைய சென்னை

எஸ்.நடராஜன், பி.ஏ.

சென்னை நகரம் என்று சொல்வது சரியா? அல்லது மதருஸ் பட்டி னம் என்பது சரியா? இப்பெயர்கள் எப்படி ஏற்பட்டன?

இந்தியாவிலேயே வேறு எந்த ராஜ்யத்திற்கும் இம்மாதிரி இரண்டு பெயர்கள் கிடையாது. பெயரில் இரு கட்சி உண்டு பண்ணினவர்கள் ஆங்கி லேயரே.

சென்னை என்பதும் சரி மதருஸ் என்பதும் சரி இப்போது சகஜமாக எல்லோராலும் அழைக்கப்பட்டு வரு கிறது. ஆனால் இந்தப் பெயர்கள் எப்படி ஏற்பட்டது என்பதுபற்றி பல வித அபிப்பிராயங்கள் இருந்து வரு கின்றன, ஆராய்ச்சியாளர்கள் ஒவ் வொரு ஆதாரங்களை காட்டி தாங்கள் கூறுவதுதான் சரி என்று ஸ்தாபித்து வருகிறார்கள்,

சோழர்கள் ஆண்டகாலத்தில் தஞ்சை, திருச்சி, சேலம், வடஆற்காடு தென்னாற்காடு செங்கற்பட்டு முதலி யவை சோழ ராஜ்யத்திலேயே இருந் தன, அக்காலத்தில் சென்னைப் பட்டினம் என்று ஒரு தனிப்பட்டின மும் சித்தூர் ஜில்லா என்று ஒரு தனி ஜில்லாவும் கிடையாது. சென்னை செங்கற்பட்டு ஜில்லாவிலும், திருப்பதி வரை வட ஆற்காடு ஜில்லாவாகவும் இருந்தது. பின்னர்தான் சோழனின் மகனை தொண்டைமானுக்காக ரராஜ்யம் பிரித்துக் கொடுக்கப்பட்டு தொண்டை மண்டலம் ஏற்பட்டது.

இப்போதுள்ள செங்கற்பட்டு ஜில்லா முன்பு மூன்று மாவட்டங் களாக இருந்தன. அவை புழல், புலியூர், ஈக்காடு என்பவனவாகும். சென்னை, மதருஸ் இப்பெயர் ஏற்படு முன்பே திருமயிலை, திருவல்லிக்கேணி திருவான்மியூர், திருவொற்றியூர் இவைகள் இருந்து வந்திருக்கின்றன. இவைகள் எப்போது ஏற்பட்டன என்பதைக் கண்டுபிடிப்பதே மிகவும் கஷ்டம்.

தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த புழல் கோட்டத்திலுள்ள ஞாயிறு நத்தத்தைச் சேர்ந்தது மதருஸ் பட்டினம். செங்கற்பட்டு ஜில்லாவில் சதுரங்கப்பட்டினம் என்று ஒரு இடம் இருக்கிறது. காஞ்சி

புரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்கள் தங்கள் சதுரங்க சேனைகளை வைத்துக்கொண்டிருந்த இடம் இது. இப்பட்டினத்தை டச்சுக் காரர்கள் வசப்படுத்தியபோது சதுரங்கப்பட்டினம் என்பது அவர்கள் வாயில் நுழையாததால் "ஸாட்ராஸ்" என்று பெயரை மாற்றிவைத்தார்கள். அப்போது மயிலாப்பூர் சாந்தோமிற்கு போர்த்துகீஸியர்கள் வந்தனர். அவர்கள் இந்த ஸாட்ராஸைப்போல தாங்கள் வசித்த இடத்தை 'மட்ராஸ்' என்று பெயர் வைத்திருக்கலாம் என்று ஒரு அபிப்பிராயம் இருந்து வருகின்றது.

மயிலாப்பூரில் வசித்துவந்த போர்த்துகீஸியர்களில் மதருஸ் குடும்பம் என்று ஒரு பணக்கார குடும்பம் இருந்து வந்தது. இவர்கள் தங்கள் செலவில் "மாதா" விற்கு ஒரு மாதாகோயில் கட்டியதாகவும் அதை சுற்றியுள்ள இடத்திற்கு மதருஸ் என்று பெயர் இடப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. இதற்கு ஆதாரமாக ஒரு கல்வெட்டு மயிலை ஸெயின்ட் லாஸர் மாதா கோயிலுக்கு கடைக்கால் எடுக்கும்போது அகப்பட்டதாம். இதில் போர்த்துகீஸிய பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த போர்த்துகீஸிய மாதா கோயில் 1637-ல் கட்டப்பட்டதாக இதில் காணப்படுகிறது. ரோஸரி சர்ச் என்று இப்போது வழங்கப்படும் இதை மயிலை கச்சேரி ரோடில் இப்போதும் பார்க்கலாம்.

மாதிராசன் என்ற பெரியவர் ஒருவர் இருந்ததாகவும் இவர் இறந்துபோன சிக்கமாதேவர் என்ற ஒரு சைவரை உயிர்பித்துக் கொடுத்ததாகவும் இவரை தரிசிக்க சென்னக்கேசவ முதலியார், அல்லமாப்பிரபு முதலிய பிரபலஸ்தர்கள் வருவது உண்டென்றும் இவர் பெயராலேயே மாதிராசன் பட்டணம் என்று பெயர் வழங்கி வந்ததாகவும் ஒருவரலாறு காணப்படுகிறது.

1892-ம் வருஷத்திய சென்னை மாகாண நிர்வாக யதாஸ்தில் மாதிராஜப்பட்டினம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1645-ல் விஜய நகர சமஸ்தானதிபதியாலும், 1672-ல் கோல்கொண்டா சமஸ்தானதிபதியாலும் மதருஸ பட்டினம் என்றே ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. புத்தால ராமசாமி நாயுடு என்பவரின் முன்னோர் பேரி திம்மப்பா என்பவர் மதிராசன் என்னும் கிருஸ்தவரிடமிருந்து பிரான்ஸிஸ்டே என்பவருக்கு நிலம் வாங்கித் தருவதற்கு மத்தியஸ்தராக விளங்கினர் என்பதற்கு ஆதாரமாக ஒரு செப்பேடு உள்ளது.



'ஸவுத்ஸீ கேட்' எனப்படும் வாயிலுக்கு மிக அருகில் முன்பு சமுத்திரம் இருந்தது.

பிரான்ஸிஸ்டே இடம் பெற்று கோட்டை கட்ட கடைக்கால் தோண்ட ஆரம்பிக்கும்போது அந்த இடத்தைச் சேர்ந்த மதிராசன் அதை ஆட்சேபித்தான். அந்த இடத்தில் மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் வசித்து வந்தனர். அத்தொழிலாளர் தலைவனே மதிராசன். அந் நிலத்தில் செடி கொடி போட்டு பயிர் செய்திருந்தான். இத்தகராறில் தான் பேரிதிம்மப்பா சமரஸம் செய்து வைத்தார். இதன்படி அந்த இடத்தில் கோட்டை கட்ட மதிராசன் அனுமதிக்க வேண்டும் என்றும் அந்த இடத்தை மதிராசன பட்டணம் என்று அழைக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இப் பெயர் பின்னர் ஜில்லாவிற்கும், தென் மாகாணத்திற்குமே பரவிவிட்டது. ஆகவே பரதவ குலத்தில் உதித்த ஒரு தமிழன் பெயரால் இம்மாகாணம் முழுவதும் வழங்கப்படுகிறது.



1. வெள்ளையர் நகரம்.
2. பழைய கருப்பர் நகரம்.
3. புதிய கருப்பர் நகரம்—பின்னர் ஜார்ஜ் டவுன்.

போர்த்துகீஸிய பாஷையில் மெதாரா என்றால் மரக்கட்டைக்குப் பெயராம். கடற்கரை ஓரத்தில் மீன் பிடிக்கும் செம்படவர்களின் கட்டை மரங்களை முதன் முதலில் கண்ட போர்த்துகீஸியர்கள் இப்பெயரை வைத்திருக்கலாம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்:

மதரூஸ் பட்டினம் என்கிற பெயர் 48-ம் நூற்றாண்டின் இரு சம்ஸ்கிருத நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன. இந்நூல்களின் பெயர்கள் விசுவகுண தரிச்சம்பு, ஆனந்தரங்க விஜயசம்பு. முந்திய நூலில் சென்னை நகரில் ஹூணர்கள் இருந்ததாக ஒரு குறிப்பு

அன்று சென்னை சாதாரண கிராமங்கள் எப்படியிருக்குமோ அவ்விதமே இருந்தது. கடல் வர்த்தகம் மயிலாப்பூா கடற்கரையோரத்திலும் தரை வர்த்தகம் பெரியகடை, சின்னக்கடை முதலிய இடங்களிலும் நடைபெற்றன.

முதலில் சென்னையில் காலடி வைத்தவர்கள்போர்த்துகீஸியர். இவர்கள் சாந்தோம் பகுதியில் இருநது வர்த்தகம் நடத்தினர். ஹாலந்து தேசத்தினரான டச்சுக்காரர்கள் சதுரங்கப்பட்டினம், நாகப்பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களைப் பிடித்துக்கொண்டனர். இதன் பின் டென்மார்க்கிலிருந்து டேனிஷ் காரர்கள் வந்தனர். இவர்களைப் பற்றி விசேஷமாக கூறுவதற்கில்லை. பின்னர் வந்த பிரெஞ்சுக்காரர்களும் ஒரு கிழக்கிந்தியக் கம்பெனியை ஸ்தாபித்துக் கொண்டனர். கடைசியாக வந்தவர்கள்தான் ஆங்கிலேயர்.

திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோவில் மதிலின் மீது டச்சுக்காரர்கள் பீரங்கிகளை ஏற்றிவைத்து போர்த்துகீஸியர் மீது பிரயோகித்துஸாந்தோமைக் கைப்பற்ற முயனறனர்.

1769–ல் திப்பு சுல்தானின் படைகள் சென்னை ஸாந்தோமிற்கு வந்து பிளாக் டவுனை கைப்பற்ற முயற்சித்தன.பின்னர் 1780–லும இப்படையெடுப்பு நடைபெற்றது. இவைபற்றிய குறிப்புகள செயிண்ட் ஜார்ஜ் கோட்டை டைரியில் காணப்படுகிறது. இது காரணமாகவே பாதுகாப்பு சுவர் போட உத்தேசிக்கப்பட்டது.

ஸாந்தோமில் இருந்த சர்ச் 16–வது நூற்றுண்டில் இடிக்கப்பட்டு இப்போதுள்ள சர்ச் கட்டப்பட்டது.

அக்காலத்தில் கடல் 'ஸவுத்ஸீ' வாயில் அருகாமையில் இருந்தது. பின்னர் கடல் பின்னேக்கிப் போய்விட்டது.

காணப்படுகிறது. பின்னர் குறிப்பிட்ட நூல் ஆனந்தரங்கம்பிள்ளை எப்படி வர்த்தகத்தில் ஈடுபட்டார் என்பதை வருணிக்கிறது.

1673–ல் இங்குவந்த டாக்டர் ஜான் ப்ரேயரி என்பவர் தான் வெளியிட்டுள்ள பிளானில் மதிராஸ் என்று ஒரு இடத்தைக் குறிப்பிட்டிருக்கிருர். பிரான்ஸிஸ் டேக்கு நிலம் தானம் செய்யப்பட்டபோது தாமாலாவின் தகப்பனுரான சென்னப்ப நாயகரது பெயரையே வைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டது.

சென்னைப்பட்டினத்தின் ஆதிஇடம் இப்போது கோட்டையுள்ள இடம். பிறகு கோட்டையும், நகரமும் வளர்ந்தது.

சீனர்கள் நீண்ட காலமாகவே இந்த நகரத்தில் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்கள் வர்த்தகம் செய்துவந்த இடத்திற்கு சீனு கடைத்தெரு என்ற பெயர் வழங்கலாயிற்று. 1585–ம் ஆண்டிலேயே சீன பட்டணம் என்று குறிப்புகள் இருப்பதாக ஆர். பராக்கி என்பவர் கூறுகிருர். சீன சரித்திரத்தில் யூயெல், பர்னெல் என்பவர்களால் எழுதப்பட்ட குறிப்புகளைமொழிபெயர்த்தவர் இவர்.

சீனப்பட்டனம், சின்னப்பட்டனத்மாகி பின்னர் சென்னைப்பட்டனமாக திரிந்திருக்கலாம் என்பது ஒரு அபிப்பிராயம்.

பரத குலத்தினர் வசித்த இந்த இடத்திற்கு சின்னக்குபபம் என்று சொல்வதுண்டு. சோழனுக்கு ஒரு காலத்தில் இந்த இடங்கள் சேர்ந்திருந்ததாகவும சோழனுக்கு 'சென்னி' என்று ஒரு பெயர் உண்டென்றும் ஆகவே சோழன் நகரம் என்பதை சென்னிபட்டினம் என்று அழைத்திருக்கலாம் என்றும் தமிழ் சரித்திராசிரியர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள்.

எது எப்படியிருந்தாலும் சென்னையும் மதராஸும் இப்போது ஒரே பிரதேசத்தின் பெயராகவே திகழ்கின்றன.

கோட்டைக்கு வடக்கே புதிதாக பல வீடுகள் தோன்றின. அதில் இந்தியர்கள் அதிகமாக குடியேறினர். கருப்பர் வாழ்ந்த இடமாதலால் இதை கருப்பர்கள் நகரம் என்று

(பிளாக் டவுன்) வெள்ளையர் அழைத்து வரலாயினர். கோட்டையினுள்ளே வெள்ளையர் நகரம் இருந்தது.

கருப்பர் நகரத்திற்கு வடக்கேயும் மேற்கேயும் மண்ணாலாகிய ஒரு மதில் சுவர் இருந்தது. நாளடைவில் பாதுகாப்பை அதிகரிக்கும் விஷயமாக வெள்ளையர்கள் கவனம் செலுத்தலாயினர். மண் சுவரை இடித்து தள்ளிவிட்டு செங்கல் சுண்ணம்பு கொண்டு கட்டத் தீர்மானித்தார்கள். மண்ணாலான பாதுகாப்பு கோட்டைகளில் ஒன்று திருவொற்றியூரில் இருந்தது.

மயிலையிலுள்ள பழங்கால போர்த்துகீசிய மாதாகோவில்.

1674-ல் வெள்ளையர் நகரத்தில் 118 வீடுகளும் கருப்பர் நகரத்தில் 75 வீடுகளும் இருந்தனவாம். 1750 கருப்பர் நகரத்தில் இருந்த வீடுகள் எண்ணிக்கை 8700 ஆக அதிகரித்தன. பிளாக் டவுனில் பெரும்பாலும் தமிழர்கள், தெலுங்கர்கள் சில முகம்மதியர்கள் யூதர்கள் ஆகியோர் வசித்தனர்.

கருப்பர் நகரில் இருந்த சுதேசி அதிகாரிகள் மூவர்தான். ஒருவர் கிராமாதிகாரி, இரண்டாமவர் கணக்குப்பிள்ளை, மற்ருருவர் பெத்த நாயக்கன் அல்லது பிரதான காவலாளி.

அதிகாரிக்கு வரி வசூலிக்கும் பொறுப்பு இருந்து வந்தது. 1693-ல் இங்கிலீஷ்காரர்கள இதை ரத்து செய்துவிட்டு தாங்களே வரி வசூலைத் தொடங்கினர். பெத்தநாயக்கை யாரும் கைது செய்ய முடியாது. இப் பதவி 1806 வரை இருந்தது. இந்த அதிகாரியின் பெயரில்தான் பெத்த நாயக்கன் பேட்டை என்ற டிவிஷன் சென்னையில் இருந்து வருகிறது. இந்தப் பதவி எடுபட்ட பின்புதான் ஒழுங்கான போலீஸ் இலாகா தோன்றிற்று.

கும்பெனியாரின் பிரதான வியாபாரியான பேரிதிம்மன்ன என்பவர் இப்போது ஹைகோர்ட் இருந்த இடத்தில் ஒரு பெருமாள் கோயில் கட்டினர். 1757 வரை இக்கோயில் இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் படையெடுத்த போது ராணுவ காரணங்களை உத்தேசித்து இக்கோயில் தகர்க்கப்பட்டது. ஆனல் சுதேசிகளின் வருத்தத்தை தீர்க்க கும்பெனியார் 23994 சதுரஅடி உள்ள ஒரு நிலத்தைக் கொடுத்து கேசவ மல்லீஸ்வரர் கோயில்களைக் கட்ட உதவி செய்தனர்.

தங்கசாலைத் தெருவிலுள்ள ஏகாம்பரேஸ்வர் கோயில் 'அல்லிங்கர் பகோடா' என்று வழங்கப்பட்டு வந்தது. ஆலங்காத்தா பிள்ளை என்ற

வியாபாரி ஒருவர் இதைக் கட்டினர். இவர் பெயரில் ஒரு தெரு திருவல்லிக்கேணியில் உள்ளது. அப்போது தங்கசாலைத் தெருவில் காலிகோ சலவைக்காரர்கள் வசித்தார்கள். அதனால் அதற்கு வாஷிங் தெரு என்று பெயர். அக்காலத்தில் தங்க பகோடாக்களும் வெள்ளி நாணயமும், தங்க மொஹராக்களும் செலவாணியில் இருந்தன.

1688-ல் தான் நகர நிர்வாகம் உதயமாயிற்று. மேயர் ஆல்டர்மேன் இவர்கள் சிவில் கோர்ட்டை நடத்தி வந்தனர். மேயரும் மூன்று வெள்ளைக்கார ஆல்டர் மேன்களும் கிரிமினல் வழக்குகளை விசாரித்து வந்தனர்.

1746 முதல் 1749 வரை கோட்டை பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்தது. துருப்புகள் நகரத்தின் பெரும்பகுதியை பிரெஞ்சுக்காரர்கள் சேதப்படுத்தினர்.

பாதுகாப்புக்காக எழுப்பப்படும் சுவருக்காக சுதேசிகளுக்கு வரி போடுவது என்று வெள்ளையர்கள் தீர்மானித்தனர். ஆனல் இந்த யோசனை பின்னர் கைவிடப்பட்டது. ஆனல் வால்டாக்ஸ் ரோடு என்ற பெயர் மட்டும் நிலைத்து விட்டது.

பணம் படைத்த சீமான்கள் கூலிகளால் சுமக்கப்படும் பல்லக்குகளில் சவாரி செய்வது வழக்கம். இவை தவிர சாரட்டுகள். பீடன்கள் முதலிய குதிரைகளில் இழுக்கப்படும் வண்டிகள் உண்டு.

பிளாக் டவுனில் வீட்டு சொந்தக்காரர்களுக்கு நிலவரியும் (குவிட் ரெண்ட்) குப்பை வரியும் மட்டும் தான் இருந்தது. வீட்டு வரி பின்னர்தான் ஏற்பட்டது.

1906-ல் ஏழாவது எட்வர்ட் அரசரின்குமாரர்வேல்ஸ் இளவரசர் ஜார்ஜ் (பின்னர் ஐந்தாம் ஜார்ஜ்) சென்னைக்கு விஜயம் செய்தபோது பிளாக் டவுனுக்கு ஜார்ஜ் டவுன் என்று பெயரிடப்பட்டது. கருப்பர்கள் நகரை எப்படியும் பெயர் மாற்றியாக வேண்டும் என்று வற்புறுத்தி வந்தவர் 'விவேக சிந்தாமணி' ஆசிரியராக இருந்த ஸி. வி. சுவாமிநாதய்யர். அவர்தான் வேல்ஸ் இளவரசர் விஜயத்தை ஒட்டி பெயரை மாற்ற வேண்டும் என்று யோசனை கூறினர்.

ரசிகர்களில் மூன்று விதம்

ரசிகர்களில் மூன்று விதங்கள் உண்டு. ஹம்ஸ (அன்னம்) ரகத்தினர். குக்குட (கோழி) ரகத்தினர், மகிஷ (எருமை) ரகத்தினர் என்பவையே அவை.

1. அன்னப்பறவையிடம் நீருடன் கலந்த பாலை வைத்தால் அது பாலை மட்டும் உறிஞ்சி விட்டு நீரை வைத்துவிடும். அது போல நல்ல விஷயங்கள் கெட்ட விஷயங்கள் இரண்டும் கலந்திருந்த போதிலும் நல்ல விஷயங்களை மட்டும் ரசித்துக் கொண்டு கெட்ட விஷயங்களை விட்டுவிடுவார்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

2. கோழியிடம் புழுக்களுடன் கலந்த தானியங்களைத் தூவினல். புழுக்களை மட்டுமே அது பொறுக்கித் தின்னும். அதே போல நல்ல அம்சங்களை விட்டுவிட்டு கெட்ட அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டு ரசிப்பவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

3. நல்லதையும் ரசிக்காமல் தன்னையும் கெடுத்துக் கொள்பவர் ஒரு ரகம். எருமை மாடு தண்ணீரையும் கலக்கி சேற்றைக் கிளறி தன் மீதும் பூசிக் கொள்ளவில்லையா. அம்மாதிரி!

★ கவி கற்பனைச் செறிவுடன் காவியம் இயற்ற இயற்கையின் எழிலை நாடுகிறான். இயற்கை யன்னை அளிக்கும் இன்பப் பூங்காவில் லயித்து, தன்னை மறந்த பரவச நிலையில் கற்பனை மெருகுடன் காவியத்தை உருவாக்குகிறான் கவிஞன். ஆனால் இருளடைந்து, இரும்புக் கிராதிகளால் சூழப்பட்ட சிறைச் சாலையிலும்கூட இலக்கியம் உருவாகியுள்ளது என்றால்...?

சிறையில் பிறந்த இலக்கியம்

ஸி. ராஜப்பா

மூன்று பக்கங்களிலும் கற்சுவர்; ஒரு புறம் இருப்புக்கிராதியால் அடைக்கப்பட்ட கதவு; சூரிய ஒளியையும் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் பெறும் பாக்யம் பெற்ற ஓர் இருட்டறை – அதனுள் அடைபட்டுக் கிடக்கும் மனித ஜீவன் – கனமான பூட்டு, இவை யனைத்தையும் காத்துவர கண் இமைக்காமல் காவல் புரியும் காவலாளிகள் – இவை தான் ஒரு சிறைச்சாலையின் பூர்வ லட்சணங்கள்.

சட்டத்தின் கண்களுக்கு குற்றமாகப் புலப்பட்ட ஒவ்வொரு குற்றத்தையும் செய்த மனித ஜீவன்களுக்கு அவரவர் குற்றத்திற்கேற்றவாறு சட்டம் தண்டனைவிதித்துள்ளது. அத்தகையவர்களின் தற்காலீக வாசஸ்தலம் தான் சிறைச்சாலை.

கொலை செய்தவனும் சிறையில் வாழ்கிறான். கொடுமை இழைத்தவனும் சிறையில் வாழ்கிறான், சந்தர்ப்ப வசமாக சிறைவாசம் அனுபவிக்க நேரிட்ட காரணத்தால் சிலரும் சிறையில் தவிக்கின்றனர். ஆனால் இவர்களல்லாத ஒரு சாரார் சிறைவாசத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

அவர்கள் தான் கற்பனையுள்ளம் கொண்ட கவிஞர்கள். அவர்களுக்கு சிறைவாசம் தண்டனையாக இருந்த போதிலும் அவர்கள் அதை 'சிறையில் தவம்' இருந்ததாகவே எண்ணினர். கற்பனை வளம் மிகுந்த கவிகளும், பிரபலஸ்தர்களும், மேதைகளும் சிறை வாழ்க்கையை தண்டனையாகக் கருதவில்லை! சிறை வாழ்வைப் பயன்படுத்திக்கொண்டு சிறந்த சிந்தனையாளராக மாறியுள்ளனர்.

'இரும்புக் கம்பிகளின் தடை மனிதனின் உடல் சுதந்திரத்தைப் பறிக்கலாம். ஆனால் அவன் உள்ளத்தின் சுதந்திரத்தைப் பறிக்க அவைகளால் இயலாது. கட்டுக்காவலும், கடினமான பூட்டும் மனிதனின் கை, கால்களின் இயக்கத்திற்குத் தடையாக அமையலாம். ஆனால் அவனது சிந்தனையைத் தடைப்படுத்தும் சக்தி அவற்றிற்குக் கிடையாது' என்ற தீவிர நம்பிக்கையை மேற்கொண்டு, விடுதலை நாளை எதிர்நோக்கி சிறையில் தவம் இருந்த லட்சிய புருஷர்கள், தங்கள் சிந்தனை சக்திமூலம் உலகம் புகழும் உன்னத இலக்கியங்களைச் சிருஷ்டித்துள்ளனர்.

"சமூகத்தின் துரோகியாக விளங்கி சிறைக்குள் தள்ளப்பட்டவன் இருட்டறையையும் இருப்புக் கம்பிகளையும் கண்டு தன் சுதந்திரம் பறிபோனதாக எண்ணிப் புலம்புவான். ஆனால் இலக்கிய ரஸனை மிகுந்தவன் சிறையினுள் தள்ளப்பட்டால், உலகத் தொல்லைகளிலிருந்து

ஓரளவு விடுதலை பெற்று, தன் சிருஷ்டிகளை உருவாக்க சட்டம் மனமிரங்கி அளித்த அவகாசமே 'சிறை தண்டனை' எனக்கருதுகிறான்" என்கிறார் வாஷிங்டன் இர்விங் என்னும் மேனாட்டுக் கவிஞர்.

சிறைவாசத்தினால் அறிவியல் மேதைகள் சிலர் சிறந்த இலக்கியத் தொண்டு செய்திருக்கின்றனர். இத்தகையவர்கள் சிறைவாசம் செய்திராவிட்டால் சமூகத் தொண்டில் ஈடுபட்டு வேறுவழிகளில் தங்கள் நேரத்தைப் பயன படுத்தியிருக்கக் கூடும். இன்று இலக்கிய உலகில் அவர்கள் பெயர் நிலைத்திருக்க இயலாது!

"இரும்புக்கம்பிகளின் மத்தியில் மனிதன் அனுபவிக்கும் இருட்டறை வாழ்வு வெளியிலிருந்து அவன் சிந்திக்க முடியாத அளவிற்கு இங்கு சிந்தனை செய்யவும், சிநதித்ததை எழுதவும் வசதியை அளிக்கிறது" என்று குறிப்பிடுகிறார் காந்திஜி.

இந்த உண்மையை விளக்க மேனாட்டு மேதைகள் சிலரது சிறை வாழ்விலிருந்தும் இந்திய மேதைகள் சிலரது சிறைவாசத்திலிருந்தும் சில உதாரணங்களைக் கூறலாம்.

வாஷிங்டன் இர்விங் என்னும் இலக்கிய மேதை 'ஆஸ்தான கவி' என்னும் தன் கவிதையை தன் சிறை அனுபவத்தைக் கொண்டே எழுதி புகழ் பெற்றார். "சிறைப்பட்ட பறவை விடுதலையை எண்ணி எப்போதும் துன்பகீதம் இழைத்தே வாடிவருந்துகிறது; ஆனால் இலக்கிய ஆர்வம் மிகுந்த மனிதன் சிறைப்பட்டால் தனிமையை சாதகமாக்கிக்கொண்டு சிந்தனைச் சிறகடித்து பறந்து திரிந்து இலககியசேவை செய்ய முற்படுகிறான்" என்னும் கருத்தை அழகுற விளக்கியுள்ளார் கவிஞர் இர்விங்.

> அதிகார வெறிக்கு பலியான மொகலாய மனனன ஔரங்கசீப், தன் தந்தையைச் சிறையிலடைத்துவட்டு தன் சகோதரர்களை நயவஞ்சகமாகக் கொன்று சிம்மாதனமேறினான். சிறையில் வாடிய ஷாஜஹான் தன் அந்திய கால சரித்திரத்தை சிறையினுள் வாடியபடிய எழுத முறபட்டார். இதை அறிந்த அவர் மைந்தர் ஔரங்கசீப் தாமதமின்றி அவா கண்களைப் பிடுங்கி விட உத்திரவிட்டார்! ஆகவே ஷாஜஹான் சிறை வாழ்வில் இலககியம் சிருஷ்டிக்கவில்லை.

கிறிஸ்து பிறக்கும் முன்பே சிறையில் இலக்கியம் பிறக்க முற்பட்டு விட்டது என்பதை சரித்திர பூர்வமான ஆதாரங்கள் நிரூபிக்கின்றன.

உலகம் புகழும் சில காவியங்கள், இலக்கிய விமர்சனங்கள், உபதேச மொழிகள், சுயசரிதைகள், ஆராய்ச்சிக்கட்டுரைகள் ஆகியவற்றின் பிறப்பிடம் சிறைக்கூடங்கள் தான்!

முதன் முதலில் சிறைச்சாலையில் இலக்கியம் உருவாக்கியவர் நேவியஸ் என்னும் இத்தாலிய அறிஞர். அவர் வாழ்ந்த காலம் கி. மு. 264 – 194. சிறை வாழ்க்கையின் போது அவர் எழுதிய இரண்டு உன்னத நாடகங்களைப் பாதுகாப்பின்றி இழந்து விட்டதற்காக இன்னும் இத்தாலி வருந்துகிறது.

டாஸோ என்பவர் மற்றொரு இத்தாலிய கவி. கருத்துச் செறிந்த காவியங்களையும். வேதாந்ததத்துவங்கள் நிறைந்த நல்லுரைகளையும், தன் சிறை வாழ்க்கையின் போது எழுதி உலகிற்களித்தார் அவர்.

காம்பெனல்லா என்ற இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கக் கவி இருபத்தேழு ஆண்டுகள் சிறையில் வாழ்ந்திருககிறார். அவர் தன் சிறை வாழ்க்கையின்போது பதினேழு பாடல்கள், ஆறு நாடகங்கள். சுதந்திர ஆர்வமூட்டும பேச்சுரைகள் ஒன்பதும் தயாரித்துள்ளார்.

அவரது புகழ் பெற்ற நூல் 'சூரிய நகரம்' என்பதுதான். அதை அவர் சிறையிலிருந்தபோது எழுதி முடித்தார்.

ஸ்பானிஷ் ஆசிரியரான ஸர்வான்டிஸ், ஸிவில்லி நகரில் 1597 முதல் கி. பி 1602 வரை சிறைப்பட்டிருந்த போது 'டான் க்விக்ஸாட்' என்னும்

தன் அற்புத இலக்கிய சிருஷ்டியை உருவாக்கினுர்

'சிறையில் இந்த நூல் எழுதப்பட வில்லை' என்ற ஆட்சேபணை வெளிக் கிளம்பிய போது அதை நிரூபிக்க அந்நூலின் முன்னுரையிலேயே ஆசிரியரான ஸர்வான்டிஸ் குறிப்பிட்டிருப்பது போதிய சான்ருக விருந்தது.

"விடுதலை நாளோ என்று வரும் எனத் தெரியாது. வெளியுலகம் எப்படியிருக்கிறது என்பதையும் விடுதலையாகும் வரை காண இயலாது. அப்படியிருக்க இந்த இருட்டறையில் கிடந்து மடிவானேன்? — அழுவானேன்? புலம்புவானேன்?—கற்பனையுலகைத்தான் போய் பார்த்து விட்டு வருவது என்று கிளம்பினேன். —எவ்வாறு? நடந்து சென்றேன் என்று எண்ணுதீர்கள் — கதவுதான் பூட்டப்பட்டிருக்கிறதே! ஆகவே சிந்தனை ரதம் ஏறிச் சென்றேன், பாவம்! சிறை அதிகாரிகள் அதைத் தடுத்து நிறுத்த மார்க்கமின்றித் தவித்தனர்!'— என்று ஸர்வாண்டிஸ் நயம் பெற தன் கற்பனைக்கு அவகாசமளித்த சிறை வாழ்க்கையை வர்ணித்திருக்கிருர்.

வால்டேர், நான்காம் ஹென்றி மன்னனை கதாநாயகனுகக் கொண்டு 'ஹென்றியாட்' என்ற நூலையும், 'ஒய்டெபி' என்ற சோக நாடகத்தையும் எழுதி முடிக்க தன் சிறை வாழ்வையே பயன்படுத்திக் கொண்டார்

சர்வாதிகார வெறி கொண்ட அடால்ப் ஹிட்லர் 'என் போராட்டங்கள்' என்னும் அற்புத சிருஷ்டியை சிறை வாழ்வில் ஈடுபட்ட போது எழுதி முடித்தார்.

1924-ல் சிறையிலிருந்த போது 'மின்காம்ப்' என்ற நூலை எழுதி முடித்த ஹிட்லர் "என் இயக்கத்திற்கு வேண்டிய திட்டங்களை யோசிக்க சிறைவாசம்தான் எனக்குப் போதிய அவகாசம் அளித்தது; இனி நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்திக்கவும் உபயோகமாக வழிவகுத்துக் கொடுத்த சிறைக்கூடத்திற்கு நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவன்" என்கிருர்.

"இங்கிலாந்து சிறைகள் இலக்கியம் வளர்த்த பெருமை வாய்ந்தவை" என்பதை தற்போது பிரிட்டனில் பிரபல இலக்கியகர்த்தாவாக விளங்கி வரும் ஸ்டீபன் ஸ்பென்டர் குறிப்பிடுகிருர்.

சன்மார்க்க நெறியை போதித்த அரவிந்தகோஷ் சிறையில் அவதியுற்றுர். அலிபூர் சிறையில் ஸ்ரீ அரவிந்தா இருந்த அறையைப் புனித ஸ்தலமாகப் பாதுகாக்க மேற்கு வங்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர். இவ்வறையைத் தனியாகப் பிரித்து சுவர்கள் எழுப்பவும் அதன் முகப்பில் ஒரு நந்தவனம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர். அரவிந்தரின் ஞாபகார்த்தமாக அங்கு ஒரு கல்லை பீஹார் கவர்னர் பதித்துள்ளார்.

முதன் முதலில் இங்கிலாந்தின் சிறையில் பிறந்த இலக்கியம் 'யாத்ரீகர் முற்போக்கு' என்பதாகும். இதை எழுதியவர் ஜான் பன்யன் என்ற மேதை. அவர் 'புனித யுத்தம்' என்ற நூலையும் சிறை வாழ்வின் போது தான் எழுதி உலகப் புகழ் பெற்றுர். முதலாம் ஜேம்ஸ் மன்னர் தன் சிறை வாழ்க்கையின்போது சிறந்த காதல் கவிதை ஒன்றை உருவாக்கினுர்.

ஆஸ்கார் ஒயில்டு என்ற கவியின் வாழ்வு அவலமானது. அதிக அன்பு பாராட்டி, ஒரு வாலிபனிடம் பழகி வந்த அவரை, அந்த அன்பிற்கு தவருன அர்த்தம் கற்பித்து, அவர் விரோதிகள் சூழ்ச்சி செய்து சிறையில் தள்ளினர். துன்பம் நிறைந்து மன மொடிந்த நிலையிலும அம்மேதை தன் இலக்கியப் பணி மூலம் ஓரளவு நிம்மதி கண்டார். அவரது சிறை வாழ்வில் உருவான நூல் 'கற்பனையின் பிறப்பிடம்' 'கவி பாடும் சிறைக்கூடம்' என்பவையாகும். கவி சிறைப்பட்டால் சிறைக் கூடமும் கவி பாடும் திறமை பெறுகிறது என்ற இவர் கூற்றுக்கு இணையாக நம் தமிழ் கவிச்சக்ரவர்த்தி கம்பனை நினைவுறுத்திக் கொண்டால் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்ற முதுமொழி ஞாபகத்திற்கு வருகிறதல்லவா ?

'உலக சரித்திரத்தின் உதயம்' என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்ட வால்டர் ராலே என்பவர் சிறை வாசத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டு அந்நூலை எழுதியுள்ளார்.

கட்டுரை வடிவாக ஜேம்ஸ் ஹோவல் எழுதிய 'திருமுகக் கடிதங்கள்' என்னும் கட்டுரைத் தொகுதி புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் தக்காரே விரும்பிப் படித்த நூலாகும். ஆசிரியர் தன் வாழ்க்கை சம்பவங்களை தொடர் கட்டுரை மூலம் வாசகர்களுக்கு விளக்கியுள்ளார் இந்நூலில். கடன்காரர் தொல்லையிலிருந்து விடுதலையளித்த சிறையை கௌரவிக்க வேண்டி ஜான் ஸாவேஜ் சிறந்த நூல்களை சிறையில் எழுதியிருக்கிறார்!

இந்திய மேதைகளான மகாத்மா, நேரு, சுபாஷ் சந்திரபோஸ், திலகர், ராஜாஜி ஆகியோர் தங்கள் சிறை வாழ்வைப் பயன்படுத்தி, இலக்கியங்கள் சிருஷ்டித்துள்ளதை சரித்திரம் மறக்க இயலாது.

''சிறைவாசம் மிகவும் கொடியது தான்; ஓடியாடித் திரியும் மனிதனை கூண்டில் அடைத்தால் பொழுதைப் போக்க அவன் என்ன செய்வான்? மனிதர்களைச் சிறைப்படுத்தலாம். ஆனால், அவர்களது சிந்தனை சக்தியின் வேகத்தைத் தடுப்பது இயலாத காரியம்'' என்று குறிப்பிட்டுள்ளார் காந்திஜி.

நேருஜி சிறைப்பட்டிராவிட்டால் அவரது 'நான் கண்ட இந்தியா' போன்ற புத்தகங்களையும், அவர் சுய சரிதத்தையும் நாம் பெற்றிருக்க இயலாது.

''சிறந்த இலக்கியம் உருவாக்க சிறை வாழ்வுதான் ஏற்றது. சுதந்திரத்தை அது தடைப் படுத்தினாலும் சிந்தனையை தடைப் படுத்துவதில்லை. ஆனால் இலக்கியம் உருவாக்க விரும்புபவர் எல்லோரும் சிறைக்குத்தான் செல்ல வேண்டும் என்பது நியதியல்ல'' என்று சமீபத்தில் நேருஜி தன் பிரசங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதை நாம் மறந்து விடமுடியாது.

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் சிறை வாழ்வின்போது எழுதிய 'இளைஞன் கனவு' வீரம், சுதந்திரம், தேசாபிமானம் ஆகியவற்றை விளக்குகிறது.

வழக்கறிஞராகவும், அரசியல் வாதியாகவும் இருந்த நம் ராஜாஜியை இலக்கிய உலகில் சிறந்த சேவை செய்ய தருணம் அளித்த பெருமை அவரை 'அரசாங்க விருந்தாளி'யாக ஏற்றுக்கொண்ட சிறைக் கூடங்களைச் சாரும்.

தமிழ் எழுத்துலகில் தனிப்பெருமை பெற்று சுடர்விட்டுப் பிரகாசித்த காலஞ்சென்ற இலக்கிய மேதை 'கல்கி' தன் சிறை வாழ்வைப் பயன் படுத்திக்கொண்டு எழுதிய நூல்களை தமிழகம் அறியாததல்ல.

தமிழறிஞர்கள் வேறு சிலரும் சமுதாய நலனுக்காகப் பாடுபட்டு, தண்டனை பெற்றபோது தங்கள் சிறை வாழ்வில் சிறந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்து தமிழின் பெருமையை நிலை நிறுத்தியுள்ளனர்.

இலக்கியத்தின் ரஸனையறியாது இலக்கியத்தையும் அதனை உருவாக்கும் இலக்கிய கர்த்தாக்களையும் அவமதித்த மன்னர்களையும் சர்வாதிகாரிகளையும் சரித்திரம் தன்னுள் அடக்கியிருக்கிறது. அவ்வாறிருக்க இருளும் இரும்புக் கம்பிகளும் சூழ்ந்த சிறைச் சாலையிடம் கூட 'இலக்கியம் வளர்க்கும் இதயம்' இருந்ததைக் கண்டு நாம் அவற்றிற்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். ★

★ காலம் என்னும் ஆழ்கடலில் நீந்துபவனுக்கு அறிவு என்னும் துறைமுகத்தை அடைய கலங்கரை விளக்காக அமைந்துள்ளவை சிறந்த அறிஞர்களின் உயர்ந்த நூல்கள்.

—தாகூர்

சாரீர அபிவிருத்திக்கு வழி

'கீதப்ரியா'

தமிழ் நாட்டில் சங்க காலம் என்று சொல்லப்படும் பழங்கால முதலும் அதற்கு முன்பே தொட்டும் இன்று வரையிலும் இசைச் செல்வமான சங்கீதம் வளர்ச்சியடைந்து வந்துளது. 'தமிழ் என்ற சொல்லிற்கே 'இனிமை' யென்று பொருள். சங்க காலம் என்று சொல்லப்படும் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பாணனும் பாடினியுமான விறலியும் யாழோடு சென்று பாடி பிரபுக்களேயும், அரசர்களையும் மகிழ்வித்தனர். கூத்தரும் கூத்தியுஞ் சென்று ஓர்களம் பாடிப் பிழைத்தனர். பாணன், கூத்தன், விறலி முதலானவர்களே அரசர், தலைவர் முதலாயினர்க்கு உரிமைச் சுற்றமாக அமைந்திருந்தனர் என்பதை பத்துப்பாட்டு என்னும் பழம் பெரும் நூல் மூலமறிந்து பெருமைப் படுகிறோம்.

சாரீரத்தை விருத்தி செய்து கொள்ளுங்கள் !

நாளுக்கு நாள், மக்களுக்கு சங்கீதத்தில் பிரியம் அதிகரித்து வருகிறது. சங்கீதத்தை அப்பியாசம் செய்வோர்களும் அதிகரித்து வருகின்றனர். நுட்பமான கர்நாடக சங்கீதத்தைப் பாடுவதற்கு சுத்தமான சாரீரம் மிகவும் அவசியமாகும். எல்லோருக்கும் பயன்பெறத் தக்கதாய், நல்ல சங்கீதத்துக்கு இன்றியமையாததான சாரீரத்தை விருத்தி செய்து கொள்ளும் வழிகள் சில உண்டு.

கஷ்டப்பட வேண்டாமே !

சங்கீதத்தை முறைப்படி அப்பியாசம் செய்து வரும் குழந்தைகளுக்கு சாரீரம் கட்டிக்கொண்டு சில சமயங்களில் கஷ்டப் படுகின்றன. ஏன்? பெரிய வித்வான்களுக்கும் தொண்டை கட்டிக் கொள்வதால் இத்தகைய சாரீர அவஸ்தைகள் ஏற்படுகின்றன. ரசிகர்களும் வருத்தப் படுகிறார்கள். 'சாரீர விருத்திக்கு சஞ்சீவி'யாகிய இந்த சூரணத்தை செய்து வைத்துக் கொண்டு உபயோகப்படுத்தி வந்தால் தொண்டை கட்டிக் கொள்ளாது. சாரீரம் அபிவிருத்தியாகும்.

அதிமதுரம்	2	ரூபாய்	எடை.
சீரகம்	1	,,	,,
ஓமம்	1	,,	,,
ஏலரிசி	1	,,	,,
லவங்கம்	1	,,	,,
கடுக்காய் (விதைநீக்கியது)	$\frac{1}{2}$	,,	,,
வசம்பு	$\frac{1}{2}$	,,	,,
சுக்கு	$\frac{1}{2}$	,,	,,
இந்துப்பு	$\frac{1}{2}$	,,	,,
லவங்கப்பட்டை	$\frac{1}{2}$	,,	,,
பூலாங்கிழங்கு	$\frac{1}{2}$	,,	,,
நாவல்பூ	$\frac{1}{2}$	,,	,,
ஜாதிக்காய்	$\frac{1}{2}$	,,	,,
அரிசி திப்பிலி	$\frac{1}{4}$	,,	,,

தயாரிக்கும் முறை

இந்தப் பதினான்கு மருந்துச் சரக்குகளும் யாவருக்கும் தெரிந்தது தான். மருந்துக் கடைகளில் கிடைக்கும். இவற்றை வாங்கி கல், தூசி தும்பு முதலியவைகளில்லாமல் நன்றாய் சுத்தம் செய்து உலரவைக்க வேண்டும். கடுக்காயை விதை யெடுத்த பிறகே நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவைகள் நன்றாகக் காய்ந்த பிறகு உரலில் போட்டு நன்றாக இடித்து மெல்லிய துணியில் சலித்து எடுத்துக் கொள்ளவும். குங்குமப்பூ ஒரு ரூபாய் எடை, பச்சைக்கற்பூரம், புனுகு, ஜவ்வாது வகைக்கு கால்ரூபாய் எடை ஆக நான்கும் ஒன்றே முக்கால் ரூபாய் எடை, ஒன்றாகக் கலந்து பொடி செய்து முதலில் இடித்து பொடி செய்து வைத்துள்ளதுடன் நன்றாகக் கலந்து காற்றுப் போகாத சீசாவில் போட்டு நன்றாக மூடி பத்திரப் படுத்தவும்.

அதிகாலையிலும் இரவிலும் இந்தச் சூரணத்தை தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந்தால் சாரீரத்தை விருத்தி செய்து கொள்ள சிறந்த வழியாகும்.

எம். ஆர். ஏ.

இன்று எல்லோரும் விரும்புவது சமாதானம். ஒரு நாடும் மற்ெருரு நாடும் மோதிக் கொள்வது போன்ற நிலை ஏற்பட்டால் அதைத் தவிர்க்க ஏதாவது வழி கண்டுபிடிக்க முடியாதா என்று ஒவ்வொருவருமே விரும்புகின்றனர். வெறுப்பற்ற, பீதியற்ற, பொருமை மனப்பான்மையற்ற உலகை சிருஷ்டிக்கவே எம். ஆர். ஏ. விரும்புகிறது. ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்து சுகதுக்கங்களில் பங்கு கொண்டால் எல்லோரும் இன்புற்றிருக்கலாம் என்கிருர் இதன் ஸ்தாபகரான பிராங்க் புக்மன்.

இந்த ஸ்தாபனத்தின் சேவைகளை விளக்கும் போட்டோக்களின் கண்காட்சி சென்ற மாதம் ராஜாஜி ஹாலில் நடத்தப்பட்டது, 10 நாட்களில் 15000 பேர் இதைப் பார்த்தனர்.

எம். ஆர். ஏ.யினுல் மனம் மாற்றமடைந்த ஜப்பானியப் பிரதம மந்திரி, பிலிப்பைனிடம் யுத்தத்தினுல் ஏற்பட்ட நஷ்டத்திற்கு மன்னிப்பு கோரியிருக்கிருர்.

தென்னுப்பிரிக்காவிலும், கென்யா, கோல்டு கோஸ்ட் முதலிய இடங்களிலும் இந்த ஸ்தாபனத்தின் நோக்கங்கள் ஆப்பிரிக்க மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்த பிராங் புக்மன் 1915-ல் மகாத்மா காந்தியை சென்னையில் முதல் முதலில் சந்தித்தார். முதல் யுத்தத்திற்குப் பின் ஆத்மீக புனருத்தாரணம் ஏற்படாவிடில் நாடுகள் பலாத்காரத்தில் இறங்கி அழிந்து விடுமென்பதை புக்மன் உணர்ந்தார்.

கடவுள் உண்டு. ஒவ்வொருவரிடமும் அக்கடவுள் இருக்கிருர். தன்னிடமுள்ள கடவுளை உணர வழி தேட வேண்டும். இதுதான் எம். ஆர். ஏ. சொல்வது. இதை எல்லோரும் நம்பி நடந்து கொள்வதின் மூலம் எல்லோரும் இன்புறும் புது உலகையே சிருஷ்டி செய்து விடலாம். ★

மனிதனின் அதிசய சாதனைகள்

ஆத்தூரைச் சேர்ந்த கே. பாஷா மொஹிதீன் பின்வரும் தகவல்களை இப்பகுதியில் வெளியிட அனுப்பியிருக்கிருர்.

1768-1769 உலகின் மிகப் பெரும் தீவான ஆஸ்திரேலியா கேப்டன் குக் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1770 முதன் முதலாக 'ஸ்பின்னிங் ஜென்னி' கண்டுபிடிக்கப் பட்டது.

1837 மின்சார விசையை சாதனமாகக் கொண்டு தந்தி முறையை ஸீட்டன் என்பவர் கண்டுபிடித்தார்.

1844 நீண்ட துாரங்களுக்கு தந்திச் செய்திகள் அனுப்பப்பட்டன.

1878 ஸ்வான் என்பவரால் முதன் முதலாக மின்சார விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது.

1884 கிளாட்ஸ்டன் இரகசிய வாக்களிப்பு முறையைத் தோற்றுவித்தார்.

1897 மலேரியாவுக்கு காரணம் கொசுக்கள்தான் என்பது நிருபிக்கப்பட்டது.

M. R. A. தார்மீக புனர்நிர்மாண இயக்கம்

உலகில் சாந்தி நிலவவேண்டும்; ஒரு வருக்கொருவர் நல்லுறவுடன் நெருங்கி வாழவேண்டும்; இந்நிலை ஏற்பட ஒவ்வொருவரும், நேர்மை, பரிசுத்தத்தன்மை, தன்னலமின்மை, அன்பு. இந்நான்கு வழிகளையும் பின்பற்றினால் போதும். இதைத் தான் பிராங்க் புக்மன் ஆரம்பித்துள்ள எம். ஆர். ஏ. இயக்கம் வற்புறுத்தி உலகமெங்கும் பிரசாரம் செய்து வருகிறது. இன வேற்றுமை உள்ள நாடுகளில் இந்த இயக்கம் நிறத்திமிரை அடக்க வழிசெய்திருக்கிறது. காந்தீயத்தை பின்பற்றும் இந்தியாவிற்கு இந்த இயக்கத்தின் நோக்கம் புதிதல்ல. இருந்தாலும் உலகம் உய்ய ஒரே வழியை பின்பற்ற இந்த இயக்கம் உதவி வருவதால் இந்தியர்களின் ஆதரவு இதற்கு கிடைத்திருக்கிறது.

எம். ஆர். ஏ. யினால் பல நாடுகளில் மக்களிடையே மட்டுமின்றி நாடுகளுக் கிடையேயும்கூட மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. டேனிஷ் மந்திரி ஒருவரும் ஜெர்மன் மந்திரி ஒருவரும் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்தது காரணமாக தங்கள் நாட்டிற்கிடையே இருந்த விரோதத்தை தீர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

"உலக பிரச்னைகளை தீர்க்க முற்படுமுன் முதலில் உன் பிரச்னையை தீர்த்துக்கொள்" என்பதுதான் புக்மனின் உபதேசம். ஒவ்வொருவரும் அவரவர் நிலையை உணர்ந்து சுகதுக்கங்களில் பங்கு கொண்டால் சுபிட்ச நிலைமையை ஏற்படுத்தி விடலாம் என்பதே அவர் கொண்டுள்ள கருத்து.

சென்னையில் காந்திஜியை பிராங்க் புக்மன் 1915-ல் சந்தித்து நீண்டநேரம் பேசினார். அப்போது அவர் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவில்லை. ஆனால் இந்த ஸ்தாபனம் ஆரம்பமாவதற்கான வித்து அப்போதே போடப்பட்டுவிட்டது. கடவுள் உண்டு, அவரை நம்பவேண்டும், இதுதான் அடிப்படை. அன்று புக்மன் மனதில் உதித்த இந்த ஸ்தாபனம் இன்று வேரூன்றி சமாதான விருக்ஷமாக பரவி வளர்ந்து வருகிறது.

சமீபத்தில் சென்னை ராஜாஜி ஹாலில் இந்த இயக்கத்தின் கொள்கைகளை விளக்க படக்கண்காட்சி ஒன்றை ஸ்ரீ ஏ. லட்சுமணஸ்வாமி முதலியார் துவக்கி வைத்தார் அது சமயம் எடுத்த படங்களை மேலே காணலாம்.



ஸ்விட்ஸர்லாந்தில் கோ என்ற இடத்தில் எம். ஆர். ஏ. அஸெம்பிளி பிரதி வருஷமும் கூடுகிறது.

சுரங்கக் கம்பெனியின் டைரக்டர் ஒரு தொழிலாளிக்கு தானே பரிமாறுகிறார். இந்த மனோபாவத்தை ஏற்படுத்தியது எம். ஆர். ஏ.



25 வருஷங்களாக கம்யூனிஸ்டு கொள்கையிலே ஊறிப்போன டாம் கீப். மாக்ஸ் பிளாடெக் எம். ஆர். ஏ.யினுல் மனம் மாறி மக்களுக்கு பணி செய்ய ஆரம்பித்திருக்கிருர்கள்.

★



அகில ஆப்பிரிக்க பார்லிமெண்டில் ஏற்பட்ட நெருக்கடியை எம். ஆர். ஏ. தவிர்த்திருக்கிறது. இதனுல் நாடே பயன் பெற்றது என்கிருர் 'கோல்ட் கோஸ்ட்' வடபிரதேச கௌன்ஸில் பிரஸிடென்ட் யாகூபு டாலி.

★

கோல்ட்கோஸ்ட், நைஜீரியா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்கள் எம். ஆர். ஏ.யை ஆதரிப்பவர்கள்.

கென்யா இந்தியர் படேல், புக்மனே பாராட்டுகிருர். 'உலகத்தை வெல்ல ஒரு வழி' என்ற புஸ்தகத்தைப் பாராட்டுகிருர்கள்.

இந்திய பார்லிமெண்டில் பிராங்க் புக்மன் பேசுகிறுர்

இரு அஹிம்ஸா வாதிகள்: ராஷ்டிரபதி ராஜன்பாபுவுடன் புக்மன்.
இந்தியத் தலைவர்கள் குல்ஸாரிலால் நந்தா, அனந்தசயனம்
முதலியோர் பிராங்க் புக்மனை வரவேற்கின்றனர்





பலதரப்பட்ட உலக மக்களுக்குள் பேத மனப்பான்மை இருக்கக் கூடாது என்பதை எம். ஆர். ஏ. இயக்கம் நாடகங்கள் மூலம் விளக்குகிறது. எம். ஆர். ஏ. யின் பொருள் பொதிந்த நாடகமான 'மறையும் தீவு' என்பதில் ஒரு காட்சி......எம். ஆர். ஏ. தினம் அணிவகுப்பு. பல தேசத்தினரும் இதில் கலந்து கொண்டனர்.

புயல் தந்த காட்சிகள்

சத்யம்

சென்னை ராமகிருஷ்ண மிஷன் சார்பில் புயல் வீசிய பிரதேசங்களில் உதவி புரியச் சென்ற இக்கட்டுரை ஆசிரியர் புயலினால் விளைந்த கோரக் காட்சிகளை வர்ணிக்கிறார். இவை ஒவ்வொன்றும் நூற்றுக்கு நூறு உண்மையாக நடந்தவை.

காட்சி 1

1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ம் தேதி பௌர்ணமி. சந்திர கிரகணம்கூட. இரண்டு மூன்று நாட்களாக வானம் முழுதும் மப்பும் மந்தாரமுமாக இருக்கின்றது. அவ்வப்போது மழை. வழக்கமாக வீசும் அலைகளை விடப் பெரிய அலைகள் கடலில் எழுகின்றன. தஞ்சை ஜில்லாவில் வேதாரண்யப் பகுதி. உப்பளங்களுக்குப் பேர்போனது. நெல் வயலில் வேலை செய்வது போன்று உப்பளங்களில் மக்கள் உழைக்கின்றனர். உப்பள வேலைக்குத் தனிப் பயிற்சி அவசியம். கடற்கரைக்கு அருகில் அவ்வாறான தொழிலாளர் சுமார் முந்நூறு பேர் வசிக்கின்றார்கள். ஒரு பக்கம் மீன் வேட்டையாடும் பரதவர் குடிசைகள்.

தவிக்கும் மக்களுக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறது

மாலை நேரம். திடீரென்று அலை வீசிய கடல் ஏரி போல் அமைதியாகி விட்டது. பரதவர்கள் அதனைக் கண்டவுடன் பெரும் புயல் வெகு சீக்கிரம் உருவாகி வருகின்றது என்பதை உணர்ந்து கொண்டனர். தங்கள் பாக்கத்துக் குடிகளைப் பாதுகாப்பான மேட்டு நிலத்துக்கு அனுப்பி விட்டு உப்பளத் தொழிலாளர்களை எச்சரித்தனர். மழை விடாமல் பெய்கின்றது. புயல் என்ன செய்துவிடும் என்ற துணிவோ என்னவோ? மக்கள் எச்சரிக்கையைக் கவனிக்கவில்லை. காற்றும் கடுவேகமாக வீசத் தொடங்குகின்றது. வீட்டை விட்டு வெளியே செல்ல முடியவில்லை. குளிருக்கு பயந்து மக்கள் மூலைகளில் ஒண்டிக் கொள்ளுகின்றனர். திடீரென்று ஒரு பேரிரைச்சல் - அமைதியாகக் கிடந்த கடலரசி சீறிப் பொங்கினாள். நள்ளிரவில் பத்துப் பதினைந்தடிக்கு மேல் அலைகள் கிளம்பி விட்டன. கடற்கரையில் வாழ்ந்தவர் அத்தனை பேரும் கடல் நீரால் ஊருக்குள் சென்றனர். உயிருடன் தப்பியவர் சிலர்தான். பலருடைய பிணங்கள் ஆங்காங்கே ஒதுக்கப்பட்டன. ஒரு

குடிசைகள் வீழ்ந்தன; மக்கள் வருந்தினர்.

மனிதன் நன்ருக நீந்தத் தெரிந்தவன். ஆனல் திக்குத் தெரியாத இரவு நேரம், மழை. தூக்கக் கலக்கம், கடல் பொங்கியதால் ஏற்பட்ட திகில் இத்தனையிலும் அவன் தப்ப முயல்கின்ருன். நீந்திச் செல்கின்ருன். தலை தூக்கினல் பேய்க் காற்று மூழ்கடித்து விடுவது போல வீசுகின்றது. அருகே ஒரு மரத்தைக் காண்கிருன், நீரில் மூழ்குபவன் துரும்பு கிடைத்தாலும் பற்றித் தப்ப முயலுவான் அன்ருே? மரத்தைத் தாவிப் பிடிக்கிருன், ஆனல் ஏற்கெனவே தப்பிப் பிழைக்க ஒரு ஆத்மா அந்த மரத்தை அண்டியிருக்கின்றது. கொடுவிஷமுள்ள கரு நாகம் அது. மரத்தை சுற்றியிருந்த பாம்போடு அணைக்கிருன் அம்மனிதன். அது சீறுகிறது. காற்றின் சீறலில் அதன் சீறல் காதில் படவில்லையோ? கடியைக்கூட முள் குத்துவதாக எண்ணுகின்ருன் அந்த மனிதன்; பிடி தளராது இறுகப் பற்றுகின்ருன். சாவுக்கு அஞ்சி தப்ப நினைத்தவன் சாவினையே தழுவினன். மிகமிக இறுக்கிய பிடியினல் யமனுக வந்த பாம்பும் இறந்து விட்டது. அந்த மனிதனும் பிணமாகிக் கிடந்தான். புயலும் வெள்ளமும் நின்ற சில நாட்களுக்குப் பின்னரே அவன் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அந்நிலையில் கண்டவரெல்லாம் கண்ணீர் விட்டனர். ஏன், கேட்பவரும் கண்ணீர் வடிக்காமலிருப்பாரா? அவ்வளவு சோகக் கதை அது.

வேதாரண்யத்தில் சேவை செய்யும் பொருட்டு சில மாணவர்களுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சார்பில் சென்று இறங்கியவுடன் கேட்ட செய்தி இது. அன்று வேலையை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆதலால் கடற்கரையையும் அதற்கு அருகிலுள்ள பல இடங்களையும் காணச் சென்ருேம். உப்பளத் தொழிலாளரின் குடும்பங்களில் பலவற்றைப் பற்றிய செய்தியே கிடைக்கவில்லை. வழியிலே ஒரு மனிதன் வந்தான். நல்ல வாட்டமான சரீரம். ஆனல் பார்வை எங்கோ லயிக்கின்றது. அவனை மெல்ல புயலைப் பற்றிக் கேட்டேன்.

அவன் கண்ணில் ஊற்றுப்போல் சுரக்கின்றது கண்ணீர். அவன் காட்டும் காட்சியைக் காணுங்கள்.

காட்சி 2

மீன்பிடிப்பவர் புயல் வரப்போகிறது என்று கூறியதை அந்த மனிதன் நம்பினன். எப்படியாவது தன் குழந்தைகளை எடுத்துக் கொண்டு ஊருக்குள் சென்றுவிட வேண்டும் என்று தன் இருகுழந்தைகளையும் தோளில தூக்கிக் கொண்டு ஊரைநோக்கி ஓடினன். அந்தச் சூறைக் காற்றில் நிற்கக் கூட முடியாது. அப்படியிருக்க குழந்தைகளோடு சேற்றில் ஓடி அம்மனிதன் வெகு சீக்கிரத்தில் களைத்து விட்டான். அதனுல் ஒரு குழந்தையை இறக்கி விட்டுக் களைப்பாற நின்ருன். ஒரு விநாடி ஊரைநோக்கிப் புரண்டு வரும் கடல் வெள்ளம் கீழிறக்கிய குழந்தையை உருட்டிவிட்டது. அவன் கதறினன். இன்னெரு குழந்தையையாவது காக்கலாம் என்று அதை முதுகில் அணைத்துக்கொண்டு தப்பியோடினன். அவன் பார்வை எப்போதும் சோகங் கலந்திருந்தது. அதற்குள் உடனிருந்த ஒருவர் அவனைப் பார்த்து "இரண்டு குழந்தைகளையும் தூக்கமுடியாது என்று நீ வேணுமென்றே ஒன்றைத் தள்ளி விட்டாயாமே" என்று கேட்டு விட்டார் இந்தமாதிரிதான் முன் அவனைப்பற்றி யாரோ என்னிடம் கூறினர். இந்த மனிதன் அறிந்து அவ்வாறு செய்யமாட்டான் என்றே தோன்றியது. கதறி அழுதுவிட்டான் "பெத்த மனசுக்குத் தெரியுங்க துன்பம். நான் பாவிங்க, தோளிலேயே சாத்திக்காமே போனேன். தண்ணி வரது தெரிஞ்சா ரெண்டையும் தூக்கிட்டு நீஞ்சிருப்பேனுங்க. சாமி அந்த பலம் தந்திருக்கும்" என்று அழுதான், தன்னை நொந்துகொண்டான் ஆயினும் ஆண்டவனிடத்து எத்தனை நம்பிக்கை அவனுக்கு?

வேதாரண்யத்தில் கஷ்டப்பட்ட மக்களுக்கு கஞ்சித் தொட்டி என்று பல இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த தொண்டர்கள் நடத்தி வந்தனர். பெயர்தான் கஞ்சித் தொட்டியே தவிர உணவு என்னவோ கறிகாய்களுடன் நன்ருகவே இருந்தது. அதற்காக அங்கு கூடுகின்ற மக்களைக் கண்டு பேசினல் எத்தனை எத்தனை விஷயங்கள் வெளிப்படுகின்றன. தள்ளாடித் தள்ளாடி நடந்த ஒரு கிழவி எப்படியோ தப்பியோடி கோயிலிலே சரண் புகுந்தாள். வாலிபர் சிலர் உயிருக்கு அஞ்சாமல் பெண்களையும், குழந்தைகளையும் பத்திரமான இடத்திற்கு அனுப்ப வேண்டி வெள்ளத்தில் பல முறை நீந்திய செய்தியை நன்றியோடு அவர்கள் கூறினர்.

காட்சி 3

தோப்புத்துறை என்பது வேதாரண்யத்திற்கு முந்திய ஸ்டேஷன். அங்கிருந்த ஸ்டேஷன் மாஸ்டர்

பல குடிசைகள் மறுபடியும்
கட்டிக் கொடுக்கப்பட்டன

எத்தனை அவதிக்குட்பட்டுத் தப்பினர் என்ற செய்தி தினசரிகளில் எல்லாம் வெளிவந்தது. தோப்புத்துறையில் முஸ்லிம்கள் அதிகம். பலருக்கும் சிங்கப்பூர், பினங்கு போன்ற ஊர்களில் வியாபாரத் தொடர்பு உண்டு. நல்ல பணக்காரர் சிலரும் அங்கே இருக்கிறார்கள்.



பல இடங்களுக்கு படகு மூலம் செல்ல வேண்டியிருந்தது

ஒரு சாதாரண மனிதர். கஷ்டப்பட்டு பொருள் சேகரித்தவர். பத்திரமாக ஒரு மரப்பெட்டியில் தம் ஆஸ்தியை எல்லாம் பூட்டி வைத்திருந்தார். கடல் வெள்ளம் அவர் வீட்டைத் தரைமட்டமாக்கி விட்டது. உயிர் பிழைக்க ஓடிய அம்மனிதர் தம் செல்வத்தை மறந்துவிட்டார். பத்திரமான இடத்தை அடைந்தவுடன் பணப் பெட்டி நினைவு வந்தது. அதனை எங்கே தேடுவது ? வெள்ளம் வடிந்தபின் வீடு நின்ற இடத்தில் இடிபாடுகளை எல்லாம் புரட்டி விட்டார். பாவம், பெட்டிதான் கிடைக்கவில்லை. பொருளை இழந்த அவர் மனம் வருந்தி நின்றார். ஆனால் சுற்றிலுமுள்ள உயிர்ச் சேதத்தைக் கண்டு 'உயிரோடு தப்பினோமே அது போதும்' என்று நிம்மதியடைந்தார், புயலால் பாழான இடங்களையெல்லாம் கண்டுவரச் சென்றார். தோப்புத்துறை, வேதாரண்யம் அகஸ்தியம் பள்ளி இப்படிப் பார்த்து வருபவர் கோடிக்கரைக்கும் சென்றார். வழி நெடுக வெள்ளத்தில் வந்த குப்பைகளும் துணிமணிகளும் சிதறிக் கிடந்தன. ஓரிடத்தில் கருப்பாக ஏதோ தெரிந்தது. அருகில் நெருங்கிப் பார்த்தார். அடடா அவருடைய பெட்டி! அவரால்கூட அதை நம்ப முடியவில்லை. 'இனி கிடைக்காது' என்று கருதியிருந்த பெட்டி ஏழு மைலுக்கு அப்பாலே கிடைத்தால் எப்படியிருக்கும்! தான் சேர்த்த பணம் தர்ம வழியிலே சேர்த்தது என்று அந்த மனிதர் சொல்லிக் கொள்ளுகிறார்.

கடற்கரையிலிருந்த படகுகளும் கட்டு மரங்களும் உள்நாட்டில் இரண்டு மூன்று மைலுக்கு அப்பால் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்த கோரமான புயலுக்கு விஞ்ஞானிகளும் வானிலையாளரும் கூறும் காரணம் ஒருபுறமிருக்கட்டும். ஒரு மனிதர் விந்தையான காரணம் ஒன்றைக் கூறினார். அவருடைய மனக்குறை என்னவோ தெரியவில்லை. "இந்தப் பசங்க அக்கரை சீமையிலேயிருந்து திருட்டுக் கடியாரம் கொண்டு வந்து விக்கிறாங்க. அதாங்க புயல் வந்திரிச்சு" என்று அழகான காரணமொன்று காட்டுகின்றார் அவர்.

நாங்கள் வந்த மறுநாளே வேலை தொடங்கினோம். பக்கத்திலே இருக்கும் இடங்களுக்குச் சென்று அங்குள்ள சேதத்தை மதிப்பிட்டு ஜனங்களுக்கு என்ன வென்ன தேவையோ அவற்றை எல்லாம் குறிக்கவேண்டும். அதனை ரேஷன் கார்டு போன்ற ஒரு கார்டில் விபரமாகக் குறிக்கவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனைச் சார்ந்தவர்கள் பற்பல கஷ்டநிவாரண வேலையின் அநுபவத்தால் உதவி செய்வதற்குச் சிறந்த முறையொன்றை வகுத்திருக்கின்றனர். அதன்படி வேலை செய்தால் எல்லாமக்களுக்கும் ஏற்றத்தாழ்வில்லாமல் உதவி கிட்டும். கார்டு கொடுக்கும் வேலையை நானும் என் மாணவன் ஒருவனும் தொடங்கினோம். முதலில் வீடுவீடாகப் பார்த்து என்ன தேவை என்று கண்டுபிடிக்கவேண்டும். அதற்காகப் புறப்பட்டபோது அந்த ஊரிலுள்ள ஒருவர் வழிகாட்டுவதாக வந்தார். அன்று முழுதும் நாங்கள் வீடுவீடாகச் சென்று பார்த்து கார்டு வழங்கி

னோம். புதுச்சேலை, வேஷ்டி, குழந்தைகளுக்கு ஆடை, போர்வை முதலியன வழங்கச் சீட்டில் எழுதினோம். மாலையில் களைத்துப்போய் நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்தோம். யாரோ ஒரு ஆள் அங்கே வந்து எங்களைக் காணவேண்டும் என்றான். என்ன என்று விசாரித்ததில் எங்களுக்கு வழிகாட்டியாக வந்தவர் தம் சொந்தக்காரருடைய வீடுகளுக்கே எங்களை அழைத்துச் சென்றதாகவும் மற்றவர் வீடுகளைக் காட்டவில்லை என்றும் புகார் செய்தான். நாங்கள் எழுதிவைத்திருந்த புத்தகத்தைப் புரட்டினோம். பெரும்பான்மையோர் ஒரே சாதியினராக இருந்தனர். அந்த மனிதனின் வார்த்தை உண்மையே என்று நம்ப இடமிருந்தது. அடுத்த நாள் அந்த வழிகாட்டியவர் வந்தவுடன் உடனிருந்த மாணவன் நேரிடையாகவே அந்த விஷயத்தைக் கேட்டான். அவரோ சிரித்து மழுப்பி விட்டார். அன்று அவரில்லாமல் நாங்கள் மட்டும் சென்றோம். அடுத்த நாள் புதுத்துணி வழங்கும்போது கையில் ஒரு கார்டுடன் அந்த மனிதரும் துணிவாங்க வந்தார். கையில் கொஞ்சம் பசையுள்ள அவர் எங்களை ஏமாற்றி விட்டார் என்று கண்டு கொண்டோம். "நீங்கள் நாலு பேருக்குத் தரக்கூடிய நிலையிலுள்ளவராயிற்றே. நீங்களுமா துணி வாங்க வர வேண்டும்" என்ற போது கார்டை எங்களிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி விட்டார் அம்மனிதர்.

மனிதத்தன்மையின் சிறந்த குணங்களும் அங்கு வெளிப்பட்டன. வேதாரண்யத்தின் ஒரு பகுதியில் ஒரு இளைஞர். ஆறுமுகக்கோனார் என்று பெயர். சற்று நல்ல நிலையில் இருந்தவர். வீட்டுக்கூரை அப்படியே விழுந்து கிடந்தது. எப்படியோ வீட்டிலிருந்த நெல்லையும், துணிகளையும் பத்திரப்படுத்தி விட்டார். ஏழை மக்கள் கஞ்சித்தொட்டிக்கு வந்து உண்டனர். சற்று மரியாதையாகப் பிழைத்தவர்கள் அங்கு வந்து வாங்க விரும்ப

ஏழை மக்களுக்கு துணிகள் வழங்கப்பட்டன

வில்லை. அப்படிப்பட்டவர்க்கு அரிசியாக வழங்கலாம் என்று விசாரித்து வழங்குவதுண்டு. சிலர் கேட்டு வாங்குவதுமுண்டு. சிலர் அதிகாரத்தோடு கேட்டனர். ஆனால் ஆறுமுகக் கோனாரோ நாங்கள் கேட்டபோது, "எதுக்குங்க அரிசி. எப்படியோ கொஞ்சம் காப்பாத்திட்டேன். வேறே ஏழைக்கு அதைக் கொடுங்க" என்று கூறினார். வியப்போடு நாங்கள் புறப்பட்டோம்.

காட்சி 4

இதோ மாணவத் தொண்டர்கள்! புடவைகளை அடுக்கி வைத்து வழங்குகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த சுவாமிஜி அங்கு அமர்ந்து கொண்டு கவனிக்கிறார். அப்போது ஒரு ஸ்திரீ அங்கு வந்தாள். அவளுக்குக் கொடுத்த புடவையைப் பெற்றுக் கொண்டாள். மெல்ல "கெட்டிச் சாயமா" என்றாள். ஆமாம். சீக்கிரம் வழிவிடு" என்றேன். "இந்தாங்க பிடிக்கலிங்க" என்றாள். ஒரு சிலர் "கடைலே சீலை வாங்கருப்பலே பொறுக்குறாளே" என்று ஏளனச் சிரிப்புச் சிரித்தனர். இதற்குள் ஒரு தொண்டர் சற்றுத் துடுக்கானவர் "தானம் கொடுத்த மாட்டை......" என்று ஆரம்பித்தார். அந்த அம்மா புடவையை அங்கேயே போட்டுவிட்டு ஏதோ முணுமுணுத்துக் கொண்டு போய் விட்டாள். எதிலும் திருப்தியடையாத இனத்தில் ஒன்று போலும்.

வேதாரண்யத்தில் கஷ்ட நிவாரண வேலைக்கு மிக உதவியாக இருந்தனர். சர்தார் வேதரத்னம் பிள்ளையவர்களும் சுப்பையாபிள்ளை அவர்களும். அடுத்த நாளே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைமைக் காரியாலயத்திலிருந்து "பரமக்குடிக்குப் புறப்படு" என்று கம்பியில்லாத் தந்தியில் உத்தரவு வந்துவிட்டது. மறைக்காட்டப்பனை அவசர அவசரமாகப் பார்த்து விட்டுப் புறப்பட்டேன். பொங்கி வந்த கடலலை ஆலயத்திற்கு அருகில் வந்தவுடன் இரண்டாகப் பிரிந்து வடக்கிலும் தெற்கிலும் பரவியது. ஆண்டவன் கோயிலில் நீர் புகவில்லை. மக்களுக்குப் புகலிடம் தந்தது. இதைப் பற்றி வேதாரண்யத்தில் பேசாதவரில்லை!

டிசம்பர் மாதம் 19-ந் தேதி தேவகோட்டை டெப்டி கலெக்டருடைய ஜீப்பில் ஏறிக் கொண்டு வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்க்கலானோம். பாதை என்று ஏதேனும் இருந்தால் தானே! மண்வெட்டி ஒன்றுடன் போயிருக்க வேண்டும். அடிக்கடி மேடுபள்ளங்களைத் தட்டிவிட்டு வழி செய்து கொள்ள வேண்டும். பகலெல்லாம் கிராமம் கிராமமாகத் திரிந்துவிட்டு இரவில் தொண்டிக்கருகில் வரும்போது புதை சேற்றில் ஜீப் சிக்கிவிட்டது. வண்டியிலிருந்த எல்லோரும் இறங்கினோம். முழங்காலுக்கு மேலும் சேறு. எப்படியோ பக்கத்திலிருந்த கலியநகர் என்ற சிற்றூரை அடைந்து ஆட்களைத் திருப்பி ஜீப்பை மெல்ல விடுவித்துச் சுற்றி வளைத்து இரவு 2-30க்கு தேவகோட்டை அடைந்தோம்.

அடுத்த நாள் திருவாடானை தாலுக்கா சனவேலி கிராமத்தில் முகாமிட்டு வேலை தொடங்கினோம். வேதாரண்யத்தில் உணவுக் கவலை இல்லை. ஒரு சமையற்காரர் எங்களுக்கென்றே இருந்தார். இந்தக் கிராமத்தில் என்ன கிடைக்கும்? மலேயாவில் வியாபாரம் செய்யும் சேது என்ற இளைஞர் இங்கு தம் தாயாரைக் காண வந்திருந்தார். பல விதங்களிலும் எங்களுக்கு உதவி புரிந்தார், உணவுக்கும் தம் வீட்டிலேயே ஏற்பாடு செய்தார். மிகப் பரிவோடு மீன் குழம்பு வைத்திருந்தனர். சுத்த சைவமான எங்களுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை! நல்லவேளையாக இலையில் உட்காரு முன் கூறியதனால் சங்கடம் ஏற்படவில்லை. வெகு சீக்கிரத்தில் கருணைக் கிழங்குக் குழம்பு வந்துவிட்டது. பால் மோர் ஏதும் அங்கு கிடைக்காது. அடுத்த நாள் முதல் நாங்களே கஞ்சியோ கூழோ சமைத்துக் கொள்வது என்று முடிவு செய்தோம்.

இராமநாதபுரம் ஜில்லாவில் வெள்ளத்தால் சேதம் மிக அதிகம். ஒரு வருஷத்தில் பெய்ய வேண்டிய மழை இரண்டு நாளில் பெய்ததால் ஏரி குளங்கள் எல்லாம் உடைப்பெடுத்து விட்டன. திருவாடானைப் பகுதியில் ஓடும் கோட்டக்கரை ஆறு பெருஞ் சேதம்விளைத்தது. சிற்றூராக இருந்தது

வெள்ளத்திற்குப் பின் அரைமைல் அகலம் மணலாகப் பரவி விட்டது, அழியாமொழி, ஓடைக்கால், மணக்குடி, கன்னிக்குடி, காரங்காடு, முள்ளிமுனை ஆகிய ஊர்கள் பலத்த சேதமடைந்தன.

இந்தப் பகுதியிலும் மனத்தை உருக்கும் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஒன்றைமட்டும் கூறுகின்றேன்,

காட்சி 5

இடைவிடாத மழை. வெள்ளப் பெருக்கு ஊருக்குள் நுழைகின்றது. ஆற்று வெள்ளமா மெல்ல மெல்ல ஏறி வர? உடைந்த ஏரிநீர் திடீரென்று புகுகின்றது. ஒரு குடிசையில் ஒரு இளம்பெண். பூரண கர்ப்பிணி. பிரசவவேதனை வந்துவிட்டது. பாவம் என்ன செய்வது? அருகிலே ஒரு மொட்டை வண்டி. அதை அருகிலிருந்த பெரிய மரத்தோடு பிணைத்தனர் அந்த வீட்டுக்குரியவர்கள். வெள்ளம் ஏற ஏற வண்டி மிதக்கத் தொடங்கியது அந்த வண்டியில் இந்த கர்ப்பிணி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மூன்று நாட்கள் அங்கேயே இருந்து நடுங்கிப் பத்திரமான இடத்தைத் தாயும் குழந்தையும் அடைந்தனர். இந்தப் பிள்ளைப் பேற்றுக்குத் துணையாக இருந்த ஸ்திரீ இந்த வரலாற்றை மிகப் பெருமையோடு எடுத்துக் கூறினர்.

இது போன்று நெஞ்சை உருக்கும் கதைகள் பல. கோட்டக்கரை யாற்றின் பக்கத்தே தேநீர்க் கடை வைத்திருந்த அந்தோணி குடும்பத்தோடு கூரையில் மிதந்து சென்ற செய்தி கேட்டு மயிர் கூச்செறிந்தோம்.

புயல் இந்தச் சோகக் காட்சிகளை மட்டும் தரவில்லை. இன்பமான காட்சிகளையும் தந்திருக்கின்றது. நெடுநாட் பகைவரைக்கூட நண்பராக்க ஓரிடத்தில் கூட்டிவைத்தது புயல். மக்கள் தன்மையின் நல்ல அம்சங்கள் பலவும் வெளிப்பட்டன

உதவி வேண்டுபவர்க்கு உணவும் உடையும் கொடுப்பதோடு வீடுகட்டப் பண்டங்களும் பாத்திரங்களும் கூடக் கொடுத்தனர் தொண்டர்கள். அதைப் பெற்றுக் கொள்ளும்போது மக்களின் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சிக்கு ஈடாக எதைக் கூறுவது? வாழ்வெல்லாம் இந்த சேவை செய்தால் போதுமே என்று தோன்றும். சே என்ன சுயநலம்! அவர்களுடைய மகிழ்முகத்தைக் காணவேண்டுமென்பதற்காக என்றென்றும் அவர்கள் துன்பப்படவேண்டுமா என்று எண்ணம் புரட்சி செய்தன.

புயலைப்பற்றியும் வெள்ளத்தைப் பற்றியும் கந்தப்பசெட்டி என்ற கிழவரிடம் பேசிக்கொண்டிருந்தோம். வயது எழுபது இருக்கும். சுக்குப் போன்ற சரீரம். ஆற்று வெள்ளத்தில் ஒருதரம் எமனைப்பார்த்து வந்தவர். ஒரு பனைமரத்தைக் கட்டிக் கொண்டு தப்பிவந்தவர். காலெல்லாம் காயம். அதிகமாகப் படித்தறியாத அந்தக் கிழவர் பேச்சில் உண்மை கண்டோம்.

"புயல் வந்தது· நல்லதுக்குத்தானுங்க, இல்லாட்டி நீங்க வந்திருப்பீங்களா? பட்டணத்து சனங்களுக்கு எங்களை நினைவுபடுத்த வந்ததுங்க"

"என்ன தாத்தா வெள்ளத்துலே ஏழைங்களுக்கு ரொம்ப நஷ்டமாமே" என்று ஒருவர் கேட்டார். உடனே கந்தப்பர் சிரித்துக்கொண்டு "அதுக்கு முன்னாலேதான் என்ன இருந்ததுங்க இழக்கறத்துக்கு. கந்தை போய் புதுத் துணியெல்லாம் வந்திருச்சு. அஞ்சு வருஷத்துக்கு ஒருதரம் ஓலை மாத்த முடியாத குடிசைக்குக் காசில்லாம ஓலை கிடைககிறது. புசலு நல்லது தானுங்க செஞ்சது" என்று கூறினர். செட்டியார் சொன்னது நியாயம் தானே! பரம்பரை வறுமையைப் போக்க நாம் எவ்வளவோ செய்ய வேண்டுமே!

புயல் இன்னும் சிலருக்கு நன்மை தந்தது. அடுத்து வரும் தேர்தலை மனததில் கொணடு தொண்டாற்ற வந்து தொந்தரவு தந்த அரசியல் வாதிகள் சிலர். ஊர் பேர் கூடத் தெரியாமல் உதவி செய்துவிட்டு மனநிறைவு கொண்ட விளம்பரம் விரும்பாத சிலர். சாதிக்கட்டுப்பாடுகள் நிறைந்த கிராமவாசத்தில் மனிதன் ஏற்படுத்திய வித்யாசங்களை மறந்து யாவருக்கும் அடைக்கலம் தந்து மனிதத் தன்மையுடன் விளங்கிய சிலர். இப்படிப் பற்பல காட்சிகளை நிருபித்துக்காட்டியது புயல். ★

★ பூமியின் வயது என்ன? இக்கேள்விக்கு ஒவ்வொரு துறையிலுள்ளவர்கள் ஒவ்வொரு மாதிரி கணக்கிட்டு விடை கண்டுபிடிக்க முயல்கிறார்கள். கடவுள் உண்டானது முதற்கொண்டே உலகம் உண்டாயிருக்க வேண்டும் என்பது வேதங்களின் கருத்து. கடவுள் அனாதி என்றால் உலகமும் அனாதியானதுதான். பல்வேறு துறையிலுள்ளவர்கள் இக்கேள்விக்கு விடை காண தேடியுள்ள வழிகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டிருக்கின்றன.

பூமியின் வயது என்ன?

எஸ். மகாலிங்கம்

நாம் யாருடனாவது பேசிக்கொண்டிருந்தால், அவர் யார், அவர் பெயர் என்ன, அவருடைய வயதென்ன என்ற விவரங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றோம். நாம் இந்த பூமியில் பிறக்கிறோம், இதில் வாழ்கிறோம், பிறகு இங்கேயே மறைகிறோம் அப்படிப்பட்ட இந்த பூமியின் வயது என்ன என்பதைத் தெரிந்துகொள்வதில் அக்கறை கொள்வது அவசியமல்லவா?

நமது பூமியின் வயது என்ன, என்ற கேள்வியைக் கேட்டால், இது என்ன அபத்தமான கேள்வி என்று பலர் சொல்லுவார்கள். இதைப்பற்றி நாம் யோசித்ததில்லை என்பார் மற்றும் சிலர். இது எத்தனையோ நாளாக இருந்து வருகிறது. இதை யாரால் கணக்கிட முடியும், சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்பார் வேறு சிலர். இப்படிச் சொல்கிறவர்களைப் புறக்கணித்து இந்தக் கேள்விக்கு சரியான பதில் கூறமுடியுமா என்று சற்று ஆராய்வோம்.

முதல் முதலாக கிறிஸ்தவர்களின் வேத நூலாகிய பைபிளில் (சுவிசேஷத்தில்) இதைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்று பார்ப்போம். பைபிளை பிரித்தவுடனேயே, காணப்படும் முதல் அத்தியாயம் "ஜெனிஸிஸ்" (Genesis). ஜெனிஸிஸ் என்றால் "பிறப்பு" என்று பொருள். இவ்வத்தியாயத்தில் பூமியின் பிறப்பைப்பற்றியும், செடி, கொடி இவைகளின் பிறப்பைப் பற்றியும், பிறகு மிருகங்கள், பட்சிகள் இவைகளின் பிறப்பைப்பற்றியும் கடைசியில் மனித வர்க்கத்தின் பிறப்பைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிறப்பிற்கும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது, முதல் பக்கத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் வருஷம் 4004 கி. மு. அதாவது பைபிள் பிரகாரம் இவ்வுலகமே கி. மு. 4004-ல் தான் சிருஷ்டிக்கப்பட்டது. இப்

பொழுது 1956 கி. பி. ஆதலால் இப் பூமியின் வயது மொத்தம் 5960 வருஷங்களாகும். அதாவது சுமார் 6000 வருடங்கள் என்று புலப்படு கின்றது.

இன்னும் பைபிளில் என்ன சொல்லியிருக்கிறதென்ருல். 'கடவுள் இவ்வுலகத்தை ஆறேஆறு நாட்களில் சிருஷ்டித்தார்' என்பதாகும்.

"ஆறே ஆறு நாட்களில் படைப்புத் தொழில் எல்லாவற்றையும் செய்ய முடியுமா? இது சாத்தியமா?" என்று யாராவது கேட்டால், சில குருமார்கள் "பைபி"ளில் சொல்லப்பட்ட நாள் சாதாரண நாள் அல்ல. அதில் கூறப்பட்ட ஒவ்வொரு நாளும் ஒரு ஆயிரம் வருஷங்களைக் குறிக்கிறது" என்று சமாதானம் சொல்லுகின்றனர். அதாவது இவ்வுலகத்தைப் படைப்பதற்கு 6000 வருஷங்கள் ஆயின என்கிருர்கள்.

சரித்திர ரூபமாகப்பார்த்தாலோ, இது மிகவும் குறைவானமதிப்பு என்று தோன்றுகிறது; ஏனெனில் சுமார் 15,000 வருஷங்களுக்கு முன்பிருந்த ஜனங்களின் நாகரீகத்தைப் பற்றி பழங்காலத்திய ஆராய்ச்சியாளர்கள் பல குறிப்புகளை நமக்குக் கொடுத்திருக்கின்றனர். அப்படியிருக்க, நாம் இதை எங்ஙனம் ஒப்புக்கொள்வது?

ஏனெனில், இந்தியாவிலுள்ள ஹிமயமலையிலும், ஆப்பிரிக்கா விலுள்ள சஹாரா என்ற பெரிய பாலை வனத்திலும், பலவிதமான சிப்பிகளும் கிளிஞ்சல்களும் அகப்படுகின்றன அதிலிருந்து தெரிகிற உண்மை என்ன வென்ருல், முன்னொருகாலத்தில் இந்த ஹிமயமலையும். சஹாரா பாலைவனமும் கடல் மட்டத்துக்குக் கீழே இருந்தன என்பதாம்.

ஹிமயமலையின் மேலுள்ள கிளிஞ்சல் களைப் பரிசோதித்தால், அவைகள் கடலின் கீழிருந்து, 15000 அடி முதல் 20,000 அடிவரையில மேலே கிளம்புவதற்கு சில லக்ஷ வருஷங்களாவது ஆகும் என்று தெரிகின்றது. ஆகையால், பூகோள ஆசிரியர்கள் இப் பூமியின் வயது 5 லக்ஷம் வருஷங்களுக்குக் குறைவில்லை; பத்து லக்ஷம் வருஷங்கள் இருந்தாலும் இருக்கலாம் என்கிருர்கள்.

இதைப்பற்றி விஞ்ஞானிகளின் கருத்து என்ன என்று தெரிந்து கொள்வோம். சாதாரணமாக ஒரு நதி என்ருல், தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் பாதை என்று நாம் நினைக்கிரேம். விஞ்ஞானிகள், தண்ணீர் மட்டுமல்ல. வண்டல் மண்ணையும் சமுத்திரத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வேலைதான் முக்கியம் என்று கருதுகிருர்கள். அமெரிக்காவிலுள்ள பெரிய நதி மிஸிஸிபி. அது ஒரு நாளில் எவ்வளவு வண்டல் மண்ணை சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது தெரியுமா? ஒவ்வொரு நிமிஷத்திலும் 800 டன் வண்டலையும், 10,00,000 டன் தண்ணீரில கரைந்துள்ள 200 டன் சுண்ணும்பையும் கொண்டுபோய்க் கொட்டுகிறது. இவ்வளவு வண்டலையும். சுண்ணும்பையும், மணலையும் எடுத்துக்கொண்டு போவதற்கு எவ்வளவு ரயில் வண்டிகள் வேண்டும் தெரியுமா? ஒவ்வொரு பெட்டியிலும் 25 டன் வீதம், 50 பெட்டிகள் கூடிய ரயில் வண்டித் தொடரை, நாள் ஒன்றுக்கு 900 தடவைகள் ஓட்டிஞல்தான் இவ்வேலையைச் செய்ய முடியும். இதிலிருந்து உலகத்திலுள்ள எல்லா நதிகளும் எவ்வளவு வண்டல் மண்ணை சமுத்திரத்தில் கொட்டுகின்றன என்று பார்த்தால், 2000 கோடி டன்கள் ஆகின்றன. இவ்வளவு மண்ணும், மணலும். வண்டலும் சமுத்திரத்தின் அடி மட்டத்தில் படிகின்றன. ஒரு வருஷத்தில் சமுத்திரத்தின் கீழே எவ்வளவு கனமாக வண்டல் படிகிறது என்பதை நிர்ணயித்திருக்கிருர்கள். இந்த வண்டல் மண்ணை சமுத்திரத்தின் கீழே தோண்டிப் பார்த்ததில், அது 56 மைல் கனமாயிருக்கிறது இவ்வளவு கனமாக வண்டல் மண் படிவதற்கு, எத்தனைவருஷங்கள் ஆகியிருக்க வேண்டுமென்று கணக்குப் போட்டதில் சுமார் இரண்டு கோடி வருஷங்கள் என்ற விடை கிடைக்கிறது. அதாவது நமது பூமியின் வயது குறைந்தது இரண்டு கோடி வருஷங்கள் என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

நமது பூமியின் வயதை நிர்ணயிக்க இன்னொரு வழியுண்டு. இது பிராணி-நூல் வல்லுநர்களால் ஆராயப்படுகிறது. பிராணிகளின் அவயவங்கள் சிறிது சிறிதாக மாறுகின்றன. பழங்காலத்துப் பிராணிகளில் சில

இப்போது இல்லவேயில்லை. அக் காலத்துப் பிராணிகளின் அவயவங் கள் எப்படி யிருந்தன என்பதைப் பரிசோதித்து, இக்காலத்துப் பிராணி களின் அவயவங்களாக மாறுவதற்கு எவ்வளவு நீண்ட காலம் வேண்டும் என்று பார்த்தால், சுமார் 10 கோடி வருஷங்கள் வேண்டும் என்று நினைக் கிறார்கள். அப்படியானால் நமது பூமி யின் வயது குறைந்தது பத்துகோடி வருஷங்கள் என்று தெரிகிறது.

பூமியின் வயதை அளப்பதற்கு ரஸாயன சாஸ்திரிகள் இன்னொரு முறையைக் கையாளுகின்றனர் பூமி முதன் முதலில் ஏற்பட்ட சமயத்தில் கடல் நீரில் உப்பேயில்லை. ஆனால் இப்போது கடல் நீர் உப்பாயிருக் கிறது. ஒருபடி சமுத்திர நீரில் எவ் வளவு உப்பு இருக்கிறது என்பதை நாம் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். சமுத்திரத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பது நமக்குத் தெரி யும்; ஆதலால், சமுத்திரத்தில் எவ் வளவு மொத்தம் உப்பு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். உப் பின் மூலகப் பொருள் ஸோடியம் தான். உலகத்தில் உள்ள நதிகளில் ஓடும் தண்ணீரில் எவ்வளவு ஸோடி யம் இருக்கிறது என்பதை ரஸாயன சாஸ்திரிகள் அளந்து வைத்திருக்கி றார்கள். சமுத்திரத்தில் உள்ள ஸோடியம் எவ்வளவு என்பதும் தெரி யும். ஒவ்வொரு வருஷத்திலும் எவ் வளவு ஸோடியம் வருகிறதென்றால், சமுத்திரத்திலுள்ள அவ்வளவு ஸோடியமும் வருவதற்கு எத்தனை வருஷங்களாகும் என்று கணக்குப் போடுவது எளிது. இப்படிப் பார்த்த தில் நமது பூமியின் வயது சுமார் 10 கோடி வருஷங்கள் என்று தெரி கிறது.

பௌதிக நூலாசிரியர்கள்கூட நமது பூமியின் வயதைக் கண்டு பிடிக்க முன்வந்திருக்கிறார்கள். அவர் களுடைய வழி என்ன வென்றால் யூரேனியம் என்று ஒரு உலோகம் இருக்கிறது. அது நாளடைவில் ரேடியமாக மாறுகிறது. இந்த ரேடிய மானது நமது கண்ணுக்கெதிரேயே ஈயமாக மாறுகிறது. இந்த ரேடியம் ஒளி வீசும் தன்மையுடையது. இப்படி ரேடியத்திலிருந்து ஒளி வந்து கொண்டே யிருந்தால் கடைசியில் அந்த ஒளி மங்கி, அது ஈயமாக மாறு கிறது. இப்போது உலகத்திலுள்ள யூரேனியம் எவ்வளவு, ரேடியம் எவ் வளவு, ஈயம் எவ்வளவு என்பது தெரிந்திருக்கிறது, ஒரு குறித்த நிறை யூரேனியம் ரேடியமாவதற்கு எவ்வளவு காலம் செல்லும்; ஒரு குறித்த நிறை ரேடியம் ஈயமாவதற்கு எவ்வளவு காலம் செல்லும்—என் பதை யெல்லாம் கணக்கிட்டிருக்கிறார் கள். இவ்வகையில் பார்த்தால், இவ் வுலகத்திலுள்ள ரேடியமும், ஈயமும் உண்டாவதற்கு சுமார் 45 அல்லது 50 கோடி வருஷங்கள் செல்லும் என்று தெரிகிறது. ஆதலால் நமது பூமியின் வயது 45 கோடி அல்லது 50 கோடி வருஷங்கள் என்கிறார்கள்.

சில பஞ்சாங்கங்களில் ஒவ்வொரு யுகத்தின் அளவும் குறிக்கப்பட்டிருக் கிறது, கிருத யுகம் 17,28,000 வருஷம், திரேதாயுகம் 12,96,000 வருஷம். துவாபர யுகம் 864,000 வருஷம். கலி யுகம் 4,32,000 வருஷம். ஆகையால் இந்த நான்கு யுகங்களும் சேர்ந்து, 43,20,000 வருஷம். இந்த எண்ணுக்கு ஒரு யுகாந்தரம் என்று பெயர்.

இவ்வளவு பெரிய எண்ணிக்கையை ஒரு நூறு வருஷங்களுக்குமேல் உயிர் வாழாத மனிதனால் சிந்தனை செய் வதே அரிது!

நமது வேதங்களில் சொல்லியிருப் பது என்னவெனில், "கடவுள் எப் பொழுது உண்டானாரோ அது முதற் கொண்டே இவ்வுலகமும் உண்டு; அவர் அனாதி என்றால், நமது பூமியும் அனாதியானது என்றே சொல்ல வேண்டும்."

இவ்வுண்மையையே சுவாமி விவே கானந்தர் அமெரிக்காவில் செய்த பிரசங்கங்களில விளக்கிக் காட்டினார். அது சரியாகப் புரியவில்லையே என்று கேட்டவர்களுக்கு அதாவது சிருஷ்டி யும், சிருஷ்டிகர்த்தாவும் சமதூரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நேர்கோடுகள் என்று சொன்னவுடன், எல்லோரும் வெகு ஆச்சரியப்பட்டார்கள்.

ஆகையால் பூமி அனாதியானது என்பது வேதங்களின் துணிபு. இதை மறுக்க எவராலேயும் முடியுமா? ★

★ மனித உடலின் முக்கிய உறுப்பு இதயம். ஒரு கடிகாரம் வேலை செய்ய அதன் 'பெண்டுலத்'தின் ஓட்டம் எவ்வளவு அவசியமோ, அதேபோல் மனித உடலின் இயக்கத்திற்கு இதயத்தின் இயக்கம் இன்றியமையாதது. உடலின் 'இரத்தக் களஞ்சியமான'' இதயத்தின் ரகஸ்யங்கள் சிலவற்றை நாம் தெரிந்து கொண்டால் 'இதய நோய்'பற்றி நம்மிடையே பரவியுள்ள பயங்கரச் சிந்தனைகளிலிருந்து நாம் ஓரளவு விடுதலை பெறலாம்.



இதயத்தின் ரகஸ்யங்கள்..

பரத்வாஜ்

''மனித இதயம் மிகவும் மிருதுவானது. இரக்கத்தின் பிறப்பிடமே இதயம் தான். இரக்கமற்ற செயல்களைச் செய்பவனை 'இதயமற்றவன்' என்று நாம் துணிந்து சொல்லுகிறோம். ஆனால். விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது இதயம் நம் எண்ணத்திலுள்ளபடி மிகவும் மென்மையானதாக இல்லை—உடலிலுள்ள மற்றெல்லா உறுப்புகளையும் விட உறுதித் தன்மை வாய்ந்த சதைப் பிண்டம்தான் இந்த இதயம்'' என்று தன் கருத்தை வெளியிடுகிறார் வைத்திய நிபுணர் ஹார்வி டே.

மனிதன் தலைவலிக்குப் பயப்படுவதில்லை; கண் வலிக்குக் கவலைப்படுவதில்லை; கை, கால் முறிந்தாலும் அதிகக் கவலை கொள்வதில்லை. ஆனால் மார்பின் அருகில் ஏதாவது அற்பமான உபத்திரவம் ஏற்பட்டாலும் கதி கலங்குகிறான். காரணம், மார்பில் ஏற்படும் வலி, இதயத்திற்கு ஆபத்து விளைவித்து அதன் காரணமாக இதயத்தின் இயக்கம் தடைப்பட்டு உயிர்போய் விட்டால் என்ன செய்வது என்ற பயம் தலைதூக்குகிறது. 'சாதாரணமார்வலி தன் அகால மரணத்திற்கு மூலகாரணமாகிவிடும்' என்ற தவறான அபிப்பிராயம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்து வருகிறது. நெஞ்சுத்துடிப்புடன், பயம் மிகுந்து அவன் டாக்டரை நெருங்குகிறான். டாக்டர் சர்வசாதாரணமாக அவன் உடலைப் பரிசோதித்து விட்டு மருந்து கொடுத்தனுப்புகிறார். அவ்வாறு டாக்டர் அலட்சியமாக நடந்து கொண்டால்தான் 'இதய நோயாளி' யாகச் சென்றவனின் உள்ளத்தில் கொஞ்சம் தைரியம் பிறக்கும். பரிசோதனையின் போது டாக்டரின் முகத்தையே உற்றுப்பார்த்து வரும் இவன், அவர் முகத்தில் ஏதேனும் சற்று ஏமாற்றக் குறியைக் கண்டுவிட்டாலும் போதும்! குலைநடுக்கம் ஏற்பட்டு 'தன் இதயம் கெட்டுவிட்டது—இனி அதிகநாள் இயங்காது.'—என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் இதயத்தின் ரகஸ்யங்கள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாமலிருப்பதுதான்.

மனித இதயத்தின் அளவு ஒவ்வொருவரின் இடக்கையை மூடிய போது எவ்வாறு காக்ஷியளிக்கிறதோ அதே தோற்றம்தான்; உறுதியான சதைப்பிண்டமான இதயம்

இதயத்தைப்பற்றி...

- ★ இதயம் நாளொன்றுக்கு 103,680 தடவைகள் துடித்து, 2500 காலன் ரத்தத்தை உற்பத்தி செய்கிறது !
- ★ உடலின் ஒவ்வொரு உள்ளுறுப்பும் ஒன்றையொன்று நம்பி வாழ்கின்றன. ஒன்று பாதிக்கப்பட்டால் மற்றொன்று நிச்சயம் பலவீனமடைகிறது. மூத்திரகோசம் பாதிக்கப்பட்டால் இதயம் உடனுக்குடன் பாதிக்கப்படும்.
- ★ மிதமாக மது அருந்துவது இதய இயக்கத்திற்கு நன்மை தரும். அதிகமாக காபி அருந்துபவரின் இதயம் வேகமாகத் துடிக்கும்.
- ★ மார்பின் இடதுபுறவலியால் நடுங்க வேண்டாம். மார்பின் மத்தியில் வலியுடன் சிரமமான சுவாசம் உண்டாவதே இதய நோயின் அறிகுறி.

உடலின் 'இரத்தக் களஞ்சிய'மாக இருந்து வருகிறது. சாதாரண எந்த வித அற்பத் தாக்குதலாலும் நம் இதயம் பாதிக்கப்படுவதில்லை. உருவத்தில் ஒரு மாங்காய் போன்று காக்ஷியளிக்கும் இந்த உறுப்பு ஒவ்வொரு நிமிஷமும் 70 முதல் 80 வரை துடிதுடித்து இரத்த உற்பத்தியைப் பெருக்கி உடலெங்கும் வியாபிக்கச் செய்கிறது. கண்கள் மூடியிருக்கலாம்; கை, கால்கள் அசைவற்றுக் கிடக்கலாம். ஆனால் இதயம் மட்டும் மனிதனின் வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி இயங்குகிறது.

இதயம் நான்கு அறைகளைக் கொண்ட ஒரு சதைப் பெட்டி. நான்கு அறைகளிலும் நான்கு சிறு வாயில்களைக் கொண்ட ஓர் 'இரத்தக் களஞ்சியம்'. கீழ் தளத்திலுள்ள நீரை இறைத்து மேலெழும்பச் செய்ய 'போரிங்-பம்ப் உதவி வருவதைப் போல ரத்த சுழற்சிக்கு இதயம் தன் வேலையைச் செய்து வருகின்றது. கணக்கற்ற நுண்ணிய ரத்தக் குழாய்களாலேயே இந்த உறுப்பு உருவாகியிருக்கிறது.

சமீபகாலமாக இதய நோய் விரைவில் பரவி, மனிதனை அகால மரணத்திற்குள்ளாக்கி வருவதை நாம் அறிந்து வருகிறோம். 'திடீரென்று தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிக்கை வெளியிடுவதைப் போல் இதயமும் வேலை நிறுத்தம் செய்துவிடுமோ' என்ற பயம் விநாடிக்கு விநாடி வளர்ந்து கொண்டே வருகிறது.

நரம்புத் தளர்ச்சி இதய நோயின் வாயிற்படி. இதய நோய்க்கு வரவேற்பு பத்திரம் வாசித்து உடலினுள் வரவேற்கும் பொறுப்பை நரம்புத் தளர்ச்சி வியாதியான 'நியூரோ ஸர்குலேடரி ஆஸ்த்மா' ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வியாதியின் காரணமாக உண்டாகும் இதய நோய், மனிதனை விரைவில் இறந்துவிட அனுமதிப்பதில்லை. குறைந்தது ஒரு வருடகாலம் அடிக்கடி மார்வலியால் வருந்தச் செய்த பின்பே அவனை மரணதேவதையிடம் ஒப்படைக்கின்றது. நாடித் துடிப்பை பாதிக்கச் செய்யும் சக்தியும் இதற்கு உண்டு. வேகமாகத் துடிப்பை உண்டாக்கி மனிதனை கவலையிலாழ்த்தும். துடிப்பு இருப்பதாகவே தெரியாமல் செய்து, மறுபடியும் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதும் இதன் தன்மை. இத்தகைய இதன் விளையாட்டை 'பராக்ஸிமல் தாட்சிகார்டியா' என்றழைக்கின்றனர் விஞ்ஞானிகள்.

உலகெங்கும் பரவியுள்ள இதய நோய்கள் நான்கு என்று தீர்மானிக்கப்பட்டுள்ளன. நீடித்த வாதரோகம் கவனிக்கப்படாவிட்டால் அதனால் இதயம் உடனே பாதிக்கப்படும் வாதரோகம், இருதயத்தினுள் எரிச்சல், அழற்சி போன்ற உபத்திரவங்களை உண்டாக்கி அளவுக்குமீறி அதனை விரிவடையச் செய்யும். காற்றினால் பருமனடையும் பலூன் அதிகக் காற்றை உட்கொண்டால் வெடித்துவிடுவது இயற்கைதானே! இதே முடிவுதான் முற்றிய வாதரோகத்தால் இதயத்திற்கும் உண்டாகிறது! இதயத்தின் ரத்தம் சுரக்கும் தன்மையைத் திடீரென்று அதிகமாக்கி, அதனுள் சிறு துவாரங்களையும் உண்டாக்கி அளவுக்கு மீறிய ரத்தக் கசிவையும் ஏற்படுத்தும் தன்மை வாதரோகத்திற்கு உண்டு. 'ருமாடிக் ஹார்ட் டிஸீஸஸ்' என்ற இந்நோயை

ஆரம்பத்திலேயே குணப்படுத்திவிட்டால், இதயத்தில் இதனுலுண்டான இரத்தக் கசிவு சீர்படாவிட்டாலும் மனிதன் உயிர் வாழ இயலும்.

'ரத்தக் கொதிப்பு' இதயத்தின் ஜென்மவிரோதி! ரத்தத்தை அதிகமாக உற்பத்தி செய்யும் சக்தியை இதயத்திற்கு உண்டாக்கி, ரத்தநாளங்களால் சக்திக்கு மீறி ரத்தம் சுமக்க நேரும்படி செய்வதால் அவைசேதப் படுகின்றன. இதுவே ரத்தக் கொதிப்பின் அடிப்படையாகும். சாதாரண இயங்கும் சக்திக்குமேல் இதயம் இயங்க நேரிடுவதால் விரைவில அது பலவீனமடைகிறது; இதே பலவீனம் அதன் இயக்கத்தையும் திடீரென்று நிறுத்திவிடுகிறது. இத்தகைய திடீர் நிறுத்தம் தான் இரத்தக் கொதிப்பால் மனிதன் இறந்து விடுவதைக் குறிக்கிறது. அளவுக்குமீறி மனிதன் உடலை கடின வேலைகளுக்கு ஈடுபடுத்தல், தீவிர சிந்தனை, இரவில் தூங்காமல் அதிக நேரம் கண்விழித்தல், ஓயாத மனக்கவலை ஆகியவை இரத்தக் கொதிப்பை உண்டாக்கும் தன்மை வாய்ந்தவை. திடீர் சந்தோஷமோ, திடீர் கலவரமோ ஏற்பட்டால் இத்தகைய பலவீன இதயமுள்ளவர்களது இதயம் அதிர்ச்சி தாங்காமல் நின்றுவிடவும் கூடும்! ஆகவே இத்தகைய செய்திகளை சமயமறிந்து இவர்களிடம் தெரிவிக்கவேண்டும். இரத்தக்கொதிப்பு வியாதிக்குள்ளான வன் நன்ருக ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். கவலைதரும் எந்த விஷயத்தையும் சிந்திக்க கூடாது. அவ்வாறு அவன் சிந்திக்க முற்பட்டால், தீவிர சிந்தனையால் மூளைபாதிக்கப் பட்டு, நரம்புகளில் ரத்த ஓட்டம் அளவுக்கு மீறி அதிகமாகி இதயத்தைப் பாதிக்கும்.

இரத்தக் கொதிப்புள்ளவன் அளவுக்குமீறி சிகரெட், சுருட்டு இவற்றை உபயோகித்து வருவது கூடாது. இத்தகைய வியாதிக் குள்ளானவர்கள்! தங்கள் எடையையும் குறைக்க முற்படவேண்டும். இவை எல்லாம் நோயினின்றும் இதயத்தைப் பாதுகாக்கும் முறைகள்.

'கரோனரி' என்னும் இதய வியாதிக்கும் மனிதனை மாய்க்கும் சக்தி உண்டு. இதயத்தின் ரகஸ்யத்தை உணர்ந்தவன், அதன் தன்மைக்கு ஏற்ப மித உணவு உட்கொண்டு தினமும் சில மணி நேரம் தேகாப்பியாசம் செய்து, ரத்த விருத்திக்கு வழி தேடிக் கொண்டால் இதயமும் அவன்பால் நன்றி கொண்டு, 'தன்னை இவ்வளவு சிரமப்பட்டு பாதுகாத்து வருபவனை திடீரென்று மோசம் செய்யக் கூடாது' என்ற எண்ணத்தில் வேலை செய்ய முற்படும். 'கரோனரி' பெண்களைவிட ஆண்களையே அதிகமாகப் பாதித்து வரும் அதிசயமான இதய நோய்.

'கரோனரி த்ரோம்பாஸிஸ்' என்னும் இந்த நோய் உடலிலுள்ள ரத்தக் குழாய்களையே முதலில் பாதிக்கும். பின்பு இதயத்தைக் கண்டு, பொருமை கொள்ளும் இந்நோய் அதன் இயக்கத்தைத் தடுக்க ரத்தத்தை உறையச் செய்யும். ரத்தம் கட்டியாக முற்பட்டால் ஓட்டம் தடைப்படத்தானே செய்யும்? ரத்த சுழற்சி நின்றுவிட்டால் உடல் சோர்வு ஏற்படும். ஆகவே இதயம் தன் வேலையைச் செய்ய வழியின்றி தாஞக நின்று விடவும் கூடும்.

இந்த வியாதிக்கு இடங்கொடுத்தவன் ஆரம்ப நிலையில் வைத்தியரை நெருங்காவிடில் பின்பு மயானத்தைத் தான் நெருங்க நேரிடும்! காரணமற்ற திடீர் வயிற்றுவலி, தலைசுற்றல் ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாகும். இவற்றை அலட்சியப் படுத்தி கடின உழைப்பை மேற்கொள்வது கூடாது!

இரத்தக் கொதிப்பை 'உச்ச ரத்தக் கொதிப்பு','தாழ்ந்த ரத்தக் கொதிப்பு' என்று பிரித்திருக்கின்றனர். தாழ்ந்த ரத்தக் கொதிப்புள்ளவன் அடிக்கடி சோம்பலாகவும் எதிலும் விருப்பமின்றியும் காணப்படுவான், ஆனல் இதனுல் அவன் இதயம் பாதிக்கப்படுவதில்லை. இதயம் வெகு விரைவில் தன்னை பாதிக்கும் நிலையில் எந்த வியாதிக்கும் இடமளிப்பதில்லை. தன் அவசியத்தை மனிதன் உணரும்படி செய்து, தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை மனிதனுக்கு அவ்வப்போது தெரிவித்து வரும் பொருட்டு சில உபாதைகளை அவனுக்குக் கொடுத்து வைத்தியரை அணுகச் செய்கிறது. இருந்தும் அவன் 'இதயத்தின் இந்த ரகஸ்ய'த் தன்மையை அலட்சியப்படுத்தினுல் இதயமும் அவனை அலட்சியம் செய்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்கிறது. ★

★ முடியாட்சி என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்தப் பதவிக்குத் தெய்வீகத் தொடர்பு உண்டு என்பதை பல நாடுகளின் சரித்திரம் கூறுகிறது. இந்திய மன்னர்கள் தர்ம ஆட்சியையே நடத்தி வந்திருக்கிருர்கள். இவ்விவரங்களை இக் கட்டுரையில் காணலாம்.

முடியாட்சியின் வரலாறு

..ஜோதல்..

சுதந்திர மடைந்த நம் தாய் நாட்டில் கடந்த ஒன்பது வருடங்களாக கணக்கற்ற அரசியல் சீர்திருத்தங்கள் நடந்தேறி யிருக்கின்றன. இந்தியாவின் நிலை சர்வதேசீய அரங்கிலே எல்லோரும் போற்றிப் புகழும் அளவிலே வெகுவாக உயர்ந்திருக்கிறது. இதற்கு காரணம் நம் வெளி நாட்டுக் கொள்கையிலே தென்படும் சிறப்புத் தன்மை மட்டுமல்ல, உள் நாட்டிலே நிகழ்ந்த மகத்தான மாறுதல்களும் கூடத்தான். காலஞ்சென்ற சர்தார்படேல் உள் நாட்டு மந்திரியாக இருந்தபோது, இந்தியாவில் இருக்கும் சமஸ்தானங்களை ஒன்ருக இணைத்து சில யூனியன்களாக அமைத்தார். இதன் விளைவாக மத்திய சர்க்காரின் கவனத்தின் கீழ் பாரதமனைத்தும் நேரடியாகத் தொடர்பு கொண்டது. மன்னர்கள் பலர் ஒழிந்து சில ராஜப் பிரமுகர்கள் தோன்றினர்கள். புது ராஜ்ய அமைப்புபடி ராஜப் பிரமுகர்கள் என்ற பதவியே எடுபட்டு விடும். ஆகவே இறந்த காலத்திலே சரித்திரம் வகுத்து நிகழ்காலத்திலே வெறும் சின்னங்களாக விளங்கும் மன்னர்களைப்பற்றித் தெரிந்து கொள்வது எதிர்காலத்திற்கு உதவுமல்லவா?

சரித்திரம் நிகழ்த்திய புதுமைகளிலே மானிலத்தில் மன்னர்கள் தோன்றிய வரலாறு மாந்தர்களின் சிந்தனைக்குரியவை. மனிதன் குரங்கிலிருந்துதோன்றினன் என்ற சார்லஸ் டார்வினுடைய சித்தாந்தம் மக்களிடையே வேரூன்றி வரும் இந்தக் காலத்தில்கூட, பலதேசங்களின் சரித்திரம் அரசர்கள் கடவுள்கள் வழி தோன்றியவர்கள் என்ற அசையாத நம்பிக்கையுடனிருந்து வருவது அதிசயமே! நம்பிக்கை என்ற ஒளியின் உதவியால் காலத்தின் கனத்த இருளைக் கிழித்துக் கொண்டு முன்னேறும் மனிதவர்க்கம் சரித்திரம் என்ற கண்ணுடியிலே கணக்கற்ற காட்சிகளைக் கண்டு களித்திருக்கிறது. அதில் இதுவும் ஒன்ரு!

ஜப்பானிய மன்னர்களை கடவுளின் சந்ததியர்கள் என்று கூறுகிறது அந்நாட்டு சரித்திரம். கற்பனைக்கும் எட்டாத அந்த நாட்களிலே சிதறிக் கிடக்கும் ஜப்பானியர்களை ஒரு சமூகமாக அமைத்து ஆட்சிபுரிவதற்கு சூரியன் என்ற தேவதை உலகை அடைந்ததாம். இந்த தேவதையின் வழி தோன்றியவர்கள்தான் 'மிகாடோ' என்றழைக்கப்படும் இன்றைய மன்னர்கள். இம்மன்னர்களை கடவுளாகப் பாவித்து கோயில் கட்டி வழிபடும் வழக்கம் பிற்காலங்களில் மக்களிடையே பரவியது.

சீன தேசத்து அரசர்கள் சொர்க்கத்தின் சந்ததிகள் என்று கூறப்படுகின்றனர். எகிப்திய சரித்திரமும் இதேவிதமான விந்தைகளைத்தான்

விவரித்துக் கொண்டு வருகிறது. பாரோஸ் என்று கூறப்படும் இந்த மன்னர் பரம்பரையை சூரிய புத்திரர்களாகக் கருதி வணங்கினர் புராதன எகிப்து மக்கள்.

இவ்விதமாக மக்களின் காவலர்களாக அமைந்த மன்னர்களை தேசத்திற்கு தேசம் வணங்கியும் வழிபட்டும் வந்திருக்கிறது. பரதன் என்ற அரசனின் ஆட்சிக்குப் பிறகு ஆரியவர்த்தத்திற்கு பாரதம் எனப்பெயர் வழங்கலாயிற்று என்பது நம் புராணக் கூற்று. நமது மன்னர்களுக்கிடையேயுப் சூரிய வம்சத்தினர், சந்திர வம்சத்தினர் என்ற பரம்பரைகள் உண்டு. கடவுள் தோன்றி மன்னர்கள் வம்சத்தை விருத்தியடையச் செய்த கர்ண பரம்பரைக் கதைகளும் நமக்குப் புதிதல்ல. ஆகவே மன்னர்கள் தோன்றிய வரலாற்றில் ஏதோ தெய்வீகத் தன்மை குடிபுகுந்திருக்கிறது என்று சரித்திரம் கூறுவதில் வியப்பில்லை. ஆனால்...

இதர தேசங்களிலிருந்து மாறுபட்டு, தொன்று தொட்டே ஜனநாயகத்தின் அடிப்படையிலே முன்னேறிய தாய்நாட்டில் மக்களிடையே ராஜ பத்தியும் ராஜவிசுவாசமும் சுடர்விட்டுப் பிரகாசிததிருக்கின்றன. சீன, ஜப்பான், ரோம் முதலிய நாடுகளிலே ஆயுத சக்திக்கு பயந்து அடிமைப் பட்ட ஜன சமூகம் காவலனைக் கடவுளாக வணங்கிற்று. நம் நாட்டின் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அதிகாரத்தைவிட அன்பைத்தான் ஆயுதமாகக்கொண்டு ஆட்சி செய்தார்கள் நமதரசர்கள். ஆகவேதான்.

முறைசெய்து காப்பாற்று மன்னவன மக்கட்கிறையென்று வைக்கப்படும்—என்று தமிழ்மறை கூறுகிறது. "கோன் உயரக்குடி உயரும்' என்ற கொள்கையை குறிக்கோளாக்கி மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தினார்கள் நமது பழங்கால மன்னர்கள் பிறநாட்டார் மன்னனை இறைவனாகவும் கடவுள் வழிதோன்றியவனாகவும் கருதிய காலத்திலே நமது முன்னோர்கள் முறையோடு காப்பாற்றும் மன்னனையே இறைவனுக்குச் சமானமாகக் கருதுவோம் என்று சட்டங்கள் அமைத்தனர். "திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே யென்றும்" என்பதல்லவா திருவாய் மொழி? இதுதான் நமது பண்பிலே தென்படும் பழமை மெருகு.

மக்களிடையேயிருந்து பிறப்பால் மாறுபட்ட மன்னர்களுக்கு அபூர்வமான சக்திகளும் அமானுஷ்யமான வல்லமையும் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஜராசந்தன். துரியோதனன் போன்ற அரசர்களின் அற்புத சக்தி இதைத்தான் நமக்கு நினைவூட்டுகிறது.

நியூகினியா என்ற நாட்டு மன்னர்கள் மந்திர ஜாலங்களால் பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவர்கள் நினைத்தமாத்திரத்திலே கடல் பொங்குமாம், கதிரவன் ஒளி வீசுவானும். காற்றை கட்டுப்படுத்துவதும், வானம் பொழியச் செய்வதும் இம்மன்னர்களுக்கு மிகச் சாதாரண விஷயங்கள். அரசியல் அரங்கிலே மாயஜாலங்கள் ஆதிக்கம் செலுத்திய காலம் இதாகத்தான் இருக்க வேண்டும்.

ஹிப்ருக்களின் வம்சத்திலே திறமை வாய்ந்த மன்னர்கள் இறந்து விட்டால் அவ்வுடலில் அவனுடைய புத்திரனது ஆத்மா புகுந்து இறந்த மன்னனைப்பின்பற்றி ஆட்சிபுரியும் வழக்கம் இருந்தாக சரித்திரம் கூறுகிறது. இந்தச் சூழ்ச்சியால் அரசைப் பற்றிய போராட்டங்களே இல்லாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது. விக்ரமாதித்யனின் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை இதன் கிளையாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

மெக்ஸிகோ என்ற தேசத்திலே பட்டத்திற்கு வரும் அரசன், மகுடாபிஷேகத்தன்று, சூரியனை என்றும் பிரகாசிக்கச் செய்வதாகவும், மேகத்தைத் தடுத்து மழைபெய்யச் செய்வதாகவும், பூமி விளையச் செய்வதாகவும், ஆறுகளில் வெள்ளப் பெருக்கேற்படும்படி செய்வதாகவும் மக்கள் முன்னிலையில் பிரமாணம் செய்யவேண்டும் என்பது அந்த நாட்டு வழக்கமாக இருந்தது. இயற்கை நிலை மாறுபாட்டின் காரணமாகத் தோன்றும் இன்ப துன்பங்களுக்கு, அக்காலத்திலே மன்னன் தான் பொறுப்பாக இருந்தான். காலத்தின் பருவநிலைகள தவறி அதனாலுண்டாகும் இன்னல்களின்

விளைவாக பல மன்னர்கள் தங்கள் பட்டத்தையும் பதவியையும் இழந்திருக்கிறார்கள் என்று காட்டுகிறது கொரியா நாட்டுச் சரித்திரம்.

மக்களின் சுபிட்சமான வாழ்விற்கு மன்னன் கடமைப்பட்டவன். மழையின்றி மக்கள் வாடினால் அதற்கு வேந்தனே பொறுப்பு. ஏனெனில் கோன் எவ்வழியோ அவ்வழிதானே குடிகள்? செங்கோன்மை கொடுங்கோன்மையாக மாறினால்தான் வானம் பொழியாமலும் வையம் விளையாமலும் இருக்கும் என்பது அன்றையக்கால உண்மை.

முறைகோடி மன்னன் செய்யின் உறைகோடி யொல்லாது வானம் பெயல் என்று புகன்றார் பொய்யாமொழி. இது இன்றோ, நேற்றோ அல்ல, மெக்ஸிகோ, கொரியா என்னும் நாடுகளின் சரித்திரம் ஏடுகளிலே இடம் பெறாத அக்காலத்திலேயே நிலைத்திருந்த தமிழகத்தின் தர்மநிலை.

மன்னர்கள் தோன்றிய வரலாற்றிலே கணக்கற்ற புதுமைகளை உலக சரித்திரத்தின் வெவ்வேறு பாகங்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன்பே பெருமைப்படும் முறையில் நம் தாயகத்தில் விந்தைகள் விளைந்திருக்கின்றன.

தேசத்தில் மழையின்றி பஞ்சம் தோன்றின் கிரேக்கர்கள் ஒன்றுகூடி மன்னனை தண்டிப்பார்களாம்! பர்கண்டியன்ஸ் என்ற வர்க்கத்தாரிடமும் இதே வழக்கம் நிலைத்திருந்ததாகத் தெரிகிறது. தன்னை அறியாமல் அநீதிகள் நிகழ்ந்தால் அதை உணர்ந்த மன்னன் தன்னைத்தானே தண்டித்துக் கொள்வது நம் நாட்டில் பண்டைக் கால வழக்கம். தவறிழைத்தமைக்கு தன் கரத்தையே ஈந்த பொற்கை பாண்டியன், கண்ணகிக்குச் செய்த தீங்கை எண்ணி ஏங்கி உயிர் விடுத்த மதுரைப் பாண்டியன் முதலியோர்களின் சரித்திரம் இதைத்தான் குறிப்பிடுகிறது.

வீரசிவாஜிக்கு தேவி பவானியின் கட்டளைகளே வெற்றி முழக்கங்கள். சமாதானத்திற்கும் சமர் செய்வதற்கும் அன்னை பவானியின் முன் தலை வணங்கி நிற்பான் மஹாராஷ்டிர மன்னன் சத்ரபதி சிவாஜி.

திருவாங்கூர் மன்னன் பத்மநாபதாஸனின் சரித்திரமும் இதே போல் மற்றோர் முக்கிய நிகழ்ச்சியேயாகும். மார்த்தாண்டவர்மா என்ற மன்னன் முடிதரிக்கு முன்னர் நாட்டிற்கு பங்காளிகளாக பலர் தோன்றினர். மார்த்தாண்டவர்மா திருவனந்தபுரத்திலே குடிகொண்டிருக்கும் திருமாலைச் சரணமடைந்தார். பக்கபலமின்றித் தவித்த காவலன் ஸ்ரீ பத்மநாபனை வேண்டினன். "இன்றைய துன்பங்கள் ஒழிந்து, சமாதானமாக நாட்டை ஆளும் வாய்ப்புவந்தால் அன்று பத்மநாபனின் திருவடியில் என் முடியையும் குடியையும் குடும்பத்தையும் அர்ப்பணித்து நான் தாஸனாக இந்நாட்டை ஆண்டு வருகிறேன்" என்று அவர் பிரார்த்தனை செய்தார். விண்ணப்பம் வீணாகவில்லை. மதுரைப் படையும் திருமுகத்துப் பிள்ளை என்பவருடையதும் பட்டாணியர் படையும்மன்னனுக்காகப் போர்செய்து வெற்றி யடைந்தன. நாள் தோறும் காலையில் கவுடியார் மாளிகையிலிருந்து புறப்பட்டு மன்னன் ஸ்ரீ பத்மநாபனை வணங்கிச் செல்லும் வழக்கம் இன்றும் இனியகாட்சியாக திருவாங்கூரில் நிகழ்கிறது.

விஞ்ஞானக் கண்களுக்கு வேந்தர்களின் சரித்திரம் வேடிக்கையாகத் தோன்றும் காலம் இது. ஆனால் பட்டுடையும் மலர் மஞ்சமும் மட்டுமல்ல மன்னர்களின் சரித்திரம். அவர்கள் வாழ்க்கை வரலாற்றிலே ஆயுதங்களின் சிரிப்பொலியும் வெற்றியின் வீரமுழக்கங்களும் கலந்தொலித்திருக்கின்றன. காவியங்களின் இனிமையும் கலைகளின் நர்த்தனமும் கலந்திருந்தன. மலையைக் குடைந்து மாளிகை எழுப்பிய மன்னர்களும் கற்களிலே கலைச்செல்வங்களை வடித்துத் தந்த காவலர்களும் கணக்கற்றவர்கள். பாரதநாட்டின் பண்பிற்கும் பழமைக்கும் கலைக்கும் கலாசாரத்திற்கும் சிரஞ்சீவித்தன்மையளித்த சிந்தனையாளர்கள்தான் தற்போது அஸ்தமித்துக் கொண்டிருக்கும் இந்த அரசர் பரம்பரையினர். ★

நிரந்தரமற்ற தாடி

சாரதி

நாளுக்கொரு புது 'பிளேடி'ன் விளம்பரத்தைத் தாங்கி வரும் நாளேடுகள் நிலவி வரும் இந்தக் காலத்தில், தாடி வளர்ப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்து விட்டது. தாடி வளர்த்து வரும் மனிதர்களை விந்தையுடன் பார்க்கும் காலம் விரைவில் வந்துவிட்டாலும் ஆச்சர்யமில்லை! "தாடி வளருங்கள்" என்று சர்க்கார் விளம்பரமோ சட்டமோ கொண்டு வந்தாலும் வரலாம்!

ஆனல் இந்தத் தாடிக்கு ஒரு காலத்தில் என்ன மதிப்பு இருந்தது! தாடியை வளர்க்கவும் அழகுபடுத்தவும் எத்தகைய முயற்சிகள் அந்நாட்களில் செய்யப்பட்டு வந்திருக்கின்றன என்பதை யெல்லாம் பார்க்கும் போது வெகு விநோதமாக இருக்கிறது!

தாடி வளர்ப்பது நாகரீமாகமட்டுமல்லாமல், மதத்தின் கோட்பாடுகளில் ஒன்ருகவும் கருதப்பட்டு வருகிறது. முஸ்லீம், சீக்கிய மதங்களைச் சேர்ந்தவர்கள் இன்றும் தாடி வளர்ப்பதை நாம் பார்க்கலாம். முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் தாடி வளர்ப்பதோடு, அதன்மீது சத்தியம் செய்வதுமுண்டு. இன்னும் சில புராதன முஸ்லீம் நாடுகளில் விசித்திர பழக்கமொன்றும் இருந்து வந்தது. தாடியிலிருந்து விழும் ஒவ்வொரு ரோமத்தையும் பத்திரப்படுத்தி, குறிப்பிட்டவரது சவத்துடன் அவற்றை அடக்கம் செய்வது உண்டு. தாடிக்கு அவ்வளவு மதிப்பு இருந்தது!

அந்நாட்களில் தாடியை நீக்குவது ஒரு பெரும் குற்றமாக பல முஸ்லீம் நாடுகளில் கருதப்பட்டு வந்தது. இதற்காக மிகக் கொடூரமான தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

தாடியை அழகுபடுத்துவதற்கும் பல முறைகள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. அரேபியா நாட்டில் ஹென்ன என்ற ஒரு வகை இலையின் சாற்றைக் கொண்டு, தாடியைப் பதம் செய்வார்கள். இதனல் செம்பொன் நிறத்தில் தாடியின் நிறம் மாறிவிடும். குறிப்பிட்ட இந்த நிறத்தை முஸ்லீம் மதகுருவே அங்கீகரித்திருக்கிருர்.

பாரசீக மன்னர்கள் அலங்காரமான தாடிகளை ஒரு காலத்தில் மிகவும் விரும்பினர்கள். இதற்காக தங்கத்தினல் ஆன செயற்கை ரோமங்களை தங்கள் தாடிகளுடன் பின்னி அலங்கரித்துக் கொள்வார்கள். துருக்கியர் வாசனைத் திரவியங்களை உபயோகிந்து தாடிக்கு 'மணம்' தந்திருக்கிருர்கள்.

இந்தியாவில் மொகலாயர்களின் ஆட்சி காலத்திலும் பதனிட்ட, மணமிக்க தாடிகளுக்கு அதிக 'மௌஸ்' இருந்து வந்திருக்கிறது.

இவையெல்லாம் மொகலாயர்கள் அதிகாரத்தின் உச்ச நிலையிலிருந்தபோது தாடியிடம் காட்டி வந்த அன்பையும், அழகுபடுத்த எடுத்துக் கொண்ட சிரத்தையையும், பொறுமையையும் காட்டுகிறது.

சிவாஜி

ஐரோப்பாவிலும் நாட்டிற்கு நாடு, ஆட்சி செய்தவர்களின் தன்மையைப் பொருத்து, தாடியின் மகத்துவம் பல் வேறு காலங்களில் வளர்ந்தும் வீழ்ந் தும் வந்திருக்கிறது. புராதன கிரேக்கர்களிடம் தாடி வளர்ப்பது மிக முக்கியமான சடங்காக கருதப் பட்டு வந்தது. ஆனால், 'உலகை வென்று ஒரு குடையின் கீழ் ஆள வேண்டும்' என்று கிரேக்க வீரன் அலெக்ஸாண்டர் பொங்கி எழுந்த போது, தங்கள் சிப்பாய்கள் அனைவ ரும் தாடியை எடுத்து விடவேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டான். தன் வீரர்களை தாடியை எடுக்கச் சொன்னதற்கு ஒரு விளக்கமும் அலெக்ஸாண்டர் கொடுத்தான். எதிரிகளிடம் சிக்காமல் தப்பிக்க தாடியில்லாதிருப்பது நல்லது என்று அவன் கருதினானும்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்புதான் தாடியை க்ஷவரம் செய்து கொள்ளும் முறையை ரோமானியர்கள் கடை பிடித்தார்கள். பிலினி என்பவர், ஸ்கிபியோ ஆப் கான்ஸ் என்ற ரோமானியன்தான் முதன் முதலாக தினசரி முக க்ஷவரம் செய்துகொள்ளும் வழியைக் கடைப்பி டித்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஹாட்ரியன் சக்ரவர்த்தி பட்டத் துக்கு வந்தபின் தாடி வளர்ப்பது மீண்டும் செழித்தோங்கி, இருநூறு வருஷகாலம் வரை நடைமுறையில் இருந்தது. கான்ஸ்டன்டைன் அரசு ஏறியதும் தாடிக்கு 'சனி' பிடித்து விட்டது! க்ஷவரம் செய்து கொள்ளும் முறை மீண்டும் பழக்கத்திற்கு வந்து விட்டது.

தாடிக்கு விரோதமாககிளம்பிய சக்ர வர்த்திகளில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டிவர் ரஷ்யாவை ஆண்ட பீட்டர் ஆகும். தாடியை க்ஷவரம் செய்து கொள்ளும் முறையை இவர் கட்டாயப் படுத்தியதுடன், தாடி வளர்ப்பதை அடியோடு ஒழிக்க வேண்டி, தாடிவளர்ப்பவர்களுக்கு அதிகமாக வரிகளையும் விதித்தார். தப்பித் தவறி தாடி வைத்துக்கொள்ள பிடிவாதம் செய்தால் வேறுடன் அவ ரது தாடியை எடுக்கவோ, அல்லது முனைமழுங்கிய கத்தியினால் க்ஷவரம் செய்யவோ உத்தரவிடப் படுவார் களாம்!

ஆனால் இத்தனை கொடுமைகளை விளைவித்தும் தாடியை ரஷ்யாவில் அடியோடு அழிக்க முடியவில்லை. மீண்டும் அது தோன்றி விட்டது.

எட்டாம் லூயி அரசு கட்டில் ஏறும் வரை பிரான்ஸ் நாட்டில் தாடி வளர்க்கும் முறை இருந்தது. அதன் பின்பு தாடி வளர்ப்பது அநாகரீகமாகி விட்டது அங்கு. அரசு ஏறிய எட்டாம் லூயி இளமை வாய்ந்தவர் என் பதோடு, முகத்தில் ரோம வளர்ச்சி அற்றவர் என்பதாலும் இம் முறை அமுலுக்கு வந்ததாகச் சொல்வார் கள். இதேபோன்று 17-ம் நூற்றாண் டில் ஐந்தாம் பிலிப்ஸ் பட்டமேறிய தும் தாடிவளர்ப்பது ஸ்பெயினிலும் மறைந்து விட்டது. தாடி வளர்ப் பதை விரும்பாத பல மன்னர்கள் அடிக்கடி பட்டத்திற்கு வந்ததால், ஐரோப்பாவில் தாடி வளர்ப்பதே ஒழிந்து விட்டது.

ஹோசிமின்

புல்கானின்

நார்மன்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றும் வரை தாடி வளர்ப்பது அங்கு பெரும் நாகரீகமாகக் கருதப்பட்டு வந்தது. அவர்கள் பட்டமேறியதும் இங்கிலாந்தில் யாருமே தாடி வளர்க்கக் கூடாது என்று உத்திரவு போட்டார்கள். இதனுல் தாடி வளர்ப்பதை விரும்பிய பலர், தாடியின்றி இங்கிலாந்தில் தங்க மனம் வெறுத்து, வெளியேறி விட்டார்களாம்! ஆனுல் நார்மன்களிலும் சில அரசர்கள் தாடியின் மோகத்தில் சிக்கியிருந்தார்கள் என்பதற்கு, சில கல்வெட்டுகளும் சிலைகளும் சான்ருக இருக்கின்றன. வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள மூன்ரும் எட்வர்டின் சமாதியில், தாடியுடனிருப்பதாக அவரது உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

பெரியார் ஈ. வே ரா.

முதலாம் சார்லஸின் ஆட்சி காலத்தில், கூர்மையான முனை கொண்ட வகையில் வெட்டப்பட்ட தாடிகள் நாகரீகத்தின் சிகரமாகக் கருதப்பட்டன. அதன் பிறகு சில ஆண்டுகளில் இங்கிலாந்தில் மட்டுமின்றி. ஐரோப்பா பூராவுமே தாடிக்கு எதிர்ப்பு தோன்றி விட்டது! ஆனுல் கிரிமியன் சண்டைக்குப் பிறகு – அதாவது 1855-ல் மீண்டும் தாடி விஸ்வரூபமெடுத்து விட்டது.

பிரான்ஸிலே மூன்ரும் நெப்போலியன், உருவத்தில் சிறுத்த – 'பிரஞ்ச் இம்பீரியல்' என்று பிரபலமான– நூதன தாடியைப் புகுத்தினுன். இந்த வகை தாடி விக்டோரியா மகாராணியின் கணவரான ஆல்பர்டையும் வசீகரித்தது.

இந்தச் சமயத்தில்தான் முகத்தில் எந்தப் பகுதியை க்ஷவரம் செய்வது, விட்டு வைப்பது என்ற நிர்ணயங்களுக்கு பொதுமக்களிடமே பரிபூரண உரிமை அளிக்கப்பட்டது. பிரபலமான இங்கிலாந்தின் பிரதமர்களான கிளாட்ஸ்டனும் டிஸ்ரேலியும் தங்கள் விருப்பப்படியே தாடி வைத்துக் கொண்டார்கள்.

தாடியைப் பற்றிக் குறிப்பிடும் போது இதிலுள்ள மற்ருெரு விசேஷத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது. குருவுக்கும் சிஷ்யனுக்கும் இது பெரும்பாலும் பொருந்துவதேயில்லை.

உதாரணமாக சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். கம்யூனிஸத்தை புகுத்திய காரல் மார்க்ஸ் சிஷ்யரான ஸ்டாலின் தாடியை வெறுத்தவர்; ரவீந்திரநாத் தாகூரின் சிஷ்யரான நாஸ்ரூநும், சுரேந்திரநாத் பானர்ஜியின் சிஷ்யரான தேபந்துவும். முஸ்லீம் லீகை ஸ்தாபித்த மௌலானு முகமது அலியின் சிஷ்யர் ஜின்னுவும் தாடியின்றியே பிரபலமானவர்கள்.

தாடியைப் பற்றி இப்படி ஆராய்ந்து கொண்டே போனுல் அதற்கு முடிவே காண முடியாது.

ஆனுல் தாடி வளர்ப்பது அநாகரீகம் என்று மாறிவிட்ட இந்நாளில் திடுதிப்பென்று ஒரு நாள் அதுவே நாகரீகமாகவும் மாறி பெருகி விடலாம். இப்படி வராது என்று யார் சொல்ல முடியும்? தாடிதான் பல முறை புனர் ஜென்மம் எடுத்திருக்கிறதே! ★

ஷாவின் கேள்வி?

பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியரான பெர்னுட் ஷாவிடம் ''நீங்கள் ஏன் தாடி வளர்க்கிறீர்கள்? அதை க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாதா?'' என்று ஒருவர் கேட்டாராம்.

''அப்படியானுல் நான் கதைகளை எப்போது எழுதுவது?'' என்று பதிலுக்குக் கேட்டாராம் ஷா.

கோயில் கட்டினர் குடி கெடுக்க அல்ல!

ஆராய்ந்தவர் 'சிரஞ்சீவி'

உலகம் முழுதும் சுற்றி வந்து யாத்திரை முடித்த ஒரு அறிஞரிடம் விசித்திரமான ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "உலகிலேயே சிறந்த அழகி யார்?" என்பதாக! விவேகியான அந்த அறிஞர் சற்றும் சிந்திக்கவில்லை. பளிச் சென்று பதில் அளித்தார்: "அழகு என்பது அவரவரது மனோ பாவம், அது பார்க்கப்படுகிற பொருளில் இல்லை. பார்க்கிறவர்களுடைய உணர்ச்சியில் இருக்கிறது!" என்றார். அதே போல இருக்கிறது எதையெதைல்லாம் நாம இப்போது கண்டு மூட நம்பிக்கை என்கிறோமோ, அவை யெல்லாம்!

அறிவின் அந்தம் காண முடியாத பாதையில், அதன் எல்லைக்கோட்டை மிதித்து விட்டதாக நாம் இறுமாப்படைகிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிற நாம், புராதன மனிதர்களின் செய்கையை அர்த்தமற்றதென்றும், அறிவிற்கு ஏற்றதாயில்லை யென்றும் கூறி அலக்ஷியப்படுத்துகிறோம்; அற்பமாக நினைக்கிறோம்!

கோயிலைக் கட்டினார்கள் அந்தக் காலத்திய அதிமேதைகள். காசு போன போக்கு என்று கொக்கரிக்கிறோம். தெய்வ சன்னிதானம் என்ற ஒரு மையப் புள்ளியை வைத்து, அதைச் சுற்றி உறுதியானதும் நீண்ட உயரமானதுமான சுவர்களை, எத்தனையோ உழைப்பாளிகளின் அபார வலிமையைப் பயன்படுத்தி எழுப்பி, பிரகாரம் எனப் பெயரிட்டு சதுரங்கள் கட்டி வைத்தார்கள். "வேலையற்றவர்களின் வெட்டி வேலை!" என்று வெடுக்கெனக் கூறுகிறோம்.

மதிப்பிட முடியாத ரத்னக் கற்களும் முத்தும் பவழமும் மதிப்பற்ற உயர்தரமான நகைகள் பலவற்றையும் கோயிலில் ஒப்படைத்தார்கள், உள்ளம் குளிர்ந்து. "கடவுள் இந்த சிருங்கார சொகுசை யெல்லாம் கேட்டழுததா?" என்று கேலி செய்கிறோம். தெய்வ நிவேதனத்திற்கென நஞ்சை புஞ்சைகளை ஏகரா கணக்கில் தானமளித்தனர் மன்னர்களும் மாண்புடையோரும். "அது கொழித்து குவிக்கும் அத்தனை தான்யங்களையுமா ஆண்டவன் அருந்துகிறான்!" என்று அலட்சியச் சிரிப்புச் சிரிக்கிறோம்.

---

* கோயில்களும், அதற்காக வகுக்கப்பட்டுள்ள கட்டளைகளும் மதத்தையே அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளன என்கின்றனர் ஒரு சாரார்.

★ தேமதுரத் தேங்காய்க்கு ஓடு ஒன்றையும் அமைத்து நார்மிகுந்த மட்டையையும் போர்த்தி வைத்ததே இயற்கை, அந்த அற்புதம் எவ்வளவு ஆச்சரியப்படத் தக்கதோ, அதேபோல இறந்த கால முன்னோர்களும் வருங்கால வளர்ச்சிக்காக எவ்வாறெல்லாம் வழி வகைகள் வகுத்து வைத்தார்கள் என்பதை விவரிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.



பூஜா காரியங்களுக்காக கோவிலை அடுத்து நந்தவனங்களை சிருஷ்டித்தனர் சிருங்காரமாக. "தேவியுடன் உல்லாசமாக உலவ உத்யான வனம் கேட்டதாக்கும் தெய்வம்!" என்று திமிராகக் கேட்கிறோம். கோயிலை அடுத்து அழகான குளமொன்றைக் கட்டுவித்தனர், அருள் கொண்டோரும் பொருள் பெற்றோரும். "குடி கொண்டிருக்கும் தெய்வம் தெப்ப மிதப்பிலே தென்றல் கேட்டதா?" என்று தலை தெறித்துப் பேசுகிறோம். காற்றோட்ட மற்ற ஒரு சன்னிதானத்தைக் கட்டி இருளுக்கிடையே கலை சொட்டும் கற்சிலைகளைப் பிரதிஷ்டை செய்தனர். "வெள்ளைக்காரன் நடத்திய கல்கத்தா இருட்டறைச் சித்ரவதை எப்படிப்பட்டது என்பதற்குச் சரித்திரம் படிக்கவேண்டாம்; கடவுள் சந்நிதானத்திற்குள் போய் வந்தால் போதும்!" என்று பரிகசிக்கிறோம்.

"தெய்வாபிஷேகம் செய்! அது புண்ய தீர்த்தமாகும்" என்று சொல்லி 'பாலைக்கொட்டி, பன்னீரைக்கொட்டி, பழமும் தேனும் கலந்து கொட்டி எடு. அதை அருந்து" என்றெல்லாம் நியமம் நிர்ணயிததார்கள் அன்றிருந்தோர். "அழுக்கின் மீது நனைந்து வரும் நாற்றத் தண்ணீரையா குடிப்பது ?" என்று தடுமாறுகிறோம் நாம். அழகிற் சிறந்த ஆரணங்குகளை அங்கே நியமித்து ஆடவைத்தார்கள். "தாசிவேறு கேட்டது தான்றோன்றித் தெய்வம்!" என்று தாறுமாறுகப் பேசுகிறோம்.

இப்படியாக ஒவ்வொரு ஏற்பாட்டிற்கும் ஒவ்வொரு விதமாக நிந்தனை கூறுகிறோம். புதுமைச் சிற்பிகளென பிதற்றிப் பீற்றிக் கொள்கிற நமக்கு புதிர்போன்ற பூர்வவாசிகளின் சித்தாந்தத்தை சிந்திக்கக்கூடத் திராணியில்லை! பூர்வீகக் கட்டுப்பாடுகளில் பூடகம் என்ன இருக்கிறது என்பதைக்கூட நம்மால் புரிந்து கொள்ள முடியாத நிலையிலே புலனுகாதவைகளைப் புரட்டிப் பேசுகிறோம்!

இப்படித்தான், எகிப்தியப் பாலை வனங்களில் வானை முட்டுவதுபோல கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும் 'பிரமிட்'களைப் பார்த்து, 'செத்த பிணத்திற்கு செல்வம் படைத்தோர் கட்டி வைத்த மடத்தனமான மணவறை!' என்று எள்ளி நகையாடினர் ஒரு காலத்தில். அப்படி எள்ளி நகையாடியவர்களுக்குத் துள்ளிவந்தது ஒரு எண்ணம். மண்ணோடு மண்ணுகவேண்டிய மாமிசப் பிண்டங்களுக்கு எந்த மடையனும் இப்படி ஒரு அற்புதமாக கோபுரம் எழுப்பியிருக்கமாட்டான் என்று எண்ண முற்பட்டனர். செயலில் இறங்குவதற்குமுன் சிந்தித்துப் பார்த்தார்கள். முன்னோர்களின் முதிர்ந்த அறிவைப் பெரிதாக எடை போட்டார்கள். எண்ணிய எண்ணம் சரிதானுவென்று பார்த்து விடுவோமென்று எடுத்தார்கள் ஆயுதங்களை. இவ்வளவு துல்லியமாக, கோணல் மாணல் இல்லாமல் கட்டப்பட்டிருக்கும் கற்கோபுரங்களுக்கு வாசல் வழி வைக்காமல் விட்டிருக்கமாட்டார்கள்

ஆராய்ச்சிக்கு அற்புதமான ஒரு விஷயம் அறிவு ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது. இக்கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட விஷயம் பெரிது. அதனுல் விளக்கங்கள் ரத்னச் சுருக்கமாக தரப்பட்டிருக்கின்றன.

—ஆசிரியர்.

என்ற நினைப்போடு, நாலாபக்கமும் அடித்தளத்தைத் தோண்டி மண்ணை ஒதுக்கிப் பார்த்தனர். வாசல் இருந்தது ஒரு சிறுகற்கோபுரத்திற்கு! திறந்து பார்த்தார்கள்.

பார்த்த கண்கள் பார்த்தபடி நிலை குத்திவிட்டன. பளபளக்கும் அணிகள், ஆபரணங்கள்! தெறித்து ஒளி விடும் முத்துக்கள், மாணிக்கங்கள், வைரங்கள், வைடூரியங்கள் இறைந்து கிடந்தன. "பார் உங்கள் மூதாதையர்களை! எவ்வளவு திடகாத்திரமாகவும், செல்வச் செழிப்போடும், அறிவிற் சிறந்தோராகவும் வாழ்ந்திருக்கிறார்கள் பார்!" என்பதை எடுத்துக் காட்டுவது போல ஒரு கண்ணாடிச் சவப் பெட்டியினுள்ளே தூங்கும் மனித இனத்தனன் போன்றதொரு வெறும் உடல்! அழுகவில்லை. அதுங்கவில்லை! ஜீவன் பிரிந்தபிறகு இருநூறு மணிநேரம் உருவழியாமல் காப்பாற்றக் கதியற்ற கண்கள், அகல விரித்து பார்த்தன இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் மரித்த ஒரு மனிதனை. புதைகுழியல்ல; முற்கால நாகரீக மேன்மையை வருங்காலச் சந்ததிகளுக்காகப் பத்திரப் படுத்தி வைத்திருக்கும் புதையல் நிறைந்த பிரமிட்!

இருபதாம் நூற்றாண்டு அறிவு வெட்கித் தலைகுனிந்தது! பகுத்தறிவு பதைபதைத்து வெறும் கற்கோபுரம் என்று நினைத்த பிரமிடை நிமிர்ந்து பார்க்கவும் நிதானமில்லாமல் கடைக்கண்ணால் வியந்து பார்த்தது!

இப்பொழுதோ, ஒவ்வொரு 'பிரமிட்'டிலும் ஒவ்வோர் அற்புதம் பத்திரப்



படுத்தி வைக்கப் பட்டிருக்க வேண்டுமென்ற பூரண நம்பிக்கையோடு எஞ்சியிருக்கும் அக்கால நூற்றுக் கணக்கான பிரமிட்களின் வழி வாசலைத் தேடி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர் மேல்நாட்டு விற்பன்னர்கள்.

மூதாதையர்கள் மூடர்களா? பவித்திரமானவைகளை எப்படிப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதை இப்போது நாம் பார்க்கும் போது வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது!

நம் பூமி எத்தனையோ ஊழிகளைக் கண்டுவிட்டது. காணவும் போகிறது. உக்ரமே உருவான ஊழிகள் அரிய பெரிய பொக்கிஷங்களை ஊதாரித்தனமாக உட்கொண்டு விடக்கூடாதே என்று பயந்து, வருங்கால சந்ததிகளுக்கு விட்டுவைக்கக் கட்டிவைத்த அந்தப் 'பிரமிட்'கள் எவ்வளவு ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் எழுப்பப்பட்டிருக்கின்றன!

ஊழி காலத்தில் மண் புரளும்; மழை பொழியும்; மடு மேடாகும்; மேடு மடுவாகும். தரையைத் தண்ணீர் கொள்ளும்; தண்ணீர் தரையை விழுங்கும்! அதற்கெல்லாம் ஈடுகொடுத்துத் தலைதூக்கி நிற்கவேண்டுமானால் வெறும் பாலைவனப் பிரதேசமே ஏற்ற இடமென்பதைக் கண்டனர். அடிப்பாகத்தைப் பருமனாகவும் மேல் நோக்கிச் செல்லச் செல்லச் சரிவாகவும் 'பிரமிட்' கட்டினார்கள். கொந்தளிக்கும் பிரளயம் அதைத் தன்னுள்ளே மூழ்கடித்துக் கொண்டு விடாமல் நீர் சறுக்கி விழுமாறு சரிவாகக் கட்டினர். வெள்ளம் சமநிலைக்கு வரும்போது 'பிரமிட்' தலைதூக்கி நின்று தான் இருக்குமிடத்தைக் காட்டும். காலத்தால் சாகாது! இதையெல்லாம் ஊகித்து அதைக் கட்டியவர்களா முட்டாள்கள்? மூட நம்பிக்கை கொண்டவர்கள்?

எகிப்திய நாட்டு மூதாதையர்கள் அரிய பெரிய பொக்கிஷங்களை தன் சந்ததியார்களுக்கு அளிக்க 'பிரமிட்' கட்டினார்கள், ஆனால் செல்வமும் செழிப்பும் சிறிது நாள் செலாவணி என்பதைச் சிந்தித்த நம் மூதாதையர்களோ, தன் சந்ததி அழிந்துவிடக்

கூடாதேயென்று கவலைப்பட்டு உடலும், அதனுள்ளே இருக்கும் உயிரும், உயர்வோடு இருந்தால் போதுமென்று முடிவுகட்டினார்கள், எழுப்பினார்கள் மூலைக்கொரு கோயில்களாக!

உடல், உயிர், உயர்வு இவைகளுக்கும் கோயில்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நிறைய இருக்கிறது! மனோதத்துவ நிபுணர்களின் பிரத்யக்ஷப் பிடிமானங்கள், வைத்தியர்களின் சிபாரிசுகள், சரித்திர தீரர்களின் வீரப்பிரதாபங்கள், மூலிகைகளின் மகத்துவங்கள், அறிஞர்களின் அறிவுரைகள், அரசியல் வாதிகளின் சாணக்யங்கள், மனிதன் மனிதனை வாழ்வதெப்படி என்பதற்கு வழிவகைகள் - இவை யாவும் நிரம்பியிருக்கின்றன. அந்தக் கோயில்களுக்குள்ளே! காயகல்பம் சாப்பிடாமல காலமெல்லாம் வாழ்ந்திருக்கவும் வகை கொண்டிருக்கிறது வெறும் கோயில்!

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பொன் மொழி பாருக்குள்ளே பாரத நாட்டிற்கே தனித்ததொரு உரிமைச்சொல்! ஆனால் விதண்டா விவாதக் காரர்களும் சிலேடைப் பண்டிதர்களும் 'கோ (அரசன்) இல் (இல்லா)' என்பதாக வார்த்தையை ஆடு வெட்டுவது போல வெட்டி அரசன் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதாக வியாக்யானம் தருவார்கள். நாக்கை எப்படிவேண்டுமானாலும் புரட்டலாமல்லவா?

கோயில்கள் ஒரு தெய்வ வழிபாட்டு ஸ்தலம் என்பதை மனதில் கொண்டு முன்னோர்கள் அப்படிக் கூறவில்லை. ஒவ்வொரு ஊருக்கும் கோவில் எவ்வளவு அத்யாவசியமானது என்பதே அதன் உட்கருத்தாகும்.

அப்படியானால் கோவில் எந்த விதத்தில் ஒவ்வொரு ஊருக்கும் அத்யாவசியமான அம்சம் என்பதைக் கவனிக்கலாம், உதாரணமாக சென்னை நகரத்தை எடுத்துக்கொள்ளலாம். இங்கு வசித்துப் பழகி விட்டவர்கள், வேறு எந்த ஊர் போய் வசிக்க நேர்ந்தாலும் அவர்களுக்கு எந்த வித மனச் சந்துஷ்டியும் இருக்காது. காரணம் சென்னை நகர அழகும் ஜனநடமாட்டமும் அல்ல. ஒருமனிதன் முன்னேற்ற வாழ்விற்கு முக்கியமான அழகான பூங்காக்கள் அங்கே இருக்கின்றன, பெரிய பெரிய வாசக சாலைகள் அங்கே உண்டு. கலாசாலைகள் நிரம்பியிருக்கின்றன. கண்காட்சிகளையும் காணலாம். கலை வளர் கழகங்களுக்கும் கலைமன்றங்களுக்கும் குறைவில்லை. உலாவி வர காற்றோட்டமான கடற்கரை விசாலமாக அமைந்திருக்கிறது. இவையெல்லாம்ஒருங்கே கொண்டிருப்பதாலேயே பெரும்பாலோர் சென்னை போன்ற நகரங்களில் வாழ விரும்புகின்றனர்!

இன்று வசிக்க வசதியோடு விளங்கி வரும் சென்னை, மதுரை போன்று, பாரத நாட்டில் ஒவ்வொரு ஊரும் பரிணமிக்க வேண்டுமென்று விரும்பினர் ஆன்றோர். அவர்களது ஆழ்ந்த அறிவு ஒரு திட்டம் வகுத்தது. அதன் பலனாய் எழுந்ததே வானளாவி நிற்கும் கோயில்கள். அவை தெய்வத் திற்காகக் கட்டப்பட்ட ஒரு அரண்மனை அல்ல. ஒவ்வொரு கோயிலையும் கண்டு அதன் நிர்மாண அமைப்பை ஊன்றிக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும்.

இன்று உலகத்திலுள்ள நாகரீகம் படைத்த தேசம் ஒவ்வொன்றும் ஒரு பெரிய வாசகசாலையைப் பெற்றிருக்கிறது. சுமார் ஆயிரம் வருட இலக்கியங்களை அரும்பாடு பட்டு அவைகள் சேகரித்து வருகின்றன. ஏடும் எழுத்தாணியும் ஒன்று கலந்தும் காகிதமும் மையும் சேர்ந்து சிருஷ்டித்ததுமான புஸ்தகங்களை அவை இன்று பெற்றிருந்தாலும் கூட இயற்கை வாயு அந்நூல்களைக் கறையான்கள் போல தின்று வருகின்றன, அடுத்த ஆயிரம் வருடங்கள் வரும்போது, முதல் ஆயிரம் வருஷத்தில் பாடுபட்டுச் சேர்த்துவைத்தவைகள் உஷ்ணத்தாலும் வறட்சிக் காற்றாலும் காய்ந்து, முறிந்து, கைபடும்போது தூள் தூளாகி விடுகின்றன. ஆக மிக ஜாக்கிரதையோடு கண்காணித்து வந்தாலும் கூட ஆயிர வருஷ கால ஏடுகளை மட்டுமே நாம் சுவைக்க முடிகிறது.

ஆனால் நம் முன்னோர்கள் தங்கள் சிருஷ்டிகளை அற்பாயுளுடன் வைக்க எண்ணங் கொள்ளாமல், ஆயிரமாயிரம் வருஷங்களானாலும் கூட அழியாத்

தன்மை கொண்ட வாசகசாலைகளாக நிர்மாணிக்க முயன்றனர். ஏட்டிலே எழுதி வைக்கப்பட்டால் எத்தனை நாள் அவை இருக்கும்? அதனால் அதை ஒதுக்கி தாமிரம் போன்ற தகடுகளில் பொரித்து வைத்துப் பார்த்தனர். காற்று படப்பட அவையும் துருப் பிடித்து விடுகிறது. செதுக்கிய எழுத்துக்களும் மங்கி விடுகிறது. அதையும் மிஞ்சியதொரு நீண்டகால நிலைப்பைத் தேடினர். நம் பாரதநாடு கற்பாறைகளுக்குக் குறைவில்லாமல் இருந்தது. அதிலே செதுக்கி வைத்தார்கள். செதுக்கப்பட்ட கற்களை கண்ட இடத்தில் போட்டு வைத்தால் மண்ணுள்ளே மறையலாம்; மனிதர் கண்களுக்குத் தட்டுப்படாமல் போய் விடலாம்! அதனால் அவைகளை ஒரே இடத்தில் விரித்து வைக்கப்பட்ட புத்தகம் போல சேமித்து வைக்க முற்பட்டார்கள். பலர் கண்களுக்கும் படவேண்டும். அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாக எழுந்தன கோயில் மதில்கள். இன்று எந்த இலக்கியக் கர்த்தாக்களாகட்டும், பண்டிதர்களாகட்டும், பழம் பெரும் சரிதங்களையும், கவிதைகளையும், காவிய சிருஷ்டிகளையும் தற்கால சந்ததியார்களுக்குத் தருகிறார்கள் என்றால், அதற்கு ஆதாரமாக இருப்பவை கோயில் மதில்களும், செதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சிற்பங்களுமேயாகும்! பத்தாயிரக்கணக்கான வருட சரித்திரத்தை நமக்கு அளித்து வரும் கோயில் ஒரு வாசகசாலையாக உயர்ந்து நிற்கின்ற சாகசத்தைச் செய்த நம் முன்னோர்கள் நாகரீக வளர்ச்சியிலும் சிந்தனையிலும் பிற்பட்டவர்களா?

இன்றைய இருபதாம் நூற்றாண்டினர் அரிய, உயரிய பொருள்களைப் பத்திரப்படுத்திச் சேகரித்து வைக்க 'மியூசியம்' என்ற ஒன்றை நிறுவிப் போற்றி வருகின்றனர். அதிலே பழங்காலப் பெருமை காட்டும் பொருள்களையும், விலையுயர்ந்த ஆபரணக் கற்களையும் தலைமுறை தலைமுறையாய் பாதுகாத்து வருகின்றனர். இருந்தாலுமென்ன? எந்த தேசமும் ஒருவர் கையிலே நிலைத்து நின்றதில்லை என்பதைச் சரித்திரம் காட்டும். பலம் படைத்தவர்களின் கைகளுக்கு தேசம் மாறும்போது, அவர்கள் அந்நிய நாட்டவராயின் மியூசியத்திலுள்ள அரிய பெரிய வஸ்துக்களை தங்கள் நாட்டிற்குத் தட்டிக் கொண்டு போய் விடுகின்றனர். அப்படிப்பட்ட நிலையிலும் அவை கவர்ந்து செல்லப்பட்டு விடக் கூடாதேயென்று ஒரு காரியம் செய்தார்கள் நம் முன்னோர்கள். எந்நாட்டு மக்களானாலும் 'கடவுள்' என்றால் கதிகலக்கம் கொள்வார்களாதலால், உயர்தரமான பொருள்களையும் ஆபரணங்களையும் சிற்பம் நிறைந்த சிலைகளையும் கடவுளுக்கு உரிமை என்று சொல்லி ஆலயத்தில் அடுக்கிவைத்தனர். அன்று அப்படிப் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட பல உயரியவைகளை இன்றும் பழுது போகாமல் பார்க்கிறோம் கோயில்களிலே!

இன்று உலகப் பிரசித்திபெற்றிருக்கும் கோஹினூர் வைரம் பிரிட்டிஷ் ராணியின் முடியிலே பிரகாசிக்கிறதென்றால் அதற்குக் காரணம் அந்தப் பொருள் தனிப்பட்டோரிடம் இருந்ததே யாகும்! அதுவே கோயிலில் இருந்திருந்தால் நம் நாட்டிலிருந்து பறிபோயிருக்குமா!

கோஹினூர் வைரத்திற்காவது ஓரளவு மதிப்புப் போட்டுச் சொல்லுகிறார்கள். ஆனால் எவராலுமே மதிப்பிட முடியாத பல உயர்தரக் கற்களும் ஆபரணங்களும் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாகியும் இன்றும் கோயில் சொத்தாக இருக்கின்றன.

நாகப்பட்டினத்தை அடுத்த ஒரு சிற்றூர் சிக்கல் என்பது. அங்குள்ள சிங்கார வேலர் கோயிலில் உள்ள நகைகளுக்கும் ஆபரணங்களுக்கும் ஒரு ஜாபிதா உளது. அந்தப் பட்டியலில் ஒவ்வொரு பொருளுக்கும் நேராக அதனதன் உத்தேச மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே ஒரேயொரு பொருளுக்கு மட்டும் கிரயம் குறிப்பிடவில்லை, அது ஒரு மரகதலிங்கம். பட்டியலில் இடம் பெற்றிருக்கும் மரகதலிங்கத்திற்கு நேரே கிரயத்தைக் குறிக்க வேண்டிய இடத்தில் 'மதிப்பிட முடியாதது' என்ற வார்த்தையைக் காணலாம்.

கோயிலைவிட்டு வெளியே இருந்த கோஹினூர் வைரத்தை அடித்துக் கொண்டுபோன வெள்ளைக்காரர்களின் கண்களுக்கு இந்த மரகத

லிங்கம் தட்டுப்படாமலா இருந்தது? அவர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆனுல் எடுத்துச்செல்லத் தெம்பும் தைரியமும் பிறக்கவில்லை. தெய்வ சொத்து என்ற போர்வையின் கீழ் அது மூடிவைக்கப்பட்டதே காரணம்!

இப்படியாக யாரும் துணிந்து எடுக்கக் கூசுகிற விதத்தில் கோயிலுக்குள்ளே ஒரு மியூசியத்தை ஏற்படுத்தியிருந்தனர் அன்றிருந்தோர். அந்த மியூசியத்தை எல்லோரும் பார்த்துக்களிக்க பரப்பிவைக்கவில்லை. அதை அவ்வப்போது காட்டவே உற்சவங்களும், தெய்வ புறப்பாடுகளும் ஏற்படுத்தினர்கள். அந்த நாட்களிலே மியூசியப் பொருள்கள் தெய்வத்தின் மீது மாற்றி மாற்றி அணிவித்துக் காட்டப்பட்டு வந்தன!

சரித்திரப் பிரதாபங்களையும், சிற்பப் பொக்கிஷங்களையும், அபூர்வ உயர் தரப் பொருள்களையும் நீடித்து நிலை பெறச் செய்த முன்னேர்கள், பொது ஜன வசதிகளையும் கோயிலுக்குள்ளே அமைக்காமல் இல்லை.

பொது ஜனங்களுக்குத் தண்ணீர் வசதியளிக்க இன்று 'ரிசர்வாயர்' கட்டப்படுகிறது. அதில் தேக்கி வைக்கப்படும் நீர் அசுத்தமாகி விடாமல் கண்காணித்து வரவும் வருடா வருடம் பணம் செலவிடப்பட்டு வருகிறது. இந்த இரண்டையும் சரிக்கட்டவே மூதாதையர் கோயிலுக்குள்ளே ஒரு குளத்தையும் கோயிலுக்கு வெளியே மற்ருெரு குளத்தையும் வெட்டி வைத்தார்கள். கோயிலுக்குள்ளிருக்கும் குளத்திற்கு ஒரு புனிதத்தைக் கூறி வைத்ததால், மனித மனங்கள் அதை அசுத்தப்படுத்தத் துணியாத ஒரு சூழ்நிலைக்குள்ளாகி குளம் சுத்தமாக இருந்தது. அதனுல் அது குடிமக்களின் 'குடி தண்ணீர்' 'ரிசர்வாயர்' ஆகியது மற்ற நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள கோயிலுக்கு வெளியே உள்ள குளம் உபயோகத்துக்கு விடப்பட்டது.

ஒவ்வொரு ஊரிலும் மக்களின் மனம் கவரும் சோலை ஒன்று இருக்க வேண்டுமென்பதே அன்றிருந்தோரின் அளவில்லாத ஆர்வம் அதன் பலனுகத் தழைத்ததே கோயில் நந்தவனம். அது இன்றுகூட தெய்வத்திற்கு மட்டுமே உரித்தாக இல்லை. தாராளமாக எல்லோரது நடமாட்டத்தையும் அனுமதிக்கிறது.

'ஊர் என்றிருந்தால் அங்கே ஒரு கலைமன்றம் இருக்க வேண்டும். அந்த மன்றத்திலே பல கலைகளும் அரங்கேற்றப்பட வேண்டும். அதற்கான இடவசதியையும் அளிக்க வேண்டும்' என்ற எண்ணத்திலே எழுந்திருப்பதுதான் இன்றைய சபாக்களும் கலைக்கழகங்களுமாகும். இந்த ஒரு கலைவளர்ச்சித் திட்டத்தை இருபதாம் நூற்ருண்டு அறிவு அலாதியான ஒரு கட்டிடத்தின் மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனுல் அந்தக் காலத்தவர்களோ கணக்கற்ற கும்பல் வந்தாலும் ஆற அமர உட்கார்ந்து ரஸிக்கவும், ஆனந்திக்கவும் பொது மேடையாக கோயில்களுக்குள்ளே நூற்றுக்கால் மண்டபங்களையும் ஆயிரங்கால் மண்டபங்களையும் கட்டி வைத்தார்கள். கல்லுக்குப் பிடித்த கேடாக ஆயிரம் கால் மண்டபம் கட்டிவைக்கப்படவில்லை. எத்தனையோ லட்சக் கணக்கான மக்களுக்கு முன்னே கவிச் சக்ரவர்த்திகளின் காவியங்களும், சமயப் பிரசாரங்களும் அங்கேதான் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இப்படியாக ஒவ்வொரு சிற்றூரும் கோயிலுக்குள்ளே கலை அரங்கங்களைப் பெற்றிருந்தது.

இன்றுள்ள பெண்கள், பெரிய இடத்தவராயினும் சரியே, ஆண்களைக் கண்டு நாணிக கோணிக் கொள்ளும் பண்பை மறந்து அரை நிர்வாணமாகக் கூட சதுர் ஆடமுற்பட்டு விட்டார்கள் நடனக்கலையைவளர்ப்பதாகக் கூறிக்கொண்டு! ஆனுல் பெண்களை கிரகலக்ஷ்மியாகவே வைத்து மதிப்புக் கொடுத்து வந்த அந்தக்காலத்தவர், ஆடற்கலையையும் அறிந்து காப்பாற்றி வர கோயிலிலேயே ஒரு ஏற்பாட்டைச் செய்தார்கள்.

நல்லதிலே ஒரு சிறிது கெடுதலும் கலக்காது இருப்பதில்லை. ஆடற்கலை ஒரு பொல்லாத சிருங்கார ரசம் கொண்டது. ஆடுபவள் பத்தினியாயினும் தூய மனதினவளாயினும், அவளது அங்க அவயவ அசைவுகள் மோகமூட்டக் கூடியவை. ஆதலால் அந்தமோகத்தில் ஆண்கள்வசப்பட்டு ஆடுபவர்களை களங்கத்தோடு பார்க்க

நேரிடும்! அதன் விளைவுகள் எதிலே யும் கொண்டு விடுமாதலால் அதைக் குடும்பக்கலை யாக்கவில்லை! ஒரு கலையை வளர்ப்பதற்காக ஓராயிரம் குடும்பத்திலே ஒரு குடும்பத்தை பாரம் பரியாக ஈடுபடுத்தி அக்கலையை வளர்த்து வந்தனர்.

இப்படியாக ஆடற்கலையை வளர்க் கவே பரம்பரை உரிமை கொண்ட தாசிகளை அமர்த்தினர்கள். 'தாசி' என்பதற்கு 'விபசாரி' என்ற அர்த்த மிலலை! 'கடவுளின் காதலி' என்றும் பெருள்படாது! 'தாதை' என்ற ஜதிஸ்வரத்தை கொண்ட சிருங்கார கலையை ஆடுபவர்களாதலால் 'தாசி' என்று சுருங்கச் சொல்லிவந்த முதலி ரண்டு வார்த்தைகள் இழிவான அர்த் தத்திற்கு இழுத்துச் சொல்லப்பட்டு விட்டன!

இன்று பல பிரமுகர்கள் அன்ன தானமிடுவதைக் கேள்விப்படுகிறேம்; பார்க்கிறேம். அந்த அன்ன தானங் கள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு வர் தனது அந்தஸ்தை எதிரொலிக் கச் செய்யும் ஒரு பிரசார சாகச மாகவே அன்னதானக் கைங்கர்யம் புரிந்து வருகிறார்கள்! அதுவும் எப் போதோ ஒரு நாளில்! ஆனல் அந்த நாளிலே 'என்ரே ஒரு நாள் உணவு கிடைக்கும் திட்டத்தை'க் கையாள விரும்பாத உண்மை தர்மிஷ்டர்கள் கோயிலுக்கு நிலதானம் செய்தார் கள். அதிலே விளையும் தான்யங் களைக்கொண்டு தினம் தினம் மூன்று வேளையும் முழுச்சாப்பாடாக முடியா விட்டாலும்கூட ஒரு கவளம் வீத மாவது கொடுத்துவர ஏற்பாடு செய் தார்கள். தனிப்பட்டதொரு தர்ம ஸ்தாபனமாக வைத்தால் அதிலே மாச்சரியம் பல தோன்றலாமெனக் கருதி கோயிலுக்கு நிலபுலன்கள் எழுதி வைத்தார்கள்.

மூக்கால பூஜையை நடைமுறை யாக்கிவைத்ததன் நோக்கம் மூன்று வேளையும் அன்னதானமிடச் செய்யும் திட்டமேயாகும். தலைமுறை தலைமுறையாக ஒரு சத்திரத்தை கோயில் தனக்குள்ளே கொண்டது.

இன்று சுகபோகத்திலிருப்பவர்கள் அறுசுவை உணவு கொழுக்கச் செய்து விட்ட சதையைக் குறைத்துக் கொள்ள டாக்டரிடம் ஓடுகின்றனர். மெலிந்தவர்கள் தன் பலஹீனத்தைச் சொல்லி டாக்டரை நாடுகின்றனர். இன்னும் பலபல புதுப்புது நோய்கள்! நல்ல டாக்டரானல் செலவில்லாத ஒரு வைத்தியம் சொல்லுகிறர். 'காலையி லும் மாலையிலும் தொடர்ந்து ஒரு மைல் நடந்தால் போதும். பிறகு பாருங்கள் உங்கள் உடம்பை' என்கின்றனர். நிஜமாகவே அதை விடச் சிறந்த வைத்தியம் எதுவு மில்லை! 'நோய் வந்த பிறகு இதைச் செய்வதை விட, பழக்கமாகவே கொண்டுவிட்டால் நீடித்த ஆயுளைப் பெறலாம், திடகாத்திரமாக இருக்க லாம்' என்பதைத் தொன்று தொட்டே அறிந்த முன்னவர்கள் நடைமுறை யில் ஒவ்வொருவனும் கைக்கொள் ளும் எண்ணத்தோடு கோயிலைச் சுற்றி மதில் எடுத்து பல பிரகாரம் கட்டி வைத்தனர். தெய்வத்தைப் பிரதக்ஷணம் செய்து வந்தால் புண்ணி யம் என்பதை மனதில் கொண்டு கட்டப்பட்ட பிரகாரமானல் மைல் கணக்கான சுற்று வட்டத்தை எழுப்ப அவசியமில்லை! மேலும் பெரிய பிரகாரமானல் ஒரு முறை சுற்றினல் போதுமென்றும், சிறிய கோவிலானல் நூற்றி எட்டு முறை சுற்றவேண்டும் என்றும் ஏற்படுத்தி யது ஒரு மைல் நடப்பதற்கே யல்லாமல் வேறு பூடகம் எதுவு மில்லை! இப்படியாக கோயில் ஒரு டாக்டரில்லாத வைத்யசாலையாகவும் விளங்கி வந்திருக்கிறது!

தெய்வ சன்னதியில் கடவுள் ரூபத்திலிருக்கும் சிலைகள் வெறும் கற்களால் செதுக்கப்பட்டவையலல. சில சிலைகள் கற்களால் ஆனவை. மற்றவைகளில் பெரும்பகுதி உலோ கக்கலவை. மற்ற கோயில்களில் சித்தர் களால் பிடித்து வைக்கப்பட்ட ஒரு வகை மருந்துக் கலவையால் உரு வாக்கப்பட்ட தெய்வச் சிலைகளும் இருக்கின்றன. இந்த விக்ரகங்களின் மீது அபிஷேகம் செய்கிற நீரில், சிலையிலுள்ள மருந்துகள் கரையக் கூடியவை! அது மூதாதையர் தரும் 'சர்வரோக நிவாரணி' மிக்சர் என்ருல் மிகையாகாது!

வேடிக்கையாக இருக்கும் இது! உண்மையா, இல்லையா என்பது நமது நம்பிக்கையைப் பொருத்ததாகும்.

உதாரணத்திற்கு பழனிமலைக் கோயிலை எடுத்துக் கொள்ளுங்கள். அக்கோயில் தெய்வத்தின்மீது அபிஷேகம் செய்து எடுக்கப்படுகிற பஞ்சாமிர்தத்தில் ஈ மொய்ப்பதில்லை! எறும்புகள் நெருங்குவதில்லை! ஏன்! சிந்திக்க அறிவை ஈடுபடுத்தினுல் 'ஏன்?' என்ற கேள்விக்கு எளிதில் பதில் காணலாம். அபிஷேகம் செய்யப்படுவதற்கு முன் பஞ்சாமிர்தத்தில் மொய்க்கும் ஈ, எறும்பு, அபிஷேகம் செய்யப்பட்ட பிறகு நெருங்கி வருவதில்லை யென்றுல், அந்தப் பஞ்சாமிர்தத்தில் 'ஈக்கள் அண்டாத மருந்து' கலந்து விட்டது என்பது தானே பொருள்? உள்ளபடியே அத்தெய்வத் திருவுரு நவபாஷாணங்களால் ஆன கலவை மருந்தாகும்!

உடலில் உடனடியாகப் பிடிக்கும் மேல்நாட்டு மருந்துகள் ஏதாவது உண்டானுல் அது நவபாஷாணங்களில் ஏதாவது ஒன்றின் கலப்படமில்லாததாக இருக்காது. கொல்லுகிற பாஷாணமே ஓரளவுச் சேர்க்கையில் மருந்தும் ஆகிறது! வைத்தியப் படிப்பில் கரைகண்ட மூதாதையர்கள் அருமருந்தை தெய்வ உருவுடன் கொடுத்திருப்பது மூடச்செயலா?

'அபிஷேக தீர்த்தம் ஒரு அருமருந்து!' என்று மூதாதையர்கள் முட்டாள்தனமாகக் கூறிவைக்கவில்லை. காரணத்தை விளக்காமல் பூடமாகச் செய்துவிட்ட புத்திசாலித்தனத்தின் திரண்ட ஒரு உருவகமே தெய்வச்சிலைகள், கோயில், குளம், மற்றும் அதனுள் அடங்கியுள்ள எல்லாமே! வழிகாட்டியாய் விளங்கி கோயில் என்ற மூன்றே வார்த்தைகளைக் கொண்டு கச்சிதமாக ஒலிக்கும் திருக்கூடம் மனித இனவளர்ச்சி, சுகம், வாழ்வு இம் மூன்றுக்கும் காவியங்களைப் பத்திரப்படுத்திக் கொண்டிருக்கும் 'லைப்ரரி'யாகவும் தென்றல் தரும் 'பார்க்'காகவும், 'மியூசியம்,' 'ரிசர்வாயர்,' கலாமண்டபம், கலை வளர்க்கழகம், ஆஸ்பத்திரி இத்யாதிகளாகவும் விளங்குகின்றன! எந்நாட்டு மூதாதையர்களுக்கும் எட்டாத ஒரு எண்ணக்குவியல் பெற்றது ஒரு உருவுடன்!

வெறும் கோயில்களாக அது இருக்குமேயாயின் அந்தக் கோயிலின் அதிபதிகளுக்குப் பெயர் 'தெய்வப் பிரதிநிதி' என்று பெயர் வழங்கப்பட்டிருக்கும். ஆனுல் மூதாதையர் இட்ட பெயர் 'தர்மகர்த்தா' என்பதை நினைவுபடுத்திக் கொண்டால், கோயிலின் மகிமையை நன்கு உணரலாம்.

இருபதாம் நூற்றுண்டு 'தர்மகர்த்தாக்கள்'—அதாவது அரசினர்—நிர்மாணித்திருக்கும் சோலைகளையும், லைப்ரரிகளையும், ரிசர்வாயர் நிர்வகிப்பையும், மணிக்கூண்டுச் செலவையும் மருத்துவ உதவியையும் நிலை நிறுத்த வரி வசூலித்துக் கண்காணித்து வருகிறுர்கள். ஆனுல் முந்நாளில் கோயிலை நிர்வகித்து வந்த மூதாதையர், யாரையும் கட்டாயப்படுத்தி 'வரி' வசூலிக்கவில்லை! மனமுவந்து கொடுக்கும் எத்தொகையையும் காதும் காதும் வைத்தது போல ஏற்றுக் கொள்ள உண்டியல் பெட்டி வைத்தார்கள். அதில் வந்து குவிந்தது கட்டாயப்படுத்தப்பட்ட வரி அல்ல. கனிவொடு தரும் 'காணிக்கை'கள்! வரியையும் மிஞ்சிய தொரு வசூலைத் தந்தது. அதைக்கொண்டு கோயிலை நிர்வகித்து வந்தனர். 'காசும் பணமும் கொடு என்று கடவுள் கேட்டதா' என்று எகத்தாளம் செய்யவே இடமில்லை!

ஆகக்கூடி கோயிலைக் கட்டி வைத்தனர் ஆன்றோர். நம்மைச் சான்றோனுக்கி குலம் தழைக்க வைக்கவேயல்லாது, குடிகெடுக்க அல்ல! முன்னோர்களின் முதிர்ந்த அறிவையும், தந்து சென்ற தததுவங்களையும் புரிந்து கொண்டு, அதைச் சீரோடு காப்பாற்றி வரப் பின்னடைந்து விட்டோம். அதைப் போன்ற மற்றொரு கலைக் கோபுரத்தை நிர்மாணிக்கவும் திராணியற்று விட்டோம்! ★

கடினமான கல்லும் தேரை வாழ இடமளிக்கிறது. ஆனுல் மென்மையான மனித இதயம் தன் இனத்தையே விழுங்க விரும்புகிறது.

— ராமானந்த தீர்த்தர்

வடமொழி இலக்கியம்

• என்னெஸ்ஸார் •

இந்தியாவில் வழங்கப்பட்டு வரும் மொழிகளுள் மிகப் பழமையானதாகவும் சிறந்ததாகவும் போற்றப்படும் மொழி ஸம்ஸ்க்ருதம் என்பர் பலர். இலக்கணங்கள் குறைபாடின்றி நன்கு அமையப் பெற்றமையின் இதனை ஸம்ஸ்க்ருதமென்று அழைக்கின்றனர். (ஸம் - நன்ருக, க்ருதம்- அமைக்கப்பட்டது). இம்மொழியைக் குறிப்பதற்காக தேவபாஷை என்கிற சொல்லையும் வழங்குகின்றனர். தேவதைகளால் பேசப்படும் மொழியாதலின் தேவபாஷையாயிற்று என்று சிலர் கருதுகின்றனர். மனிதர்களாலும் பேசப்படுதலின் மேற் கூறிய காரணம் எவ்விதம் பொருந்தும் என்ற கேள்வி எழலாம். தேவதைகளைக் குறித்துச் செய்யும் வேள்வி முதலிய செயல்களில் ஸம்ஸ்க்ருத மொழியே உபயோகப்படுதலின் தேவபாஷை என்று வழங்கப்படுகிறது என்று கொள்ளலாம். தெய்வத்தன்மை பொருந்திய பாஷை என்றுங் கொள்ளலாம். இந்தியாவின் வடக்குப் பாகத்தில் வழங்கி வந்ததாகக் கருதி தமிழிலக்கணக்காரர் வடமொழி என்றழைத்தனர். அம்மொழியைப் பேசுவோர் ஒரு தேசத்தில் நிலைத்திராமையால் தேசத்தையொட்டி அதற்குப் பெயர் வரவில்லை யென்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஸம்ஸ்க்ருதம் மிகத் தொன்மை வாய்ந்தது. அது எவ்வாறு எப்பொழுது உண்டாயிற்றென்று மொழிநூல் வல்லோர் பலவாருக ஆராய்ந்தும் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. உலகம் எப்பொழுது எவ்வாறு யாரால் படைக்கப்பட்டது என்பதைப் பற்றி முடிவு ஏற்படும் வரை ஸம்ஸ்க்ருதம் எவ்வாறு உண்டாயிற்று என்பதைப் பற்றி முடிவு ஏற்படாது. ஒரு காலத்தில் அது ராஷ்டிர பாஷையாக வளர்ச்சியுற்றிருந்தது என்பது மாத்திரம் மறுக்க முடியாதது.

தற்போதுள்ள ஸம்ஸ்க்ருத நூல்களிலிருந்து அது வளர்ச்சியுற்ற நிலை நான்கெனக் கொள்ளலாம். வேதங்களில் வழங்கப்பட்ட நிலை ஒன்று. ராமாயண மகாபாரதங்களில் வழங்கப்படும் நிலை இரண்டாவது. இவ்விதிகாசங்களில் வழங்கப்படும் சொற்களையே பாணினியாசிரியர் பாஷா என்றும், பதஞ்சலி முனிவர் லௌகிக சப்தம் என்றும் கூறுவர். அச்சொற்களே பெரும்பாலும் காளிதாஸன் முதலிய மகாகவிகளால் ஆளப்பட்டும் இன்றும் புலவர்களால் பேசப்பட்டும் வருகின்றது. ப்ராக்ருத மொழிகளை மூன்ரும் நிலையிற் கொள்ளலாம். ப்ராகிருத மொழியின் சிதைவான ஹிந்தி முதலிய பாஷைகளை நான்காம் நிலையைச் சார்ந்தனவாகக் கொள்ளலாம்,

ருக்வேதத்தில் பலத் தோத்திரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை தேவதைகளைக் குறித்து மக்களால் வழங்கப்பட்டவை. அவைகளின் அமைப்பை நோக்குங் காலத்து அக்காலத்தில் அது பேச்சு மொழியாக இருந்திருத்தல் கூடுமெனப் புலப்படுகின்றது. பின்னர் அது இலக்கியங்களில் வழங்கப்படுவதாயிற்று. பேச்சு வழக்கில் அதுவே மாறுதலடைதலும் கூடும். ஒரு மொழியைப் பேசுவோர் வேறு நாட்டிற்குச் செல்லுதல். அந்நாட்டின் சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு ஒலிக்கருவி மாறுபடுதல், ஆங்கு வாழும் மக்கள் பேசும் மொழியைத் தாம் கற்றல் முதலிய பல காரணங்களால் பேச்சு மொழி காலக்கிரமத்தில் மாறிக் கொண்டே போகலாம். அவ்வாறு மாறுதலடையும் பொழுது அப்பேச்சு மொழியிலேயே இலக்கியங்கள் இயற்றப்படலாம். ஆகவே ஒவ்வொரு காலத்தில் இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் வேற்றுமைகள் தோன்றுதல் இயல்பே. புலவர்களே ஒரே பொருளுடைய சொற்களை இலக்கியங்களில் ஒருவாருகவும் பேச்சுவழக்கில் ஒருவாருகவும் உபயோகிக்கிருர்கள். பதஞ்சலி முனிவர் மகாபாஷ்யத்தில்—

'பேச்சுவழக்கில் சொற்களைத் தவருக வழங்கினுலும் வேள்வி முதலிய புனிதமான செயல்களில் சொற்களைப் பிறழாமல் உச்சரித்தல் வேண்டும். யர்வாண: தர்வாண: என்று பெயருடைய சில ரிஷிகள் இருந்தார்கள். சிறந்த யோகிகளான அவர்கள் உலகத்தில் பற்றற்றவர்களாய், எங்களுக்கு ஏதாவது வரட்டும், அதைப் பற்றிக் கவலையில்லை என்கிற மன உறுதியுடையவர்களாய் அவ்வுறுதியைப் புலப்படுத்தற்குரிய யத்வா ந: (எதுவாவது எங்களுக்கு) தத்வா ந: (அதுவாவது எங்களுக்கு) என வழங்குதற்குப் பதிலாக யர்வாண: தர்வாண: என்றே கூறி வந்தார்கள். பிறகு அச்சொற்களே அவர்களுக்குப் பெயராயமைந்தன. இவர்கள் உலக வழக்கில் இவ்வாறு கூறினுர்களே யாகிலும் வேள்வியில் ஒருகாலும் சொற்களைத் தவருக உச்சரிக்கமாட்டார்கள். அசுரர்களோ வென்ருல் வேள்வியிலும் தவருகவே உச்சரித்தனர். அதாவது ஹே அரய: (ஓ சத்துருக்களே) என்ற சொல்லை ஹே அலய; என்று தவருகக் கூறினர். எனவே அவர்கள் தாம் செய்த வேள்வியின் பயனை இழந்து அந்த ரிஷிகளால் தோற்கடிககப்பட்டார்கள்'.

வேதம் என்று கூறப்பட்டுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது. இவ்வாறு ஒரே மொழி பலவகையில் மாறுதலடைகின்றது. இம்மாதிரியான மாறுபாட்டின் காரணமாகவே ருக்வேத மொழிக்கும் ராமாயண, மகா பாரதங்களில் வழங்கப்படும் மொழிக்கும் வேற்றுமை காணப்படுகின்றது என உணரலாம்.

உலகத்திலுள்ள நூல்கள் யாவற்றிலும் மிகப் புராதனமானவை வேதங்கள். நம் நாட்டிற்கு ஓர் பெருமை உண்டென்ருல் அது வேதங்கள் காரணமாகவே தோன்றிற்று எனத துணிவாகக் கூறலாம். வேதம் என்ற சொல்லுக்கு அறிவு உண்டாவதற்கு உபாயம் என்று பொருள். அதாவது காட்சி, அனுமானம் முதலிய கருவிகளால் அறிய இயலாத பொருள்களை அறிவிக்கும் ப்ரமாணம் வேதம் என்று கூறப்படும்.

வேதங்களுக்கு மற்ருெரு பெயர் ச்ருதி என்பது. ச்ருதி என்பதற்குக் கேட்கப்படுவது என்று பொருள். வேதங்கள் எக்காலத்திலும் ஆசிரியன் கூற மாணவர்களால் கேடகப்படும் நிலையில் உள்ளனவேயன்றி புதியதாக ஒருவரால் இயற்றப்பட்டன வல்ல என்பது கருத்து. இதை நாம் கவனிக்கவேண்டும். ஒரு நூலை ஒருவர் இயற்றினுல் அந்நூல் இயற்றப் பட்டபிறகே பிறரால் கேட்கப்படுகின்றது. அதற்குமுன்பு அந்நூல் தோன்ருமையினுல கேட்கப்படுவதில்லை. வேதங்களின் நிலை இவ்வாறன்று. இப்பொழுது ஒரு மாணுக்கன் ஆசிரியன் கூற அதைக் கேட்டுத் தானும் எவ்வாறு வேதங்களை ஓதுகின்ருனே அவ்வாறே முற்காலத்து வாழ்ந்தவர்களும் ஆசிரியனுடைய முகத்திலிருந்து ஒலிக்கும் சப்தங்களைக் கேட்டே தாமும் ஓதிவந்தனர். எனவே ராமாயணம் முதலிய நூல்கள் ஓர் ஆசிரியனுல் முதன்முதலாக இயற்றப்பட்டவாறு வேதங்கள் ஒருவரால் இயற்றப்படவில்லை. அக்காலத்தும் கேட்கப்படும் நிலையிலேயே விளங்குந் தன்மைபற்றி ச்ருதி என்கிற சொல்லால் இழைக்கின்றனர்.

விசார நூல் வல்லுநர்கள் ச்ருதி என்ற சொல்லுக்கு வேருெரு கருவியின் உதவியின்றிப பொருளை ஐயமற அறிவிக்குந் தன்மையுடைய சொல எனப் பொருள் கூறினர். நாம் நம்முடைய கண்களினுல் ஒரு பொருளைக் காண்கின்ருேம். கண்களில் ஒருவித தோஷமுமில்லையேல் காணப்படும் பொருள் உண்மையானதா அன்ரு என நமக்கு ஐயமுண்டாவதுல லை. அதற்காக நாம் வேறு கருவியையும் நாடுவதிலலை. அம்மாதிரியே மற்ருெரு கருவியின் உதவியின்றிப் பொருள்களின் உண்மையைப் புலப்படுததுகின்றபடியால் ச்ருதி என்றழைததல சாலப பொருத்தமுடையது.

அனுச்ரவம் என்ற சொல்லும் வேதத்தைக் குறிக்கும். (அனு-பிறகு. ச்ரவம - கேட்டல் என்று பொருள்.) ஆசிரியன் உச்சரித்தபிறகு கேட்கப் படுகின்றமைபற்றி இப்பெயர் வந்தது.

ஆம்னுயம் என்றும் வேதங்களுக்குப் பெயருண்டு. (ஆம்னுயம்-அப்யாசம்.) அதாவது திரும்பத் திரும்ப உச்சரித்

தல். ஆசிரியனிடம் கேட்டபிறகு திரும்பத் திரும்பச் சொல்லி எப்பொழுதும் மறக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் வேதங்களுக்கு இருப்பதால் ஆம்னுய மென வழங்கலாயிற்று.

ஆகமமென்றும் பெயர் உண்டு. (ஆகமம்-வருகை.) தொன்றுதொட்டு ஆசிரியனிடமிருந்து மாணுக்கனுக்கு என்கிற முறையில் வருதல் பற்றி இப்பெயர் வழங்கப்படுகின்றது.

ஒரு பொருளை உள்ளவாறு நிச்சயித்தற்குச் சாதனமாயிருப்பதால் நிகமம் என்பது வேதங்களைக் குறிக்கும். இவ்வாறு அமைந்த பெயர்களையும் அவைகளின் பொருள்களையும் ஆராயுங்கால் வேதங்களின் பெருமையை நன்கு உணரலாம்.

இங்ஙனம் பெருமைவாய்ந்த வேதங்கள் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம்,அதர்வணவேதம் என நான்கு விதமாகப் பிரிக்கப் படுகின்றன. இவ்வேதங்களுக்கு உரை யெழுதியவர்கள் சிறந்தவராக யாவராலும் போற்றப்படும் ஸாயணுசாரியர், யஜுர்வேதத்திற்கு உரையெழுதத் தொடங்கி கூறுவதாவது, 'வேள்வி, ஓமம் முதலிய செயல்களைப்பற்றி யஜுர்வேதத்தில் கூறப்படுகிறது. அவைகளைச் செய்வதற்குரிய மந்திரங்கள் ருக்வேதத்தில் கூறப்படுகின்றன. ஸாமவேதத்தில் தோத்திரங்கள் காணப்படுகின்றன. இவ்வேதங்களுள் சுவர் மாதிரி யஜுர் வேதம். சுவரில் வரையடும் சித்திரங்களைப் போன்றவை ஏனைய இரண்டும். ஆகவே யஜுர் வேதமே சிறந்தது' எனக் கூறுகின்ருர்.

அவ்வாசிரியரே ருக்வேத உரையின் ஆரம்பத்தில்— 'எல்லாவிடங்களிலும் ருக்வேதம், ஸாமவேதம் என்கிற முறையில் ருக்வேதத்தையே முதலிற் கூறுதலாலும், உயர்ந்த பொருளை முதலிற் கூறுதலே மரபாகலானும் ருக்வேதத்திற்கு முதலில் உரைவரைதலே பொருத்தமுடைத்து. புருஷஸூக்தத்தில் 'அந்த வேள்வியிருந்து ருக்வேதமுண்டாயிற்று, ஸாமவேதமுண்டாயிற்று, யஜுர்வேதமுண்டாயிற்று' என ஓதப்படுதலும் இங்கு கவனிக்கத்தக்கது. எல்லா வேதங்களிலும் ஒருபொருளைப்பற்றிக் கூறின பிறகு, சொல்லப்பட்ட விஷயத்தில் நம்பிக்கை உண்டாவதற்காக இவ் விஷயம் இந்த ருக்கினுல் (ருக்-ருக் வேதத்திலுள்ள மந்திரம்) கூறப்படுகிறது என்று ருக்கே உதாரணமாகக் காண்பிக்கப் படுகிறது, ஸாமவேதம் ருக்குக்களைப் பாடலாக அமைக்கின்றது. அதர்வணவேதத்திலும் அநேக ருக்குக்கள் காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு ருக்வேதத்திற்கு மற்ற வேதங்களைக் காட்டிலும் முதன்மையுண்டு'' எனக் கூறுகின்ருர்.

இவர் கூறும் இவ்விரண்டு கூற்றுக்களையும் நோக்குங்கால் இவை முரண்களாகத் தோன்றினுலும் ருக்வேதத்திற்கு முதன்மைபற்றிக் கூறப்பட்ட காரணங்கள் வலிமையுடையன வாகலின் அவ்வாசிரியரும் ருக்வேதத்தின் முதன்மையையே விரும்புகின்ருர் என்பது புலனுகும். மேல்நாட்டு ஆராச்சியாளர்களும் ருக்வேதமே காலத்தால் முந்தியது எனத் தீர்மானித்தனர். ★

சோஷலிஸ்டுகள் அதிக பக்ஷம் 30 ஏக்கர்வரை நிலம் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிருர்கள். ஆனுல் நான் ஒவ்வொருவருக்கும் குறைந்தது எவ்வளவு ஏகர் நிலம் இருக்கவேண்டும் என்பதை முதலில் நிர்ணயிங்கள் என்று சொல்கிறேன். தாகம் உள்ளவனுக்கு தண்ணீர் கேட்க உரிமை யுண்டு. அவ்விதமே உழைக்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் நிலம் கேட்க உரிமை உண்டு.

—விநோபா

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப் படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

'நானே ஏமாந்தேன்'

1952-ம் வருஷக் கோடையில் வட நாட்டில் இலக்கிய யாத்திரை செய்தேன். அம்முறையில் அலஹாபாத் சென்றிருந்தேன். அங்கே வானொலி நிலையத்தில் பிரபல ஹிந்தி கவியான சுமித்ரா நந்தன் பந்த் அவர்கள் முக்கிய அதிகாரியாயிருக்கிறார். அவரைக்காண வானொலி நிலையம் சென்றேன். விசாரணை அதிகாரியிடம் அடையாளம் கேட்டு அதன்படி அவர் அறைக்குச் சென்றேன். அவர் அன்று வரவில்லை. அந்த அறையில் அவர் ஆசனத்துக்கு எதிரே மேஜைக்கு ஒரு புறத்தில் ஒரு கனவான் அமர்ந்திருந்தார். அவரிடம் திரு. பந்த் அவர்களைப்பற்றிச் பேச ஆரம்பித்து இலக்கியத்தைப்பற்றி அரை மணி நேரம் பேசிவிட்டு எழுந்தேன்.

வரும்போது ஒரு ஞாபகம் வந்தது. தென்னாட்டில் ஹிந்தி கற்றுக் கொள்பவர்களுக்கு பிரபலக் கவிகளின் ஹிந்திக் காவியங்களை நன்கு அறிந்து கொள்ள உதவி வருகிறவர் திரு. விசுவம்பர் 'மானவ்' என்று பெயருள்ள ஒரு கவி. அவரும் வானொலி நிலையத்தில்தான் வேலை செய்கிறார் என்று கேள்விப்பட்டிருந்தேன். அவரையும் பார்த்து விடலாமே!

மீண்டும் விசாரணை அதிகாரியிடம் சென்றேன். அவர் என் ஆவலைக் கேட்டு ஆளனுப்பி விசாரித்தார். பிறகு என்னையும 'வாருங்கள்' என்று அழைத்துக்கொண்டு கிளம்பினார். நாங்கள் இருவரும் போனோம்.

எங்கே என்று நினைக்கிறீர்கள்? நான் பேசிவிட்டு வெளியே வந்தேனே, அதே அறைக்குள்தான்.

ஆம், நான் பேசிக்கொண்டிருந்த அந்தக் கனவான்தான் நான் பார்க்க வேண்டும் என்று மிகவும் விருப்பிய திரு. விசுவம்பர் மானவ் என்பவர்கள்.

வாசகர்கள் என் முகம் அப்பொழுது எப்படி இருக்கும் என்று ஊகித்துக் கொண்டிருப்பார்கள்

எப்படியோ சமாளித்துக்கொண்டு மீண்டும் ஒரு அரைமணி நேரம் பேசி விட்டு வந்தேன் என்று மட்டும் சொல்லி விடுகிறேன்.

டி. சேஷாத்திரி,
மதுரை.

ஏமாற்றிய நடிப்பு

நான் கல்லூரியில் மாணவியாக இருந்தபோது, கல்லூரியின் ஆண்டு விழா மிக சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. விழாவில் பெரிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். விழா ஆரம்பித்து சிறிது நேரத்தில் திடீரென ஓர் மாணவி மயக்க முற்று கீழே விழுந்து விட்டாள். உடனே லேடிடாக்டர் ஒருவர் வந்து மயக்கமுற்று கீழே விழுந்தவளை கவனித்தார். விழாவுக்கு தலைமை தாங்கியவர் டாக்டரை வரவேற்று மிக மகிழ்ச்சியோடு "எங்கே பிராக்டீஸ் செய்கிறீர்? என்று கேட்டார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரியில் என்று டாக்டர் ஆங்கிலத்தில் பதில் சொன்

ணர் உடனே மயக்கமுற்றவள் "குப்" என்று சிரித்து விட்டாள். தலைவர் ஆச்சரியத்துடன் என்ன என்று கேட்க, அருகிலிருந்தவர்கள் அவள் ஒரு மாணவி, டாக்டர் அல்ல என்று கூறினர். தலைவரவருக்கும் ஏனை யோருக்கும் அப்போது விஷயம் விளங்கவில்லை. ஏன் தெரியுமா? 'மாறு வேடப் போட்டியில் நான் டாக்ட ராகவும், என் தோழி சரோஜா மயக்க முற்றவளாகவும் நடித்தோம். அதில் முதல் பரிசையும் தட்டிக் கொண்டு போய் விட்டோம். நினைத்தால் இன் றும் சிரிப்புத்தான் வருகிறது.

ஆர். சாந்தகுமாரி,
மாயூரம்.

பலித்த ராசிபலன்

நான் ஒருநாள் வாசக சாலைக்குச் சென்றிருந்தேன். செய்திப் பத்திரி கையில் கணணோட்டம் விட்டேன். "ராசிபலன்" பகுதி அதில் என்னைக் கவர்ந்தது. என் ராசியான "கன்னி" யில் கண்ட பலன் இதுதான். "கார் சவாரி, சுகமான நித்திரை, ஸ்திரீ உபசாரம்." விவாகம் ஆகாத நான் மேற்படி வார பலனைக் கண்டதும் அங்கலாய்த்தேன். என் மனம் புள காங்கிதம் அடைந்தது. உடம்பில் உணர்ச்சி இல்லை. பித்தன்போல் சாலையில் சென்றேன். பின்னல் வந்த காரின் ஹாரன் என் காதில் விழ வில்லை. காரின் சக்கரம் என் காலில் ஏறிவிட்டது. அதில் உள்ள தனவான் என்னைக் காரில் படுக்கவைத்து ஆஸ்பத்திரி கொண்டு சேர்த்தார். அங்கு என்னை மெத்தையில் படுக்க வைத்து சிகிச்சை என்ற உபசாரத்தை நர்ஸ்கள் செய்தார்கள். ராசிபலன் பலித்தது என்று புரிந்துகொண்டேன். சிரிப்பதா? அழுவதா? என்று எனக் குத் தெரியவில்லை.

என். கே. ஸ்ரீனிவாஸன்,
தஞ்சாவூர்.

"ஓர் நொடியில்"

என் தமிழாசிரியருடன் ஒரு தடவை நான் பிரயாணம் செய்தேன். அவரை மாட்டுவண்டியில் அழைத்து வந்தேன். ஏற்கெனவே தாம தம் ஏற்பட்டதால் விரைவாக ஓட்டும் படி வண்டிக்காரனிடம் கூறினேன். அதற்கு அவர் "இதோ ஒரு நொடி யிலே உங்களைச் சேர்த்து விடுகி றேன்" என்று கூறி மாட்டின் வேகத் தைத் துரிதப்படுத்தினன். நாங்கள் சென்ற சாலையில் பள்ளங்களும், மேடுகளும் அதிகம் இருந்தன. வேகமாக ஓடிக் கொண்டிருந்த வண் டியின் சக்கரங்களில் ஒன்று ஒரு பெரிய நொடியில் (பள்ளத்தில்) விழவே வண்டி பக்கவாட்டில் சாய்ந்து விட்டது. பின்புறமிருந்த தமிழாசிரியரும், முன்புறமிருந் வண் டிக்காரரும் வண்டியிலிருந்து குதிக்க நடுவில் உட்கார்ந்து இருந்த நான் வண்டிக்குள்ளேயே அகப்பட்டு அடி படலானேன். ஆனாலும் எனக்கு பலத்த காயம் கிடையாது. வண்டி மேற்கொண்டு செல்ல முடியாதபடி பழுதுபட்டு விட்டது. வண்டிக்காரரி டம் "நீ சொன்னது போலவே ஒரு நொடியில் எங்களைக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டாயே!" என்று கூறி ஒரு ரூபாய் கொடுத்து விட்டு இருவரும் நடந்தே இளங்காட்டை அடைந்தோம்.

கேசவன்,
தஞ்சை.

இப்படியும் நடந்தது!

என் நண்பன் ஒருவனைச் சந்திக் கச் சென்றேன். இரவு நேரம் சைக்கிளில் விளக்கில்லாமல் சென்ற தால் என்னை போலீஸ்காரன் ஒரு வன் தடுத்து ஸ்டேஷனுக்கழைத்துப் போய் வட்டான். நடுக்கத்துடன் சென்ற நான் அங்கு இன்ஸ்பெக்ட ரைக் கண்டதும் திடுககிட்டேன்.

"அடே லோகு! ஏதடா இப்படி திடீர் விஜயம்? நானே உன்னை ஒரு நாள் வந்து பார்க்க வேண்டுமென் றிருந்தேன். இந்த ஸ்டேஷனுக்கு நான் மாற்றலாகி வந்து இரண்டு மாதமாகிறது... ஏனய்யா கான்ஸ்டே பிள்! மரம் மாதிரி நிக்கிறியே. ஒரு நாற்காலி எடுத்துப் போடு. போய் இரண்டு காபி வாங்கி வா...அப்ப டியே நம்ம வீட்டுக்கு ஓடிப் போய் என் நண்பன் லோகு வந்திருக்கி ருன். இரவு இங்கேதான் சாப்பிடு வான் என்று சொல்லிவிட்டு வா" என்று இப்படியாகப் படபடவென்று பொரிந்து தள்ளினன் என் பால்ய நண்பனும் இன்ஸ்பெக்டருமான சாம்பமூர்த்தி.

டி. வி. லோகநாதன்,
துறையூர்.

சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

	ரூ.	அ.	பை
வானவீதி (பாலு)	1	8	0
நக்ஷத்திரமாலை (குண்டூசி)	1	0	0
ராஜா சாண்டோ (ராமநாத்)	2	0	0
மனோரதம் (கே ஸ்ரீ.)	1	4	0
ரேஷன் காலம் (,,)	1	4	0
நினைவு (நாகர்கோவில் மஹாதேவன்)	2	0	0
மீனுவின் பூனைகள் (எஸ். ஓய். சுப்ரமணியம்)	1	4	0
புதுமணத் தம்பதிகள் (இளவேனில்)	2	4	0
நான் டைரக்டரானேன் (கொத்தமங்கலம் சுப்பு)	0	8	0

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
மின்மினி	1	0	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதி மயக்கம்	1	0	0
காதலன் கொலை வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
இரட்டைக் கொலை	1	4	0
மர்மக்கொலை	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

Regd. No. M. 6739 THINGAL Feb. 1956



தமிழ் நாடெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய
தெய்வீகத் தமிழ் நாடகம்

சபரிமலை **ஸ்ரீ ஐயப்பன்**

இப்பொழுது சென்னை ஒற்றைவாடையில்
தினசரி மாலை 6-15, சனிக்கிழமை இரவு 9-30